27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
இணையில்லா முழுமையான காப்புறுதி ஒரு வழியை
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto) காப்புறுதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 27 | பாலம் 08 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 15, 2017

# கனேடிய உள்நாட்டு வர்த்தக உடன்படிக்கை!

ரொறன்ரோவில் 2017 ஏப்பிரல் 7இல் CFTA வெளியிடப்பட்டது. கனேடிய மத்திய அரசு, 10 மாகாணங்களின் அரசுகள் மற்றும் 3 பிரதேசங்களின் அரசுகள் ஆகிய 14 அரசுகளும் சேர்ந்து கனடா என்ற நாடு உருவாகியதில் இருந்து கடந்த 149 வருடங்களாக தம்மி டையே வியாபாரம் சம்பந்தமாக நடந்துவந்த பூசல்களுக்கு (Squabbling) 2017 ஏப்பிரல் 7ஆம் திகதி ஒரு முடிவு கட்டினர்.



இந்த 14 அரசுகளும் சேர்ந்து CFTA என அழைக்கப்படும் ஒரு கனேடிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை (Canadian Free Trade Agreement) 2017 ஏப்பிரல் 7இல் வெளியிட்டனர். இவ்வுடன்படிக்கையின் மூலம் கனேடிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு இடையேயான வர்த்தக ஒழுங்குமுறைத் தடைகள் (Regulatory Bariers) பெரும்பாலான வர்த்தகத்திற்கு நீக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் இந்த 14 அரசுகளுக்கும் இடையே 1995 இல் அமல்படுத்தப்பட்ட AIT எனப்படும் உள்நாட்டு வர்த்தக உடன் படிக்கை (Agreement on Internal Trade) நடைமுறையில் இருந்தது. அவ்வுடன்படிக்கை குறிப்பிட்ட 11 துறைகளில் மட்டுமே அமலாக்கப்பட்டது.

2017 ஏப்பிரல் 7இல் வெளியிடப்பட்ட CFTA இந்த 14 அரசுகளுக்கும் இடையே உள்ள எல்லாவிதமான வர்த்தகத்தையும் உள்ளடக்கி இருந்தாலும், அதற்கும் 144 விதிவிலக்குகள் உள்ளன. இவ் ஒப்பந்தம் 2017 யூலை 1ஆம் திகதி அமலுக்கு வருகிறது.

கனேடிய அரசு ஐரோப்பிய ஒன்றியத்துடன் மேற்கொண்ட CETA எனப்படும் பரந்த பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (Co-prehe nsive Economic and Trade Agreement) 2017 யூலை 1 ஆம் திகதி அமலுக்கு வரும்போது அது இந்த 14 அரசுகளின் வர்த்தகத்தை ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் திறந்துவிடும். அப்போது கனடாவின் இந்த 14 அரசுகளுக்கும் இடையே வர்த்தக ஒழுங்கு முறைத்தடைகள் இருந்தால் அது கனடாவின் ஒரு மாகாணத்தின் பொருளாதாரத் திட்டங்களில் முதலிட ஐரோப்பிய ஒன்றியத்திற்கு கனடாவின் மற் றைய மாகாணங்களைவிட அதிக வாய்ப்புக்களைக் கொடுக்கும். இதனாலேயே CETA அமலுக்கு வரும் 2017 யூலை 1ஆம் திகதியே CFTA உம் அமலுக்கு வருகிறது.

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
416.888.7877
www.divhomes.com

IP GOLDHOUSE 905-554-5890

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
MORTGAGE ALLIANCE
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Buying~Leasing~Renting~Selling
A name you can trust
RUTH VIJENDRAN
Full-Time Sales Representative
416.300.5454
ruthvjhomes@gmail.com
ruthvjhomes.com
LISTING COMMISSION 1%
Home is where your story begins, let me help you get there!!!
HOMELIFE/FUTURE REALTY Inc. Brokerage*

DENTAL OFFICE
இருப்பிடம் 2 இடங்களில்
Dr.Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS(Glasg.)
DENTAL SURGEON
✓Wisdom Tooth Extraction.
✓Root Canal.
✓Gum Treatment.
✓Tooth Filling.
✓Dental Implant.
✓Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

JENA GULASINGHAM
Sales Representative
416.702.2030
jenahomelife@gmail.com
This Special Offer Valid Only This Year
Buy a Home with Me & Listing Commission FREE FREE FREE
HomeLife/Future Realty Inc., Brokerage*


Asking Price
$929,000
21 Schmirler Terrace Morningside,Toronto
✓ 2-Car Private Driveway
✓ Morningside / 401
✓ Finished Basement
✓ 2 Kitchens
✓ Central Air
✓ Full Brick
புதிய வீடு வாங்க விற்க
அழையுங்கள்
647-338-5252
Kaja Sivalingam
Sales Representative
skajaruban@gmail.com
www.facebook.com/condohouse.ca
HomeLife/GTA Realty Inc.*
5215 Finch Ave East, #203 Toronto ON. M1S 0C2
* Independently Owned & Operated


NEW HOMES IN LINDSAY
2 Storey
3BR + 2.5WR
$493,900
Bungaloft
4BR + 2.5WR
$490,900
50' Lots
All Brick
Detached
Bungalow
3BR + 2WR
$570,900
Bungalow
3BR + 2WR
$416,900
Not enough down payment?
Call me First...
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract


Call Pat ... for all your Real Estate needs...
Buy , Sell ,Rental & Leasing
வீடு, வியாபார நிலையம்
வாங்க விற்க...
Pat Murugesu
Sales Representative
Cell: 416-271-7452
pat.murugesu@gmail.com
www.hlgtarealty.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East, #203 Toronto ON M1S 0C2
Independently Owned & Operated

# கனேடிய....

## 01ஆம் பக்கத்தொடர்ச்சி

கனடாவின் இந்த 14 அரசுகளுக்கும் இடையே ஒரு கனேடிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை கொண்டு வருவதற்காக நடை-பெற்ற பேச்சுவார்த்தைகளை ஒன்ராரியோ மாகாணத்தின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கான அமைச்சர் Brad Duguid தலைமை தாங்கி நடத்தினார்.

Brad Duguid ஊடகவியலாளர்களுக்கு 2017 ஏப்பிரல் 7இல் தெரிவிக்கையில் CFTA போன்று ஓர் உடன்படிக்கையை நாம் உருவாக்காமல் விட்டிருந்தோமானால் அது கனேடியப் பொருளாதார சந்தையில் ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்களுக்கு மற்றைய மாகாணங்களில் உள்ள கனேடிய நிறுவனங்களுக்குக் கிடைக்காத ஒரு வாய்ப்பான சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கும். அது சரியானதாக எமக்குத் தென்படவில்லை என்றார்.

கனேடிய மத்திய அரசைச்சேர்ந்த புதிய கண்டுபிடிப்புகள், விஞ்ஞானம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான அமைச்சர் Navdeep Bains ஊடகவியலாளர்களுக்கு 2017 ஏப்பிரல் 7இல் தெரிவிக்கையில் அடுத்த 10 ஆண்டுகளில் நாம் கனேடிய உள்கட்டமைப்புப் பணிகளில் $180 பில்லியனை முதலிட உள்ளோம். இதற்கான கொள்முதல் கேள்விப்பத்திரங்களில் கனடா முழுவதிலும் உள்ள கனேடிய நிறுவனங்களின் வாய்ப்பை வலுப்படுத்த CFTA ஒப்பந்தம் உதவும் என்றார்.

CFTA ஒப்பந்தம் பற்றி National Post ஊடகம் கருத்துத் தெரிவிக்கையில் இவ் ஒப்பந்தம் கனேடியப் பொருளாதாரத்தில் வருடம் ஒன்றுக்கு $25 பில்லியனை மேலதிகமாக சேர்க்கும் என்கிறது.

OCC எனப்படும் ஒன்ராரியோ வர்த்தக சம்மேளனம் (Ontario Chamber of Commerce) கடந்த பல வருடங்களாக இப்படி ஒரு ஒப்பந்தம் கனேடிய மாகாணங்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தது.

கனடாவின் மொத்த பொருளாதார உற்பத்தியான (GDP) $385 பில்லியனில் 20 வீதம் மாகாணங்களுக்கு இடையே நடைபெறுகின்றன. இவ்வாறான ஒப்பந்தம் ஒன்ராரியோ



மாகாண வர்த்தகர்கள் மற்றைய மாகாணங்களின் பொருளாதார சந்தையில் போட்டியிட வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என OCC தெரிவித்துள்ளது.




### CFTA இல் இருக்கும் முக்கிய நன்மைகள்.

• கனேடிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கும் இடையில் தற்போது இருக்கும் எண்ணற்ற வர்த்தக ஒழுங்குமுறைத்தடைகள் நீக்கும் ஒரு முறைசார்ந்த பிணைப்பு முறையை (Formal Binding Process) உருவாக்குதல்

• ஐரோப்பிய ஒன்றியம் போன்ற வெளிநாடுகளுக்கு கனேடிய பொருளாதார சந்தையில் போட்டியிடக் கிடைக்கும் வாய்ப்பிற்கு சமனான அல்லது மேலதிகமான வாய்ப்பை-கனேடிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கும் ஏற்படுத்துதல்.

• கனேடிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு இடையே ஏற்படும் வர்த்தகச் சர்ச்சைகள் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்து வைக்க இலகுவானதும் துரிதமானதுமான ஒரு பொறிமுறையை ஏற்படுத்துதல்.

• இவ்வுடன்படிக்கையில் பங்குபற்றும் 14 அரசுகளுக்கும் தேவை ஏற்பட்டால் இவ்வுடன்படிக்கையில் இருந்து விலகுவதற்கும் இவ் உடன்படிக்கையில் வழிவகுக்கப்பட்டுள்ளது.

இந்த CFTA உடன்படிக்கையில் மதுபான வகைகளுக்கான மாகாண எல்லை தாண்டிய வர்த்தகம் சேர்க்கப்படவில்லை. மதுபான உற்பத்தி நிறுவனங்கள் விரும்பினாலும் மாகாண அரசுகள் மதுபான வியாபாரத்தை

(தொடர்ச்சி 07 ஆம் பக்கம்...)



# "இலங்கை தமிழரையிட்டு நான் மிகவும் பெருமை அடைகிறேன்!" - ரொறன்ரோ மேயர்

**வீரகேசரி மூர்த்தி**

"வணக்கம்! ரொறன்ரோ மாநகர சபைத் தலைவர் பதவிக்கான தேர்தலின் போதும் அதற்கு முன்னரும் இங்கு கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர்களுடன் நான் மிகவும் நெருங்கிப் பழகினேன். அக்கால கட்டத்தில் இலங்கையின் வட பகுதியில் ஏற்பட்ட அரசியல் ரீதியான கொடுமைகள் அவர்களது மனதை மிகவும் பாதித்திருந்தது. இலங்கைத் தமிழ் மக்கள் கல்வி கற்றவர்கள், கடின உழைப்பாளிகள், நிபுணத்துவம் வாய்ந்த தொழில் அதிபர்கள். இங்கு வர்த்தக நிலையங்களையும், தொழிற்சாலைகளையும் நிறுவி அநேகருக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளனர். அத்துடன் "Chamber of Commerce" என்ற வர்த்தகர்களின் தொழிற் சங்கத்தினையும் நடத்தி வருகின்றனர். அவர்களையிட்டு நான் மிகவும் பெருமைப் படுகின்றேன். தேர்தலில் நான் வெற்றி பெற்று மேயராக வந்தால் ஸ்ரீலங்காவுக்கு பயணம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்து இயன்றளவு உதவிகளை செய்வேன் என உறுதியளித்திருந்தேன். அது மாத்திரமன்றி இலங்கைத் தமிழரான நீதன் சானும் அண்மையில் ரொறன்ரோ மாநகர சபையின் முதலாவது தமிழ் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அதனால் நாங்கள் இருவரும் மற்றும் சிலரும் அண்மையில் ஸ்ரீலங்காவுக்கும், இந்தியா வுக்கும் சென்று வந்தோம்".




கடந்த மாத நடுப் பகுதியில் பத்து நாள் பயணம் ஒன்றினை மேற்கொண்டு ஸ்ரீலங்காவுக்கும், இந்தியாவுக்கும் சென்று திரும்பிய மேயர் இம்மாதம் ஏழாம் திகதி யன்று மாலை ஸ்காபுறோ சிவிக் சென்ரர் நிலையத்தில் அது சம்பந்தமான கூட்டம் ஒன்றினை நடத்தினார். பெருந்திரளான மக்களும், ஊடகத்தினரும் கலந்து கொண்டிருந்த இக்கூட்டத்தில் உரையாற்றிய போதே மேயர் ஜோன் ரோறி இவ்வாறு கூறினார். இக்கூட்டத்தில் அவருடன் ஸ்ரீலங்காவுக்கு சென்று திரும்பிய நீதன் சான், ரொறன்ரோ மாநகர சபையின் அபிவிருத்தி அதிகாரி மைக்கல் தொம்சன் மற்றும் றூஜ் றிவர் தொகுதி எம். பி. ஹரி ஆனந்தசங்கரி, மார்க்கம் மாநகர சபை உறுப்பினர் லோகன் கணபதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேயர் தொடர்ந்து உரையாற்றியபோது, "ஸ்ரீலங்கா மிக அழகான நாடு ஆனால் அங்கு வாழும் தமிழ் மக்களின் துயரங்களை நான் நேரில் அவதானித்தேன். வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கௌரவமானர், திறமைசாலி. அவரும் நானும் கிளிநொச்சி முள்ளி வாய்க்காலில் உள்ள உயிர் நீத்தோருக்கான நினைவிடத்தில் தீபம் ஏற்றி, மலர் வளையங்களும் சாத்தி அஞ்சலி செய்தோம். அவருடன் மோட்டார் வாகனத்தில் பயணம் செய்த போது உரையாடியபோது மேலும் பல விடயங்களை நான் தெரிந்து கொண்டேன். வடபகுதியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டு அவற்றில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் தமது காணிகளை பறி கொடுத்த தமிழ் மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளையும் இழந்துள்ளனர். பெற்றோர்களிடம் இருந்து பிள்ளைகள் வலுக் கட்டாயமாக பிரித்து எடுத்துச் செல்லப்பட்டதாகவும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி பெற்றோர்கள் அறிந்து கொள்ளமுடியாத நிலையில் இருப்பதையும் கேட்டறிந்தேன். நான் ஒரு தந்தை என்ற ரீதியிலும், தாத்தா என்ற ரீதியிலும் அவர்களது துன்பத்தை நன்கு உணர்ந்து கொண்டேன்.

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)




அம்மா
நகை அடைவு மாடம்



AMMA PAWN BROKER
வர்த்தகத்துறையில் நீண்டகால முன்னோடிகளான அம்மா நகைமாடத்தின் சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டியுடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்

2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர அன் கோவுக்கு அருகில்)
416-757-0034
416-994-3861
Downtown: 416-921-0034
ammapawnbroker@gmail.com

1.5%
முதல்
2%
$1000ற்கு
மாதம்
$20 மட்டுமே
(Month)

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

அம்மாவுக்கு நிகரான சேவை
அம்மா நகை அடைவுமாடமே

உங்கள் பழைய நகைகளை நியாயமான விலையில் வாங்கலாம்/விற்கலாம்

அரச அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000*
Everyone Who Funds A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

வோக் இன்
சனி 9.00 - 5.00 மணிவரை

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

Cell : 416-624-4843

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# தமிழ் மக்களுக்கும் மேலும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் கருத்துக்கள்!

-விகிர்தன்

‘நல்லாட்சி’ அரசாங்கத்தினால் தற்போது வெளியிடப்பட்டு வரும் கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தி வருகின்றது. போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள்வரை அண்மைய நாட்களாக வெளியிட்டு வரும் கருத்துக்கள் இந்நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களில் முக்கியமானதாக உள்ள ஒன்றுதான் போர்க் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது. சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பு அதுதான். குற்றங்கள் தமிழ் மக்களுக்கு மேலும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் கருத்துக்கள்! ‘நல்லாட்சி’ அரசாங்கத்தினால் தற்போது வெளியிடப்பட்டு வரும் கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தி வருகின்றது. போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள் வரை அண்மைய நாட்களாக வெளியிட்டு வரும் கருத்துக்கள் இந்நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களில் முக்கியமானதாக உள்ள ஒன்றுதான் போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது. சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பு அதுதான். குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். இவ்வாறான நடவடிக்கை மூலமாகவே நம்பிக்கையும் நல்லிணக்கமும் ஏற்படும் என்பதே சர்வதேச சமூகத்தின் கருத்தாகவு ள்ளது. சகலவற்றையும் மூடி மறைத்துவிட்டு நல்லிணக்கம் குறித்து பேசுவதானது அர்த் தமற்றதாகும்.

ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் மனித உரிமைகள் ஆணையாளராலும், ஏனைய நாடுகளின் பிரதிநிதிகள், மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் முதலானவர்களும் இதனையே வலியுறுத்திக் கூறியிருந்தனர். பொறுப்புக் கூறலுக்கு இரண்டு வருடங்கள் கால அவகாசம் கோரிய அரசாங்கம் அது கிடைக்கப்பெற்றவுடன் தற்போது வேறு தொனியில் கருத்துக்களை வெளியிடுவதாகவே தெரிகின்றது. போரை வெற்றிகொண்ட படையினரை குற்றவாளிகளாக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மைய நாட்களாக தெரிவித்து வருகின்றார்.

போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளுக்காக இலங்கைக்கு ஐ.நா இரண்டு வருட கால அவகாசத்தை வழங்கியுள்ள நிலையில், குறித்த இரு வருட காலப்பகுதிக்குள் இவற்றையெல்லாம் நிறைவேற்றுவோம் என வாக்குறுதி அளித்து கால அவகாசத்தை



**போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமளிக்கப் பட மாட்டாது என்று கூறிவந்த ஜனாதிபதி படையினரை குற்றவாளிகளாக்க முடியாது எனக் கூறியிருப்பது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

பெறவில்லை என வெளிவிவகார பிரதியமைச்சரான கலாநிதி ஹர்ஷ் டி சில்வா தெரிவித்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. "ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் வெளியிட்ட அறிக்கையை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை முதலில் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். அறிக்கை வேறு. தீர்மானம் வேறு. அறிக்கைகளால் எதுவும் செய்ய முடியாது. சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை என்று ஜனாதிபதியும், பிரதமரும் தெளிவாக அறிவித்துள்ளனர்" என அவர் தெரிவித்திருக்கின்றார். "நாம் ஒரு போதும் படையினரைக் காட்டிக் கொடு க்க மாட்டோம்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"யுத்தக் குற்றங்கள் எவையும் இழைக்கப் படவில்லை. அதனால் யுத்தக் குற்ற விசாரணைகளும் தேவையில்லை" என சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். அதுவும், யாழ்ப்பாணத்தில் வைத்து அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

யுத்தக் குற்ற விசாரணைகள் என்கின்ற போது தமிழீழ விடுதலைப் புலிகளினால் இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள் தொடர்பில் யார் விசாரணைகளை மேற்கொள்வது? என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தும்போது படையினர், விடுதலைப்புலிகள் என இருதரப்பினர் மேற்கொண்டவற்றையும் கருத் தில் கொள்வதில் தவறில்லை. இதனை ஏற் கனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால், குற்றங்க ளுக்கு பொறுப்புக்கூற விடுதலைப்புலிகள் அமைப்பு இப்போது இல்லை. எனவே, அர சாங்கமும் அதன் படைகளும் பொறுப்புக் கூற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அதுமட்டுமன்றி விடுதலைப்புலிகளை அர சாங்கம் பயங்கரவாதிகள் என்று குறிப்பிடும் நிலையில் விடுதலைப்புலிகள் தவறு செய்திருந்தாலும் அதற்கு பொறுப்புக் கூறும்படி கோர இயலாது. பொறுப்புள்ள நாடு, அரசு, அரச படைகள் என்ற வகையில் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும். இதனை அறியாதது போன்று பொறுப்புள்ள அரசாங்கத்தின் தரப்பினர் கருத்துக்களை வெளியிடுவது தவறானது. அமைச்சர் ராஜித பின்னர் அவர் கூறியதை மறுத்துள்ளார். படையினர் குற்றமிழைக்கவில்லை எனத் தான் கூறவில்லை எனவும் ஊடகங்கள் தனது கருத்தை திரித்துக் கூறிவிட்டன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மற்றும், சில மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஆளும் தரப்பினர் இவ்வாறான கருத்துக்களை சிங்கள மக்களை திருப்திப்படுத்தும் விதத்தில் வெளியிட்டு வருகின்றமையினையும் புரிந்து கொள்ள முடிகின்றது. அரசாங்கம் முன்னெடுக்க நினைக்கும் அனைத்து விடயங்களையும் நாட்டிற்கு விரோதமானதெனவும், சிங்கள மக்களுக்கு எதிரானதெனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ மற்றும் அவரது ஆதரவு அணியினர் கடும் பரப்புரை செய்துவரும் நிலையில், அதனை சமாளிக்கும் வகையில் அரசாங்கத் தரப்பினர் கருத்துக்களை வெளியிடுகின்றனர். இப்போது, மைத்திரி - ரணில் தலைமையிலான இந்த அரசாங்கம் ஒரு சிக்கலான நிலையிலுள்ளது என்பதை ஏற்றுக் கொண்டாலும், பொறுப்புக் கூறும் விடயங்களை தட்டிக்கழிப்பதை தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள். இன்றுவரை காணாமல்போன தங்கள் உறவுகளுக்காகவும், சிறைகளிலுள்ள தங்கள் உறவுகளுக்காகவும் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பவர்கள். பெரும்பான்மை மக்களை திருப்திப்படுத்துவதற்காகவும் அவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவும் வாக்குறுதிகளை காற்றில் பறக்க விடுவதை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது.

புதிய அரசியலமைப்பு உள்ளிட்ட அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் தமிழ் மக்கள் மத்தியில் தெரிவித்து வரும் கருத்துக்களுக்கும் அரச தரப்பினரின் கருத்துக்கள் சிக்கலை ஏற்படுத்தி வருகின்றது.

ஐ.நா. தீர்மானத்திற்கு முரணான வகையில் அரச தரப்பினர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் எனவும், இதற்கு நாடாளுமன்றில் பதில் வழங்கவுள்ளதாகவும் தற்போது சம்பந்தன் கூறி வருகின்றார். இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், எதிரணியினரால் தொடர்ந்து அச்சுறுத்தல்களையே எதிர்கொண்டு வருகின்றது. மஹிந்த தலைமையிலான எதிரணி அரசாங்கத்தை கவிழ்க்கப் போவதாக சவால் விடுத்து வருகின்ற நிலையில், அதற்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றியே தினமும் அரசாங்கம் சிந்தித்து வருவதாகத் தெரிகின்றது.

(தொடர்ச்சி 07 ஆம் பக்கம்...)


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm

Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# புதிய $10 நினைவுப் பணத்தாள்

கனடாவின் 150 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் முகமாக கனேடிய வங்கி நிறுவனம் ஒரு புதிய $10 நினைவுப் பணத் தாளை (Commemorative Banknote) வெளியிட்டுள்ளது. இவ்வாறு நினைவுப் பணத்தாள் கனேடிய சரித்திரத்தில் நான்கு முறை மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது.

முதலாவதாக 1935 மே 6இல் George V மன்னனின் வெள்ளி விழாவை முன்னிட்டு $25 நினைவுப் பணத்தாள் வெளியிடப்பட்டது. பின்னர் கனடாவின் 100ஆவது பிறந்த தினக்கொண்டாட்டத்தைமுன்னிட்டு 1967 இல் புதிய $1 நினைவுப் பணத்தாள் வெளியிடப்பட்டது. மூன்றாவது முறையாக எலிசபெத் II மகாராணியின் நீண்டகால முடியுரிமையைக் கொண்டாடுமுகமாக 2015 செப்ரெம்பர் 9இல் புதிய $20 நினைவுப் பணத்தாள் வெளியிடப்பட்டது.



தற்போது கனடாவின் 150ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு நான்காவது தடவையாக வெளியிடப்படும் நினைவுப் பணத்தாள் 2017 யூன் 1ஆம் திகதி புழக்கத்திற்கு வெளிவர உள்ளது. இதில் கனடாவின் முதலாவது பிரதமர் Sir John A. Macdonald, கனேடிய கூட்டாச்சிமுறை மற்றும் கூட்டமைப்பின் (Confederation) காரணகர்த்தாவான Sir George - Etienne Cartier, பெண்களின் சமவுரிமை மற்றும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்தவரும் கனடாவின் முதலாவது தெரிவு செய்யப்பட்ட பெண் நாடாளுமன்ற உறு ப்பினருமான Agnes Macphail மற்றும் கனேடிய முதற்குடிமக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தவரும், கனடாவின் முதலாவது முதற்குடிமக்களின் மேற்சபை (Senator) உறுப்பினருமான Kainai முதற்குடி இனத்தைத் சேர்ந்த முதற்குடிமகன் James Gladstone (Aka y- na -nuka) ஆகிய நால்வரது படங்களும் உள்ளன.

இவற்றைவிட பல விடயங்கள் இந்த நினைவுப் பணத்தாளில் உள்ளன. அவையாவன:

• கனடாவின் மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களின் பெயர்களும் அவை கனேடிய கூட்டமைப்பில் சேர்ந்த ஆண்டும்.
• கனேடிய நாடாளுமன்ற அமைதிக் கோபுரத்தின் நினைவு வளைவு. இது முதலாவது உலகப் போரில் மடிந்த கனேடிய இராணுவ வீரர்களை நினைவு கூர 1927 இல் அர்ப்பணிக்கப்பட்டது.
• கனேடிய நாடாளுமன்றத்தின் நடுமண்டபம் (Centre Block).
• பிரிட்டிஷ்கொலம்பியா மாகாணத்தில் உள்ள Capilano ஏரியும் இரு சகோதரிகள் என அழைக்கப்படும் மலைத்தொடரும்.
• சஸ்கச்சுவான் மாகாணத்தில் உள்ள ஒரு தோட்டத்தில் இருக்கும் முதிர்ந்த கோதுமைக்கதிர்கள்.
• குவிபெக் மாகாணத்தில் உள்ள Kipawa ஆறும் கனேடியக் கேடயம் (Canadian-Shield) எனப்படும் கனேடியப் பரப்பளவில் அரைவாசிக்கு மேற்பட்ட இடங்களில் பரவியிருக்கும் பாறைகள்.



கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை .

•அத்திலாந்திக் மாகாணத்தின் கற்பாறைகள் நிறைந்த கடற்கரையான Cape Bonavista.
• கனடாவின் வடக்கின் Woodbuffalo பூங்காவில் விண்வெளியில் தெரியும் நடனமாடும் வடக்கு விளக்குகள் (Northern Lights Dance).
• Metis முதற்குடி மக்களின் கலாசாரத்தை குறிக்கும் அம்பு வடிவ (Arrow Sash) பட்டைகளைக் குறிக்கும் வடிவம் (Pattern).
• Kenojuak Ashevak முதற்குடிமகனின் கலை அமைப்பான ஆந்தையின் மாலர்க் கொத்து.
• ஒன்றை ஒன்று காம்பில் தொடுக்கப் பட்டுள்ள 13 மேப்பிள் இலைகள். இவை கனடாவின் 10 மாகாணங்களையும் மூன்று பிரதேசங்களையும் குறிக்கின்றன.
• கனடாவின் தேசியக்கொடி. இது ஒளிபுகக் கூடிய இடத்தில் பதியப்பட்டுள்ளபடியால் இரண்டு பக்கத்தாலும் பார்த்து வாசிக்க வழிவகுப்பதற்காக Canada என இரண்டு முறை எழுதப்பட்டுள்ளது.
• கனேடிய அரசாங்கச் சின்னம் (Coat of Arms)

இந்த $10 நினைவுப் பணத்தாள் 40 மில்லியன் அச்சடிக்கப்பட உள்ளது. கனேடிய வங்கி ஆளுனர் Stephen Poloz இப்புதிய நினைவுப் பணத்தாள் பற்றி ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் கனேடிய மக்கள் ஒவ்வொருவர் கையிலும் ஒரு நினைவுப் பணத்தாள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே 40 மில்லியன் நினைவுப் பணத்தாள் அச்சடிக்கப்பட உள்ளது என்றார்.

## தமிழ்......

06 ஆம் பக்கத்தொடர்ச்சி

மஹிந்த அரசாங்கத்தை வீழ்த்தும் பரப்புரை யின்போது அவர்கள் மேற்கொண்ட பாரிய ஊழல் மோசடிகள் குறித்து பேசப்பட்டது. பின்னர் அவர்கள் மீதான விசாரணைகள் தொடர்ந்தாலும் எதனையும் ஆதாரங்களு டன் நிருபிக்க முடியாத நிலை உள்ளதால் குற்றச்சாட்டுக்கள் பிசுபிசுத்து விட்ட நிலையே ஏற்பட்டுள்ளது. இதுவும் மஹிந்த தரப் பினருக்கு மக்கள் செல்வாக்கு மீண்டும் அதிகரிக்க வாய்ப்பினை ஏற்படுத்தியுள் ளது. மஹிந்த கூறும் நாட்டின் இறைமை க்கு பாதிப்பு, படையினர் காட்டிக் கொடுக் கப்படும் நிலைமை, பௌத்த மதத்திற்கும், சிங்கள மக்களுக்கும் ஆபத்து ஏற்படப் போகின்றது போன்ற கருத்துக்களை சாதா ரண சிங்கள மக்கள் நம்பும் நிலைக்கு வந்துள்ளனர். இவற்றையெல்லாம் எதிர் கொள்ள வேண்டியிருப்பதால் அதற்கேற்ற வாறு பதில் பரப்புரையை மேற்கொள்ள வேண்டிய அவசியம் அரசாங்கத் தரப்பின ருக்கு உள்ளது. இந்த குழப்பமான சூழ்நி லையில், அரசாங்கம் தற்போது மேற்படி கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது. ஆனாலும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களுக்கு நடந்த கொடுமைகளுக்கான பொறுப்புக் கூறலையே அரசாங்கத்திடம் எதிர்பார்க்கின்றனர்.

## கனேடிய....

03ஆம் பக்கத்தொடர்ச்சி

மாகாண எல்லைக்குள் வைத்திருக்கவே விரும்புகின்றன. இதனால் மதுபான-



வகைகளின் வர்க்கத்தை CFTA உடன்படிக் கைக்குள் கொண்டுவருவது பற்றி ஆராய் ந்து ஒரு வருட காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க ஒரு பணிக்குழு (Working Group) அமைக்கப்பட்டுள்ளது.

மாகாண எல்லை தாண்டிய நிதிச் சேவைகளும் இந்த CFTA உடன்படிக்கையில் உள் ளடக்கப்படவில்லை. காப்பீடு (Insurance) மற்றும் கடன் சங்கங்கள் (Credit Unions) போன்ற நிதிச்சேவைகள் குறிப்பிட்ட மாகாண எல்லைக்குள்ளேயே நடைபெறும். இவ்வா றான நிதிச்சேவைகளின் வர்த்தகத்தை CFTA உடன்படிக்கைக்குள் கொண்டு வருவது பற்றி அடுத்த ஆறு மாதகாலத்திற் குள் இவ் அரசுகள் கூடிக் கதைப்பது எனத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

LOANS & MORTGAGES.... that meets your needs
$5,000...$35,000...$50,000...$100,000...1Million...
- Commercial Mortgages.
- 2nd Mortgages.
- Construction Mortgages.
- Secured Credit line.
- Unsecured Loans.
MORTGAGE ALLIANCE
Corporate Office:
2005 Sheppard Ave E.
Suite 200, Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages


# கொதிக்கும் தமிழகம் வெடிக்கும் போராட்டங்கள்

-சிவதாணு -

கோடை வெயிலைவிட இப்போது தமிழகத்தை அதிக கொதி நிலையில் வைத்திருப்பது போராட்டங்கள்தான். இந்தியாவில் தமிழகம் முழுவதும், ஒவ்வொரு வட்டாரப் பகுதியும் கடந்த இரண்டு மாதங்களாக ஏதாவது ஒரு போராட்டத்தால் கொதித்துக் கொண்டிருக்கிறது. ஒரு பக் கம், காவிரியில் தண்ணீர் வேண்டும் என்று டெல்டா பகுதி முழுக்க விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் இன்னொரு பக்கம், அரசு மதுபானக் கடை தண்ணீரே வேண்டாம் என்று தமிழகம் முழுக்க பெண்கள் வீதிக்கு வந்து போராடுகிறார்கள். இந்த இரண்டு களங்களிலும் கலந்துகொள்ளாதவர்களை வரலாறு காணாத வறட்சி காலிக் குடங்களுடன் வீதியில் போராட வைத்திருக்கிறது. காவல்துறையோ, இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவாக மாணவர்கள் மீண்டும் கூடிவிடுவார்களோ என ஒவ்வொரு ஊரிலும் ஜல்லிக்கட்டு போராட்டக் களங்களை இரவு பகலாக காவல் காக்கிறது. தமிழகத்தின் இந்த திடீர் எழுச்சிக்கு என்ன காரணம்? ஓர் அலசல்.

## அதிர்ச்சியளித்த நிர்வாணப் போராட்டம்

இந்தியாவில் கர்நாடகா, தமிழக மாநிலங்கள் இடையே வருடக் கணக்காக தொடரும் காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான பிரச்னை உச்ச நீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னரும் தீர்ந்தபாடில்லை. நீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்ற வேண்டிய இடத்தில் இருக்கும் மத்திய பாஜக அரசோ, கர்நாடகாவில் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலை மனதில் வைத்து தமிழகத்தின் நியாயத்தைப் புறக்கணித்து வருகிறது. இந்நிலையில் இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என கடந்த ஒரு மாதமாக டெல்லி ஜந்தர் மந்தரில் போராடி வருகிறார்கள் தமிழக விவசாயிகள்.




தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்கத்தின் நிறுவனர் அய்யாகண்ணு தலைமையில் நடைபெறும் தமிழக விவசாயிகளின் டில்லி போராட்டத்துக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. மட்டுமல்லாமல் மற்ற மாநில விவசாயிகளும் நேரில் வந்து ஆதரவு தெரிவித்துள்ளார்கள். மத்திய அரசின் முக்கிய அமைச்சர்கள் எல்லோரயும் சென்று போராட்டக்காரர்களும் சந்தித்து பேசி விட்டார்கள். ஆனாலும், தமிழக விவசாயிகள் கோரிக்கைகளுக்கு எந்தத் தீர்வும் இதுவரை கிடைக்கவில்லை. இந்நிலையில் கடந்த ஏப்ரல் 10ஆம் தேதி, போராட்டக் குழுவினரிடம் பிரதமரை சந்திக்க அழைத்துசெல்கிறோம் என்று கூறி, பிரதமர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றனர் டெல்லி காவல்துறையினர். ஆனால், அங்கு கோரிக்கை மனுவை மட்டும் ஏற்றுக்கொண்ட பிரதமர் அலுவலக அதிகாரிகள் விவசாயிகளைத் திரும்பிபோகச் சொல்லிவிட்டார்கள். இதனால் மனமுடைந்த தமிழக விவசாயிகள் நிர்வாணமாக பிரதமர் அலுவலக வீதிகளில் விழுந்து புரண்டு போராட்டம் செய்தனர். நிர்வாணமாக ஓடிய தமிழக விவசாயிகளின் கூக்குரல் காட்சிகள் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழக விவசாயிகளை பிரதமர் சந்திக்காமல் தவிர்த்து, அவர்களை நிர்வாணமாகப் போராட வைத்திருப்பது நாட்டின் தேசிய அவமானம் என எல்லா மாநில விவசாயிகளும் கொதிக்கிறார்கள்.

## தஞ்சை தொடர் போராட்டம்

டெல்லியில் போராடி வரும் தமிழக விவசாயிகளை இந்தியப் பிரதமர் சந்திக்காதது மற்றும் மத்திய அரசின் பாராமுகத்துக்கு சற்றும் குறைவில்லாமல் இருக்கிறது தமிழகத்தை ஆட்சி செய்து வரும் அதிமுக (சசிகலா அணி) அரசின் மெத்தனம். பதினைந்து நாட்களுக்கும் மேலாக தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்பு தொடர் காத்திருப்பு போராட்டத்தில் டெல்டா விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர் விவசாயிகள். இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டிருக்கின்றனர். தமிழகம் முழுவதிலும் இருந்து விவசாயிகள் சாரை சாரையாக வந்து இந்தப் போராட்டத்தில் இணைகிறார்கள். ஆனால், இதுவரை தமிழகத்தின் விவசாயத்துறை அமைச்சர் இவர்களை சந்திக்கவில்லை. இத்தனைக்கும் விவசாயத்துறை அமைச்சர் துரைக்கண்ணு தஞ்சையை சேர்ந்தவர்! “தமிழகத்தில் கடும் வறட்சி தாண்டவம் ஆடுகிறது. பயிர்கள் கருகி வாழ்வாதாரம் அற்றுப்போய் விவசாயிகள் மாண்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்நிலையில், வறட்சி நிவாரணத் தொகையும் வறட்சியே வராமல் இருக்க காவிரியில் உரிய நீதியும் தந்து அரவணைக்க வேண்டிய மத்திய அரசோ எங்கள் நிலங்களை பிடுங்கி, தனியார் நிறுவனங்களுக்கு தாரைவார்த்து ஹைட்ரோ கார்பன் எடுக்க முயற்சிக்கிறது.




காவிரி மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க வேண்டும், காவிரி டெல்டாவை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கவேண்டும், சிறுகுறு விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்னிறுத்தி போராடி வருகிறோம். எங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை போராட்டம் தொடரும்” என்கிறார் தஞ்சை போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளரும் காவிரி உரிமை மீட்புக்குழுவின் தலைவருமான பெ. மணியரசன்.

## மீண்டும் நெடுவாசலில் போராட்டம்

புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் பகுதியில் பூமிக்கடியில் இருந்து ஹைட்ரோ கார்பன் என்னும் இயற்கை எரிவாயு எடுக்கும் மத்திய அரசின் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து 23 நாட்கள் தொடர்ந்த போராட்டத்தை, மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணனின் வாக்குறுதியை ஏற்று அப்பகுதி மக்கள் மார்ச் 8ஆம் தேதி கைவிட்டனர். ஆனால், மார்ச் 27ம் தேதி நெடுவாசலில் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான ஜெம் லெபாரட்ரீஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தம், இந்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் முன்னிலையில் கையெழுத்தானது. இதனால், நெடுவாசலில் மீண்டும் போராட்டம் தொடங்கியுள்ளது. நெடுவாசல் ஹைட்ரோ கார்பன் திட்டம் கைவிடப்படும் வரை போராட்டம் தொடரும் என நெடுவாசல்காரர்கள் அறிவித்துள்ளார்கள்.

## மணல் கொள்ளைக்கு எதிரான போராட்டங்கள்

தமிழகத்தில் பாலாறு, தாமிரபரணி, வைகை போன்ற பெரிய முக்கிய நதிகள் எல்லாம் ஏற்கெனவே மணல்கொள்ளையர்களால் பாலைவனமாகி விட்டன. இதனால், இப்போது மணல் கொள்ளையர்கள் கவனம் குவித்திருப்பது காவிரி ஆற்றில்தான். இந்த மணல் கொள்ளைக்கு எதிராக கரூர், நாமக்கல் பகுதி மக்களை ஒருங்கிணைத்து தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர் காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கத்தினர். “காவிரி ஆற்றில் கடந்த 25 ஆண்டுகளாக தொடர்ந்து முறைகேடாக மணல் எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது எஞ்சியுள்ள மணலும் அள்ளப்பட்டு விடுமேயானால் கரூர் உள்ளிட்ட மாவட்டங்கள் பாலைவனமாகி விடும். எனவே, அனைத்து மணல் குவாரிகளையும் உடனடியாக போர்க்கால அடிப்படையில் மூடப்பட வேண்டும். மணல் குவாரிகளை மூடுவதன் மூலம் மட்டும்தான் கரூர் உட்பட 15 மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை ஓரளவு நிறைவு செய்ய முடியும். இதனால்தான் நாங்கள் போராடி வருகிறோம். மணல் கொள்ளையைத் தடுக்க வேண்டிய காவல்துறையோ போராட்டத்தில் பங்குபெறும் மக்களின் மீது பொய் வழக்குகள் போட்டு மிரட்டுகிறது. ரவுடிகள் மூலமாக மணல் கொள்ளையர்கள் மிரட்டுகிறார்கள். இருந்தாலும் உயிரை பணயம் வைத்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்” என்கின்றனர் காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கத்தினர்.



காவிரி ஆறு மட்டுமின்றி தமிழகம் முழுவதும் சிறுசிறு ஆறுகள், நீர்நிலைகள் உள்பட எல்லாப் பகுதிகளிலும் தங்குதடையின்றி மணலும் செம்மண்ணும் கொள்ளையடிக்கப்படுவது நடந்துதான் வருகின்றது. அவற்றுக்கு எதிராக தொடர் போராட்டங்களையும் அந்தந்தப் பகுதி மக்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

## குடி குடியைக் கெடுக்கும்

இந்தியா முழுவதும் தேசிய, மாநில நெடுஞ்சாலைகளில் இருந்து 500 மீட்டர் தொலைவுக்குள் உள்ள மதுபானக் கடைகள் மூடப்பட வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற உத்தரவை அடுத்து, தமிழகத்தில் 3300க்கும் மேற்பட்ட மதுபானக்கடைகள்

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# அறிவியல் கதிர் - இஸ்ரோவின் சாதனை

**- பேராசிரியர் கே. ராஜு-**

இந்திய விண்வெளி சரித்திரத்தில் 2017 பெப்ரவரி 15ஆம் நாள் வரலாற்று முக்கியத்துவம் மிகுந்த நாளாக அமைந்தது. உலக அளவில் விண்வெளித் திட்டங்களை வெற்றிகரமாகவும் அதிக செலவின்றியும் நிறைவேற்றக் கூடிய நிறுவனம் என இஸ்ரோ (Indian Space Research Organisation) ஏற்கனவே அடை யாளம் பெற்றுவிட்டது. 2016 ஜூன் மாதத்தில் ஒரே ரொக்கெட்டில் 20 கோள்களை இந்தியா அனுப்பி உலக கவனத்தை ஈர்த்திருந்தது. தற்போது 104 செயற்கைக் கோள்களை ஒரே ரொக்கெட்டில் அனுப்பியதன் மூலம் உலக சாதனை நிகழ்த்தி மற்றுமொரு மகுடத்தைச் சூட்டிக் கொண்டது இஸ்ரோ. இதற்கு முன்னர் ஒரே ரொக்கெட்டில் 37 கோள்களை 2014 ஜூன் மாதத்தில் விண்ணில் செலுத்தி உலக சாதனை படைத் திருந்த ரஷ்ய விண்வெளி சாதனையை இந்தியா முறியடித்து இந்தியர்களைப் பெருமிதமடைய வைத்துள்ளது.

104 கோள்களைத் தாங்கிய இஸ்ரோவின் ரொக்கெட் பிஎஸ்எல்வி-சி37 (Polar Satellite Launch Vehicle-C37) ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதிஷ் தவான் விண்வெளி மையத்தில் உள்ள ரொக்கெட் தளத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது. 20 நிமிடங்களுக்குள்ளாக ஒன்றன்பின் ஒன்றாக அந்தக் கோள்கள் கிட்டத்தட்ட ஒரே உயரத்தில் (சுமார் 520 கி.மீ.) பூமியின் சுற்று வட்டப் பாதையில் நிறுத்திவிடப்பட்டன. சுமார் 320 தொன் எடையுள்ள இந்த பிஎஸ் எல்வி-சி37 ரொக்கெட்தான் இதுவரை அனுப்பிய ரொக்கெட்டுகளிலேயே எடை கூடியது. மையத்திலிருந்து புறப்படும்போது அதன் உயரம் 44. 4 மீட்டர். முதலில் அதன் முக்கிய செயற்கைக்கோள் கார்டோ சாட்-2 வரிசை விண்ணில் ஏவப்பட்டது. அதன் பின்னர் இந்தியாவின் ஐஎன்எஸ் 1ஏ, ஐஎன்எஸ் 1பி ஆகிய இரு நானோசெயற்கைக் கோள்கள் ஏவப்பட்டன. இந்திய கோள்கள் மூன்றைத் தவிர, 96 கோள்கள் அமெரிக்காவையும், ஐந்து கோள்கள் இஸ்ரேல், ஐக்கிய அரபு எமி-ரேட்ஸ், நெதர்லாந்து, ஸ்விட்சர்லாந்து, கஜகஸ்தான் ஆகிய ஐந்து நாடுகளையும் சேர்ந்தவை.

இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சாதனை உலக சாதனை படைக்க வேண்டும் என்பதற்காக மட்டும் நிகழ்த்தப் பட்டதல்ல, உற்பத்தித்திறனை அதிகரித்து அதிக அளவில் பலன்கள் பெற வேண்டும் என்பதற்காகவே என்கிறார் இஸ்ரோ தலைவர் ஏ. எஸ். கிரண்குமார்.

104 கோள்களை ஒரே ரொக்கெட்டில் செலுத்துவது சிக்கல்கள் நிறைந்த சவால் மிகுந்த பணியாகவே இருந்தது. ஒன்றன் பின் ஒன்றாக கோள்கள் ஏவப்பட்டபோது, ஒவ்வொரு கோளுக்கும் கொடுக்கப்பட்ட சுழற்சியின் (spin) காரணமாக அவை வெவ்வேறு கோணங்களில் ஏவப்பட்டன. மணிக்கு 27,000 கி.மீ. வேகத்தில் செல்லும் கோள் கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாமல் இருப்பதை இந்த முறையில் உத்தர வாதப்படுத்த வேண்டியிருந்தது. இந்தக் கடினமான பணியைப் புரிந்து கொள்ள எளிமையாக இப்படி விவரிக்கிறார் தில்லி விக் ஞான் பிரச்சார் அறிவியலாளர் டி.வி. வெங்கடேஸ்வரன் : ஓடும் பேருந்தில் இரு ந்து கீழே குதித்தால் பஸ்ஸோடு கொஞ்ச தூரம் ஓட வேண்டுமல்லவா?



அதிலும் ஐந்தாறு பேர் அடுத்தடுத்துக் குதித்தால், முதலில் குதித்தவர் பேருந்தோடு ஓடி வரும்போது இரண்டாவதாகக் குதிப்பவரோடு மோதிவிடக்கூடும். எனவே குதிப்பவர்கள் அடுத்துக் குதிப்பவரின் பாதையிலிருந்து விலகி ஓடவேண்டும் என்கிறார் டிவிவி.

மேலே அனுப்பப்பட்ட முக்கிய செயற்கைக் கோள் கார்டோசாட்-2 வரிசை பல நிறங்களையும் தொலைதூரத்திலிருந்தே பதிவு செய்யக்கூடிய தனிப்பட்ட திறன் கொண்ட கமெராக்கள் பொருத்தப்பட்டவை. இக்கோளிலிருந்து கிடைக்கும் பிம்பங்களை வரை படங்கள் தயாரித்தல், கடற்கரை நிலப்பகுதியைப் பயன்படுத்துதல்-கட்டுப்படுத்தல், சாலைகளின் வலைப்பின்னலைக் கண்காணித்தல், நீர் விநியோகம் செய்தல், புவியியல் தகவல்களைப் பயன்படுத்தல் ஆகிய பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். செயற்கைக்கோள்களின் அளவை மிகவும் குறைக்க முடியும் என்பதை இந்தியாவின் ஐஎன்எஸ் 1ஏ, ஐஎன் எஸ் 1பி ஆகிய இரு நானோசெயற்கைக் கோள்களும் நிரூபித்துள்ளன. ஐஎன்எஸ் 1பி, ஓரிகாமி கமெரா பொருத்தப்பட்ட நானோகோள். பொருளின் அளவை மிகப் பெரிதாக்கிக் காட்டக் கூடியது அந்தக் கமெரா. அதுமட்டுமல்ல, பிம்பத்தை மிக நுணுக்கமாகக் காண்பிக்கக்கூடியதும் கூட. ஆட்களையோ பொருள்களையோ தேடல், மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்குப் பயன்படும் கருவிகளை புரட்சிகரமாக மாற் றியமைக்க இத்தொழில்நுட்பம் உதவும் என்கிறார் செயற்கைக் கோள்கள் பயன்பாட்டு மைய இயக்குநர் டாக்டர் தபன் மிஸ்ரா.

இந்த ரொக்கெட்டோடு இஸ்ரோ இதுவரை 226 செயற்கைக் கோள்களை ஏவி முடித்திருக்கிறது. அவற்றில் 179 கோள்கள் அயல் நாடுகளைச் சேர்ந்தவை. மிக விரைவில், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட GSLV-Mk III-D1 என்ற ரொக்கெட்டை விண்வெளியில் செலுத்த இருக்கிறது இஸ்ரோ. இந்தியக் குழு இன்டஸ், ஜப்பானியக் குழு ஹகுடோ ஆகிய இரு குழுக்களும் தயாரித்துள்ள சந்திரனின் பரப்பை ஆய்வு செய்ய இருக்கும் ரோவர்கள் இந்த ஆண்டு டிசம்பர் 28 அன்று ஒரு பிஎஸ்எல்வி ரொக்கெட் மூலம் செலுத்தப்பட உள்ளன. இவற்றோடு, அடுத்த ஆண்டு சந்திரயான்-2 விண்கலத்தை செலுத்துவதற்கான தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறது இஸ்ரோ. தொடர் சாதனைகளை நிகழ்த்த இருக்கிறது இஸ்ரோ. வாழ்த்துவோம்!

(ஆதாரம்:சயன்ஸ் ரிப்போர்ட்டர்-2017 மார்ச்)



# செய்யும் தொழிலில் கண்ணியம் தவறிய ஆதன முகவர்!

**சிவ. பஞ்சலிங்கம்**, B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999



'விளம்பரம்' வாசகர்களுக்கு ஓர் அனுபவப் பகிர்வாக இருக்க வேண்டும் என்பதற்காக 'ரொறன்ரோ ஸ்ரார்' பத்திரிகையின் புலனாய்வுப் பிரிவினர் வெளியிட்ட செய்தியை இங்கு தருகின்றேன்.

அச்செய்தி! 'ஸ்ரெல்லா வாசியூக்' (Ms. Stella Wasiuk) போலந்து நாட்டினை பூர்வீகமாகக் கொண்ட 83 வயதான ஒரு மூதாட்டி. 1987 ஆம் ஆண்டு கணவர் மரணமானார். பிள்ளைகளும் இல்லை. பாசமாக பழக உண்மையான உறவுகளும் அவருக்கு இல்லை.

2008ஆம் ஆண்டு முழங்காலில் ஏற்பட்ட ஒரு சத்திரசிகிச்சை காரணமாக வைத்தியசாலை, புனர்வாழ்வு மையம் என அலைந்த போது அங்கு அவரை போலின் றீயட் (Ms. Pauline Reid) என்னும் ஒரு பெண் மருத்துவ உதவியாளர் (Personal Support Worker) சந்தித்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தாய். இரு தடவை வங்குரோந்து நிலைமைக்கு மனுச் செய்தவர். மூதாட்டிக்கு பணி செய்யும் மருத்துவ உதவி என ஆரம்பித்து, அவர்களின் நம்பிக்கையான பாச உறவு வளர்ந்து கொண்டு போனது. தம்முடைய வீட்டில் வந்து இருந்தால் மூதாட்டியினை, பராமரிக்க உதவியாக இருக்கும் என அழைத்து அப்படியே ஒரு வாடகைக் குடியிருப்பில் வாழ்ந்தனர்.

மூதாட்டிக்கு மார்க்கம் நகரில் ஒரு ஆடம்பரக் கொண்டோமினியம் சொந்தமாக இருந்ததுடன், சேமிப்பில் பணமும் இருந்தது. இவை யாவற்றினையும் பயன்படுத்தி ஏஜெக்ஸ் நகரில் ஒரு வீடு வாங்குவதற்கு இருவரும் திட்டமிட்டனர். வயதான காலத்தில் திருப்தியாக தம்மை பாரமரித்தால், இச் சொத்துக்களை அந்தக் கறுப்பின மருத்துவ உதவியாளருக்கு தமது மரணத்தின் பின்பு வழங்கத் தயார் என்ற கள்ளம் கபடமில்லாத உறுதி மொழியினை வழங்கியிருந்தார்.இவர்களின் உறவோடு வர்த்தக நோக்கில் உறவாட வந்த ஆதன முகவர் திரு. சன்னி காந்தி (Mr.Sunny Gandhi) பிரம்ரன் நகரிலிருந்து தொழில் செய்பவர். அந்த மூதாட்டியின் மார்க்கம் நகரில் உள்ள கொண்டோமினியம் $410,000க்கு விற்கப்பட்டு ஏஜெக்ஸ் நகரில் வீடு ஒன்று வாங்கி கொடுக்கப்பட்டது.

அந்த மூதாட்டியும் தனது பெயரில் வீடு இருப்பதாகவும், ஒப்பந்தப்படி தனது பராமரிப்பு என்பது திருப்தியாக இருந்தால் தனது மரணத்தின் பின்பு வீடு என்ற சொத்து அவர்களுக்குப் போகும் என்ற நினைப்பில் இருந்தார். ஆனால் அங்கு அவர் மரணமாகும் வரை அந்த வீட்டில் வாழும் உரிமை மட்டும் (Life Interest) வழங்கப்பட்டிருந்தது. அந்த மூதாட்டியின் அனுமதியில்லாது வீடு விற்க முடியாது என்ற வாசகமும் எழுதப்பட்டிருந்ததே தவிர, வீட்டின் உரிமை யாவும் வேறு எவரோ பெயரில் இருந்தது.

## கனடிய தகவல் தொடர் 266

புதிதாகக் குடியேறிய வீட்டில் அவரின் வாழ்க்கை நினைத்தது போல் இருக்கவில்லை. வீடு முழுவதும் போலினின் உறவினரின் குடியிருப்பும் அட்டகாசங்களும் தொடர்ந்தன. வீட்டினுள் பயன்படுத்தும் உபயோகங்கள் பலவற்றுக்கு மூதாட்டிக்குத் தடைகள் விதிக்கப்பட்டன. அவருக்கு பராமரிப்பு என்பது ஒன்றுமில்லை. அவர் தனிமையில் கைவிடப்பட்டு வீட்டினுள் முடங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஒரு கைத்தடியின் உதவியுடன் தாம் குடியிருந்த ஏஜக்ஸ் நகர வீட்டின் வாசலில் அங்கலாய்த்த அவரின் பரிதாபகரமான நிலையினை அவதானித்த அயலவர் உண்மையினை கேட்டறிந்து கொண்டனர். இந்த நிலைமையில் ஒரு அயலவரின் உதவியால் இந்தப் பிரச்சினை பகிரங்கத்திற்கு வந்தது. கண்ணை மறைத்து ஏமாற்றம் செய்த இந்த மோசடியில் ஆதன முகவர், இரு சட்டத்தரணிகள், மோசடி பெண் எனப் பலரும் பகிரங்கத்திற்கு கொண்டு வரப்பட்டனர்.

தெரிந்தும்,தெரியாத்தனமாகவும் மோசடிக்குள் விழுந்த மூதாட்டிக்கு கனடாவின் முதியோர் அமைப்பு, முதியோருக்கு உதவி செய்யும் சட்ட உதவி மையத்தின் சட்டத்தரணிகள், ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையின் புலனாய்வுக் குழு என பலரும் கூட்டாக உதவி செய்து வீட்டின் உரிமை பறிக்கப்பட்டு மீள அவரிடம் வழங்கும் தீர்ப்பினை ஒன்ராரியோ நீதிமன்றத்தில் பெற்றுக் கொடுத்தனர்.

தொடர்ந்து அந்த மூதாட்டி அந்த வீட்டினை விற்றுவிட்டு, முதியோர் இல்லத்திற்கு சென்று அமைதியாக வாழும் ஒழுங்குகளும் இவர் களினால் செய்து கொடுக்கப்பட்டது.

செய்யும் தொழிலில் கண்ணியம் தவறி ஒரு மனித தர்மத்தினை மீறிய அதர்மத்திற்கு துணைபோன ஆதன முகவருக்கு அவர்களை கண்காணிக்கும் ஒன்ராரியோ றியல் எஸ்ரேற் மன்றம் (RECO) $8000 டொலர் தண்டனை விதித்து அவரது தொழில் துறையில் ஒரு சிவப்பு கோடு போட்டது.

இனி விடயத்திற்கு வருவோம். ஆதன முகவர்களின் செயல்பாடுகளை அவதானித்து அவர்கள் குற்றம் செய்தால் தண்டனை வழங்கி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் இந்த மன்றம் எது?

**'ஒன்ராரியோ றியல் எஸ்ரேற் மன்றம்'** (RECO - The Real Estate Council of Ontario) மாகாண அரசின் நுகர்வோர் சேவைகளின் அமைச்சகத்தின் கீழ் ஆதன தொழில் செய்வோரை ஒழுங்கு நெறிப்படுத்துவதற்காக 1997 ஆம் ஆண்டிலிருந்து இயங்கும் ஒரு நிறுவனம் ஆகும்.

றியல் எஸ்ரேற் வர்த்தக சட்டத்தினை (Real Estate & Business Brokers Act - 2002) என்பதனை நடைமுறைப்படுத்துகின்றது. அனுமதிப் பத்திரம் எடுத்து ஒன்ராரியோ மாகாணத்தில் றியல் எஸ்ரேற் தொழில் செய்வோர் ஒவ்வொருவரும் இந்நிறுவனத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். முகவர்களின் வகுப்புகள், பயிற்சி நெறிகள், அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் தொழிலின் தார்மீகத்தன்மை யாவற்றினையும் இம்மன்றம் நிர்வகிக்கின்றது.

1. நேர்மை & கண்ணியம் (Honesty & Integrity)
2. இரகசியக்காப்பு (Confidentiality)
3. மதிப்பாகவும் நடப்பது (Respect)
4. நன்நோக்குடன் நடப்பது (Standard Objectivity)
5. நேரத்துடனான சேவை (Timeliness Service)
6. அறிவார்ந்த தகைமைகளை வளர்ப்பது (Knowledge & Competencies)

போன்ற தகைமைகளை ஆதன முகவர்கள் பின்பற்ற வேண்டும் என்பதனை சட்டமாக உருவாக்கி அதனை கண்காணிக்கின்றது. எனவே ஆதன முகவர்களினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் தங்கள் முறைப்பாடுகளை எடுத்துச்செல்லும் ஓர் அரச நிறுவனமாகவும், நியாயமன்றமாகவும் இது செயல்படுகின்றது.

### எப்படி முறைப்பாட்டினை முன் எடுப்பது?

பின்வரும் இரு வழிகள் மூலம் முறைப்பாட்டினை முன் எடுக்கலாம்.
1. பின்வரும் விலாசத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு முறைப்பாட்டு விண்ணப்பத்தினை எடுத்து நிரப்பி ஆதார பத்திரங்களுடன் தொலைநகல் மூலமோ அல்லது கடித மூலமோ சமர்ப்பிக்கலாம்.
Office of the Register
Real Estate Council of Ontario
3300, Bloor Street West
Toronto, Ont. M8x 2X2
தொலைசேி - (416) 207-4800
தொலை நகல் - (416) 207-4820
மின் அஞ்சல் - Information@reco.on.ca / மின் கணினி தொடர்பு வலயத்தினூடாக முறைப்பாடு செய்தல் (Online complaint)

**ஆதன முகவர் அல்லது ஆதன நிறுவனத்திற்கு எதிராக கிடைக்கும் முறைப்பாடுகளை இந்த நிறுவனம் எப்படிக் கையாளும்?**

(தொடர்ச்சி 34 ஆம் பக்கம்...)

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stumatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# நாமும் நமது இல்லமும் - 485

## ஆதன விலை அதிகரிப்புக்கு கடிவாளம் வருகிறது?

ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969



கடந்த 25 வருடங்களில் எனது அனுபரீதியில் இவ்வாறான ஆதன வியாபார நிலைமையை ஒருவரும் பார்த்திருக்க மாட்டார்கள். ஒரு வருடத்தில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் 30% ற்கும் மேற்பட்ட விலை அதிகரிப்பு. இது நியாமா? தொடருமா? இல்லை என்பதே பதில்.

1988-1989 காலப்பகுதியில் இதுபோன்ற ஒரு நிலைமையை நான் பார்த்திருக்கின்றேன். ஆனால் அன்றைய விலை அதிகரிப்பு இன்று போலல்ல. கடந்த 3 மாதங்களின் விலை அதிகரிப்பு, ஒரு வகையில் யாவரிற்கும் பயத்தைத்தான் ஏற்படுத்துகின்றது என்பதனை மூன்று மட்ட அரசியல் தலைவர்களும் ஏப்ரல் 2017 இன் முதல் வாரத்தில் ஒன்றாகக் கூடி ஆராய்ந்ததிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. கடந்த 10 வருடங்களாக கனடியப் பொருளாதார தலைவர்கள் ஆதன வியாபாரத்தை கவனமாக ஆராய்ந்து வந்தார்கள். கடந்த வருடத்தின் இறுதியில் வன்கூவரில், சீன முதலீட்டார்களின் முதலீடு சிறிது சிறிதாகக் குறைந்தது.

ஒரு பரல் (barrel) குறூட் எண்ணையின் விலை $150 இருந்து, $40 இற்கு குறைந்ததும், அல்பேட்டாவின் ஆதன வியாபாரத்திலும் விலை இறக்கம் ஏற்படத் தொடங்கியது.

வன்கூவரில், மாகாண அரசு மற்றும் நகர அரசுகளின் மேலதிக வரிவிதிப்பினால் விலை இறக்கத்திலும் வியாபாரத்திலும் இறக்கம் ஏற்பட்டதனைக் காணலாம். இருந்தபோதிலும் உலகத்தில் உள்ள நகரங்களில் ஆதன விலை அதிகமான நகரங்களில் வன்கூவரும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

ரொறன்ரோவின் பெரும்பாகம் அதனுடன் அண்டிய பிரதேசங்களில் (golden horseshoe area) விலை அதிகரிப்பு தொடருகின்றது.

அல்பேட்டாவின் குறூட் எண்ணையின் விலை இறக்கம் கனடாவின் பொருளாதாரத்தில் இரு காலாண்டுகளில் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சியை கொடுத்திருந்தது. ஆனால் ரொறன்ரோவின் விலை இறக்கம், இதன் பாதிப்பு பெரியளவில் கனடிய பொருளாதாரத்தில் ஏற்படுத்தலாம். கனடாவின் ஐந்தில் ஒரு பகுதிக்கு மேற்பட்ட மக்கள் ரொறன்ரோ பெரும்பாகத்தில் வாழ்கின்றார்கள். (கனடா மக்கள் தொகை 36.5 மில்லியன் (2016). 2013 இன் கணக்கின்படி GTA இன் பொருளாதாரம் $330 பில்லியன், ஏறக்குறைய அல்பேட்டா மாகாணத்தில் பொருளாதாரத்திற்கு சமமாக காணப்படுகின்றது. இதன் பொருளாதாரம் சஸ்கச்சுவான், மனிற்ரோபா, நோவஸ்கோஷியா, நியூபிறவுண்ஸ்விக், பிறின்ஸ் எட்வேட் ஐலன்ட் போன்ற மாகாணங்களில் கூட்டுப் பொருளாதாரத்தை விட அதிகமானதாகும்.



கனடாவின் பெரிய ஆறு வங்கிகளில் ஐந்தின் தலைமை அலுவலகம் இங்கேயே காணப்படுகின்றது. பல வியாபார நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களும் இந்தப் பகுதியிலேயே காணப்படுகின்றது. எனவே மூன்று அரசுக ளும் ஆதன வியாபாரத்தை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும் என்பதில் கவனமாக உள்ளார்கள்.

மார்ச் 2017, GTA இன் சராசரி ஆதனவிலை

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.


Does your current life insurance policy need a tune up please call me.

Nimal Subramaniam
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# மர அபிமானம் வளர வேண்டும்



சத்குரு வாசுதேவ்

**World Earth day April 22, 2017**

2006 ஆம் வருடம் செப்ரெம்பர் மாதம் சென்னையில் நடந்த ஈஷா பசுமைக் கரங்கள் இயக்கத்தின் மூலம் ஒரே நாளில் 8 இலட்சத்திற்கும் அதிகமாக மரக்கன்றுகள் நட்ட விழாவில் பேசியது.

முதலில் உங்கள் கரங்களைத் தொட்டு முத்தமிடுகிறேன். அந்தக்கரங்கள் எதனால் பெருமை பெற்ற கரங்கள் என்று யோசித்துப் பார்க்கிறேன். பொதுவாக மனிதரின் கரங்களுக்கு எதனால் மரியாதை கொடுக்கிறார்கள்? உண்பதற்கு பயன்படுவதனால் அந்த கரங்களுக்கு மரியாதையா? கும்பிடுவதனால் அந்த கரங்களுக்கு மரியாதையா? இல்லை திருவிழாக்களில் கை தட்டுவதனால் அந்த கைகளுக்கு மரியாதையா? என்றால் இவையெல்லாம் கடந்து இந்த மண்ணை காப்பாற்றுகிற மரக் கன்றுகளை நட்டு வந்த கரங்கள் என்பதற்காக உங்கள் கரங்களை நான் தொட்டு முத்தமிடுகிறேன்.

சத்குரு அவர்களைப் பார்த்து நான் வியந்து நிற்கிறேன். அவரைப் பார்க்கிறபோது ஒரு ஆன்மீகவாதி என்று மட்டும் அவரைப் பார்க்காமல் அதையெல்லாம் கடந்து, இந்த மண்ணுக்கு செயல் ஊக்கம் தருகிற ஒரு மாமனிதராக அந்த மனிதரை நான் பார்க்கிறேன்.

நண்பர்களே, இனிமேல் இந்த மண்ணுக்குத் தேவையானது இரண்டு. ஒன்று "மனிதாபிமானம்". "மனிதாபிமானம் நிலத்தடி நீரைப் போல குறைந்து கொண்டே போகிறது". மாநிலம் என்பது மாவட்டமாக சுருங்கி, மாவட்டம் என்பது ஊராய் சுருங்கி, ஊர் என்பது தெருவாய் சுருங்கி, தெரு என்பது வீடாய் சுருங்கி, வீடு என்பது அவரவர் அறை, அவரவர் டூத்பேஸ்ட், அவ ரவர் சோப், அவரவர் ரவல், அவரவர் செருப்பு, என்று மெல்ல மெல்ல மனிதாபிமானம் சுருங்கிக் கொண்டிருக்கிற காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனிதாபிமானத்தை வளர்க்கக்கூடிய மனிதர்களே, "மனிதாபிமானம் மட்டும் அல்ல, மனிதாபிமானத்தோடு சேர்ந்து மர-அபிமானத்தையும் வளர்க்க வேண்டும்".

அடுத்த தலைமுறை நிகழ்கால மனிதனைப் பார்த்து கேட்கின்ற கேள்வி, நாங்கள் பிறந்தபோது இருந்த பூமியை அப்படியே விட்டு விட்டு போவீர்களா? இதுதான் மிகப்பெரிய கேள்வி. நாங்கள் பிறந்தபோது சூரியனை மறைக்க வானம் இருந்தது. எங்கள் வானத்தின் உச்சியில் நிலா இருந்தது. பூமியில் நதி இருந்தது. மரங்கள் இருந்தன, பசுமை இருந்தது. இதை அப்படியே விட்டுவிட்டு செல்வீர்களா? எங்கள் புல்வெளி எங்களுக்கு சொந்தமா? எங்கள் நதிகள் எங்களுக்கு சொந்தமா? எங்கள் மலைகள் எங்களுக்கு சொந்தமா?என்று மனிதர்கள் கேட்டால், அதற்கு பதில் சொல்ல வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

நான் ஈஷா யோக மையத்தை சேர்ந்த நண்பர்களைப் பார்த்து வியந்து போகிற ஒரு விஷயம் உண்டு. எல்லோருடைய கண்களிலும் ஒரு சூரியப் பிரகாசம் இருக்கிறது. ஆண்களும், பெண்களும் யாரைப் பார்த்தாலும் மழை ஓடைமாதிரி தெளிவான கண்கள். மேகம் மறைக்காத சூரிய பிரகாசம் மாதிரி கண்கள். நிலா மிதக்கிற கண்கள். இது எப்படி வந்தன என்று யோசித்துப் பார்க்கிறேன். உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒலி உண்டாகும் என்றான் கவிஞன். உள்ளத்தில் உண்மை உண்டாயின் கண்களிலே ஒளி உண்டாகும் என்று சத்குரு பாராட்டியிருக்கிறார்.

ஒரு தவம் செய்கிறவன், யோகம் செய்கிறவன், அவனுக்கும் பூமிக்குமான உறவைத் திட்டமிட்டு தீர்மானித்துக் கொள்கிறான். செருப்பு தைக்கிறவனுக்கு அந்த ஊசி, அந்த நூல், அந்த தோல், அவன் மனசும், உடம்பும், ஒரு புள்ளியில் சந்திக்கிறபோது அதே தியானம். எனவே கடமையினை சரியாக செய்கிறவன் சரியான தியானம் செய்கிறான் என்றே புரிந்துகொண்டிருக்கிறேன். அதை நீங்களும் இந்த மண்ணிற்கு சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த மரக்கன்று இருக்கிறதே, இந்த மண்ணை, பூகோள உருண்டையை உடைந்துவிடாமல் காப்பாற்றுகிற மிகப்பெரிய காரியத்தை நீங்கள் செய்திருக்கிறீர்கள். உங்கள் அமைப்பிற்கு தமிழகத்தின் எதிர்காலம் கடமைப்பட்டிருக்கிறது, இது மிகப்பெரிய செயல்.

மரங்களை வெட்டாதீர்கள், கொல்கத்தா மூழ்கிவிடும். இது மிகப்பெரிய விஞ்ஞான எச்சரிக்கை. இது சிலஆண்டுகளாக சொல்லப்படுகிற செய்தி. மரங்களை வெட்டாதீர்கள், கொல்கத்தா மூழ்கிவிடும். மரங்களை வெட்டுவதற்கும், கொல்கத்தா மூழ்குவதற்கும் என்ன சம்பந்தம் என்று யோசித்து பார்த்தால், இந்த பூமிக்கு மேலே இருக்கிற ஓசோன் கூரை ஓட்டையாகிவிட்டது. ஏன் ஓட்டையாகிவிட்டது? ஒக்ஸிஜன் இல்லை. ஓசோன் கூரையில் ஓட்டை விழுந்துவிட்டால் என்ன நேரும் என்றால், வடிகட்டி வருகிற சூரிய கதிர்கள் நேராக பூமியை தாக்கும். அந்த வடிகட்டாத வெளிச்சம், சூடு, பூமியை சுட வைக்கிறது. பூமியை சுட வைப்பதால் பூமியின் வெப்பம் அதிகரிக்கிறது. பூமியின் வெப்பம் அதிகரித்ததால் இமயமலை உருகத் தொடங்குகிறது. இமயமலை உருகத் தொடங்கினால் கங்கை நதியில் வெள்ளப் பெருக்கு வருகிறது. கங்கை நதி வெள்ளப் பெருக்கு நிகழ்ந்தால் கடல் மட்டம் உயர்கிறது. கடல் மட்டம் உயர்ந்தால் கொல்கத்தா மூழ்கப் போகிறது.


Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org


இன்னொரு முக்கியமான செய்தி, மரங்களை நம் முன்னோர்கள் பாதுகாத்த அளவிற்கு இன்றைக்கு பாதுகாக்கிறோமா? தல விருட்சம் என்று ஆலயங்களில் வைத்தார்களே, ஏன் என்று யோசித்து பார்க்கிறேன். தலவிருட்சம் என்று வைத்தது அந்த மரத்தை கோயிலுக்குள் மட்டும் கும்பிடுவதற்கு அல்ல. கோயிலுக்கு வெளியிலும் கும்பிடுவதற்கு. மரத்தைத் தெய்வமாகப் பார்த்தவன், கடவுளாக பார்த்தவன், தாயாகப் பார்த்தவன், ஞானமாகப் பார்த்தவன், தத்துவமாகப் பார்த்தவன் தமிழன். மறந்துவிட்டோம் இன்றைக்கு. மரம் என்பது சராசரி ஒரு வியாபாரப் பொருள் என்று சுருங்குகிறபோது தான் மரம் தனது அர்த்தத்தை இழந்துவிடுகிறது.

ஒரு சமஸ்கிருத ஸ்லோகம் உண்டு. வீடு கட்டும்போது பூமி பூஜை செய்கிறார்கள் இல்லையா, அங்கே ஒரு மந்திரம் சொல்லப்படுகிறது. அந்த மந்திரத்துக்கு என்ன பொருள் என்று அறிந்து ஆச்சரியப்பட்டு போனேன்.மரங்களின் மீது எவ்வளவு காதல் வைத்திருக்கிறான் அந்த சமஸ்கிருத பாட்டைப் படித்தவன். இப்படித் தொடங்குகிறது ஸ்லோகம். மரங்களே, மரங்களில் குடியிருக்கும் பறவைகளே, எங்களை மன்னித்து விடுங்கள்... வீடு கட்டப்போகிறோம், மண்ணைத் தோண்டுகிறோம் உங்கள் இடத்தில் நாங்கள் வந்து குடியிருக்கப் போகிறோம் உங்களை அகற்றுகிறோம், எங்களை மன்னித்து விடுங்கள்... என்று தொடங்குகிறது ஸ்லோகம்.

என்ன தெரியுமா முக்கியம், நீங்கள் பிள்ளைகளைப் பெறுகிறீர்கள், பிள்ளைகள் பேர் சொல்கிறார்களோ, இல்லையோ, மரங்கள் பேர் சொல்லும். ஏனென்றால் பிள்ளைகளைவிட மரங்களுக்கு ஆயுள் அதிகம். இன்னொரு விஷயம்.. பிள்ளைகள் அமெரிக்கா போய்விடுவார்கள், மரங்கள் அமெரிக்கா போகாது. ஆகவே பிள்ளைகளுக்கு பக்கத்தில் நீங்கள் மரங்களையும் வைத்துக் கொள்ளுங்கள்.

எனக்கு சின்ன வயதில் மரங்களோடு ஒரு சினேகிதம். எங்கள் ஊரில், எங்கள் பள்ளியில் ஒரு அசோக மரம் வளர்த்தேன். நான் தினந்தோறும் ஊருக்கு வெளியே இருந்து தண்ணீர் எடுத்து வந்து வளர்த்த அசோக மரத்தை இப்போதுகூட தொட்டு தொட்டுப் பார்த்துவிட்டு வருவேன். அது மரமல்ல, என் பால்ய வயதினுடைய உருவம். அது மரமல்ல, அது என்னுடைய தமிழின் உரம். அது மரமல்ல, என் நினைவுகளினுடைய பசுமை நிறம்.

\- கவிப்பேரரசு வைரமுத்து

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

'பிரச்சினையை எதிர்கொள்ளும்போது கிடைக்காத தீர்வு பிற்பாடு யோசிக்கும் போது கிடைக்கிறதே, எப்படி?'

'எப்போது விதைக்க வேண்டும், எப்போது உழ வேண்டும், எப்போது களை எடுக்க வேண்டும், எப்போது அறுவடை செய்ய வேண்டும் என்று எல்லாவற்றுக்கும் குறிப்பிட்ட நேரம் உண்டு. அப்படி உரிய நேரத்தில் எடுக்காமல், காலம் தாழ்த்தி எடுக்கும் முடிவுகள் சரியாக இருந்தாலும் அவற்றால் பலன் இல்லை.

பிரச்சினையை எதிர்கொள்ளும்போது மூளை ஸ்தம்பித்துப் போவது ஏன் என்று யோசியுங்கள்!

நீங்கள், மனம் என்றாலே சிந்திக்கும் கருவி என்று தவறாக நினைத்து, அப்படியே அதை வளர்த்துவிட்டீர்கள். சதா சர்வ காலமும் அது எதையாவது சிந்தித்துக் கொண்டே இருப்பதால், நூற்றுக்கணக்கான யோசனைகள் இங்கும் அங்குமாகப் பூச்சி பறப்பது போல் தறிகெட்டு ஓடிக்கொண்டே இருக்கின்றன.

அப்படி இல்லாமல், மனதை முழுமையான விழிப்பு உணர்வுடன் இயங்கப் பழக்கிவிட்டீர்கள் என்றால், இந்தக் குழப்பமெல்லாம் இருக்காது.

கண்ணாடியின் மீது அழுக்கைப் பூசி விட்டுப் பார்த்தால், பிம்பம் எப்படித் தெளிவாகத் தெரியும்?


## 4 day Inner Engineering Program

*led by an Isha teacher trained by Sadhguru*
*Coming to Toronto in 2 locations – June 15 - 18, 2017*

TIMINGS: Thursday June 15 : 6:30pm – 9:45pm
Friday June 16 : 6:30pm – 9:45pm
Saturday June 17 : 8:30am – 7:00pm
Sunday June 18 : 7:30am – 7:00pm

*VENUE* - ***Richmondhill: -*** Elegance Banquet Hall
10 Newkirk Rd, Richmond Hill (Toronto), ON L4C 5S3

***MISSISSAUGA -*** Swagat Banquet Hall,
6991 Millcreek Drive, Mississauga (Toronto), ON L5N 6B9

*Email: toronto@ishafoundation.org / Phone: 416 300 3010*
*Online registrations: www.innerengineering.com/live/toronto*

# என்றும் இளமையோடு வாழ திருமூலர் கூறும் எளிய வழி!

**படித்ததில் பிடித்தது**

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.

அனுப்புங்கள் *Vlambaram@sympatio.ca*

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**- எஸ். துஸ்யந்தி -**

நமது உடலில் நோய் தோன்றக் காரணம் என்னவெனில், உஷ்ணம், காற்று, நீர் ஆகியவை தன்னளவில் இருந்து மிகுதல் அல்லது குறைவதால் தான். இதனாலேயே நோய் தோன்றுகிறது. உஷ்ணத்தால் பித்த நோய்களும், காற்றினால் வாத நோய்களும், நீரால் கப நோய்களும் உண்டாகின்றன. நமது தேகத்தை நீட்டித்து, ஆயுளை விருத்தி செய்யத் திருமூலர் சித்தர் எளிய வழியை கூறுகிறார்.

ஒருவருடைய உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மை செய்யும் வல்லமை கடுக்காய்க்கு உண்டு என்று குறிப்பிடுகிறார் திருமூலர். கடுக்காய்க்கு அமுதம் என்றொரு பெயரும் உண்டு. தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிர்தத்திற்கு ஒப்பானது கடுக்காயாகும். "பெற்ற தாயைவிட கடுக்காயை ஒருபடி மேலானது என்று கருதுகின்றனர் சித்தர்கள். கடுக்காய் வயிற்றில் உள்ள கழிவுகளையெல்லாம் வெளித்தள்ளி, ஒருவருடைய பிறவிப் பயனை நீட்டித்து வருகிறது.

கடுக்காயின் சுவை துவர்ப்பாகும். நமது உடம்புக்கு அறுசுவைகளும் சரிவரத் தரப்பட வேண்டும். எச்சுவை குறைந்தாலும் கூடினாலும் நோய் வரும்.
நமது அன்றாட உணவில் துவர்ப்பின் ஆதிக்கம் மிகவும் குறைவு. துவர்ப்பு சுவையே ரத்தத்தை விருத்தி செய்வதாகும். ஆனால் உணவில் வாழைப்பூவைத் தவிர்த்துப் பிற உணவுப் பொருட்கள் துவர்ப்புச் சுவையற்றதாகும்.

பின் எப்படி ரத்த விருத்தியைப் பெறுவது?

அன்றாடம் நமது உணவில் கடுக்காயைச் சேர்த்து வந்தால், நமது உடம்புக்குத் தேவையான துவர்ப்பைத் தேவையான அளவில் பெற்று வரலாம்.

கடுக்காய் அனைத்து நாட்டு மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். கடுக்காயை வாங்கி உள்ளே இருக்கும் பருப்பை எடுத்து விட்டு, நன்கு தூளாக அரைத்து வைத்துக் கொள்ளவும். இதில் தினசரி ஒரு ஸ்பூன் அளவு இரவு உணவுக்குப்பின் சாப்பிட்டு வர, நோயில்லா நீடித்த வாழ்க்கையைப் பெறலாம்.

கடுக்காய் குணப்படுத்தும் நோய்கள்:

கண் பார்வைக் கோளாறுகள், காது கேளாமை, சுவையின்மை, பித்த நோய்கள், வாய்ப்புண், நாக்குப்புண், மூக்குப்புண், தொண்டைப்புண், இரைப்பைப்புண், குடற் புண்,



ஆசனப்புண், அக்கி, தேமல், படை, தோல் நோய்கள், உடல் உஷ்ணம், வெள்ளைபடுதல், மூத்திரக் குழாய்களில் உண்டாகும் புண், மூத்திர எரிச்சல், கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, பாத எரிச்சல், மூல எரிச்சல், உள்மூலம், சீழ் மூலம், ரத்த மூலம், ரத்தபேதி, பௌத்திரக் கட்டி, சர்க்கரை நோய், இதய நோய், மூட்டு வலி, உடல் பலவீனம், உடல் பருமன், ரத்தக் கோளாறுகள், ஆண்களின் உயிரணுக் குறைபாடுகள் போன்ற அனைத்துக்கும் இறைவன் அருளிய அருமருந்தே கடுக்காய்.

இதைப்பற்றி சித்தர் கூறும் பாடல்...

"காலை இஞ்சி
கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய்
மண்டலம் உண்டால்
விருத்தனும் பாலனாமே.-"

காலை வெறும் வயிற்றில் இஞ்சி - நண்பகலில் சுக்கு - இரவில் கடுக்காய் எனத் தொடர்ந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டுவர, கிழவனும் குமரனாகலாம் என்பதே இந்தப் பாடலின் கருத்தாம்.

எனவே தொடர்ந்து கடுக்காயை இரவில் சாப்பிட்டு வர நோய்கள் நீங்கி இளமையோடு வாழலாம். கடுக்காய் வீடுகளில் கண்டிப்பாய் இருக்க வேண்டிய பொக்கிஷமாகும். "ஆரோக்கிய வாழ்வுக்கு நாட்டு வைத்தியம் அவசியம்". "இதை அனைவருக்கும் பகிர்வோம்". "ஆரோக்கிய உலகை உருவாக்குவோம்"

- தகவல் சித்த மருத்துவம்


Brampton இல் கட்டப்படும் புதிய வீடுகள்



5BR, 4WR, 2988 SFT Fully Upgraded Home



5BR, 5WR, Fully Upgraded Closing, Dec 2017



4BR, 5WR, 2900 SFT



4BR, 4WR, 2750 SF Closing June 2017

Toronto, Ajax, Whitby, Oshawa, Newmarket மற்றும் Vaughan பகுதிகளிலும் புதிய வீடுகள் உள்ளன, தாமதமின்றி தொடர்பு கொள்ளுங்கள்

Not enough down payment?
Call me First.....



Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?


வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*




## Hydrocele

ஆண்களுக்கு ஏற்படும் விதைப்பை நீர்த்தேக்கம் முக்கியமான ஒன்றாகும். இது ஒருவருக்கு ஏற்பட்டிருந்தால் வெட்கமோ, தயக்கமோ இன்றித் தங்கள் வைத்தியர்களுக்கு கூறித் தகுந்த வைத்தியம் செய்துகொள்ள வேண்டும்.

விதைப்பையினுள் இருக்கும் விதையைச்சுற்றி ஓர் உறை காணப்படும். சாதாரணமாக இவ்வுறையில் சில துளிர் நீர் இருக்கும். ஆனால் பல்வேறு காரணங்களினால் இந்த உறையினுள் நீர் பெருமளவு சுரந்து வீக்கத்தை ஏற்படுத்தும். இதுவே விதைப்பை நீர்வீக்கம் என அழைக்கப்படும். இவ்வீக்கநிலை விதையில் ஒருபக்கத்திலோ அல்லது இருபக்கங்களிலும் இருக்கலாம். இவ்வீக்கமாவது சிறிதாகவோ அல்லது பெரிய தோற்றமாகவும் இருக்கும். இவ்விடத்தை தொட்டுப் பார்க்கும்போது நீர் நிறைந்த 'தோற்பை' போன்று காணப்படும். ஆனால் விதையை வேறுபடுத்தி வீக்கத்தை உணரமுடியாது.

## விதைப்பை நீர்த்தேக்க வீக்கம்

இப்படியான வீக்கநிலையில் நடப்பதற்கு அல்லது ஓடுவதற்கு கஸ்டமாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில் இந்நீரில் கிருமிகள் தொற்றி சீழாக மாறி கடும் சுரம், வேதனை போன்ற சிரமங்களைக் கொடுக்கலாம்.



அல்லது வெடிக்கவோ, இரத்தக்கட்டித் தன்மை ஏற்பட்டுத் துன்பத்தை விளைவிக்கலாம். இந்நோய் பெரும்பாலும் அடிப்படைக் காரணம் இன்றித் 'தானாகவே' தோன்றுகின்றது. இந்நோய் தோன்றாமல் தடுப்பதற்கு முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால் புற்றுநோய், காசநோய், யானைக்கால் நோய், கூவைக்கட்டு போன்றவற்றின் காரணமாகவும் அமையலாம் என அறிய முடிகின்றது.

பெரியோர் முதல் சிறியோர் வரை விதைப்பைநீர் தேக்க நோய் ஏற்படலாம். ஆனால் குழந்தைகளில் இது தானாகவே ஒருவருடத்திற்குள் மறைந்து விடும் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன. தவறின் வைத்திய முறையைக் கையாள வேண்டும்.

விதைப்பை வீக்கம் அடைந்தால் உடனடியாக இதுதான் என நினைத்து விடாதீர்கள். ஆனால் கேணியாவாகவும் இருக்கும். குடல் இறக்கத்திலும் விதைப்பை வீங்க இடம் உண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும். இவ்வீக்கம் தனியே விதைப்பையினுள் மட்டும் இருக்காது. வயிற்றில் இருந்து அரையின் வழியாக வீக்கம் விதைப்பையினுள் செல்வதை அவதானமாகப் பார்த்தால் காணப்படும். கேணியா வீக்கம் பெரும்பாலும் ஓடுதல், முக்குதல் போன்றவற்றினாலும் வெளிவர இடம் உண்டு. அல்லது உருவத்தில் பருமனாகக் காணப்படும். இந்நிலைப்பட்டோர் படுக்கும்போது மறைந்திருக்கும் தன்மையுண்டு.

வேதனை, சுரம், உடல் உழைவு போன்றவற்றுடன் விதைப்பை வீக்கமாகமிருந்தால் அதன் தொடர்பான பகுதியில் கிருமித் தொற்றாகவும் இருக்கலாம். அதனை எப்பிடிடையோ ஓர்க்கைடீஸ் (Epiddymo orchitis) என்ற வேறு ஒரு நோயாகும் எனவும் கூறப்படுகின்றது.

எனவே எதற்கும் வீக்கநிலையைக் கண்டு கவலையடையாது தாமதியாமல் தங்கள் வைத்தியரிடம் சென்றோ அல்லது வைத்திய சாலைக்குச் சென்றோ நன்கு பரீட்சித்துச் சிகிச்சை பெற்றுக்கொள்வது மிக நன்றாகும்.


ஸ்ரீ துர்க்கா மாதா ஜோதிட நிலையம்
SRI DURGA MATHA ASTROLOGY CENTER

மாஸ்டர் :- தேவராஜ
MASTER :- DEVARAJ
Kerala (Choddankiri)








இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் மாஸ்டர் தேவராஜ் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள். கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல்கட்டப்படும்.

ஒரு முறை விஜயம் செய்யுங்கள் உண்மை புரியும்

- கைரேகை • நாமநட்சத்திரம் • கல்வி உத்தியோகம்
- தொழில் வியாபாரம் • வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள் • நீதிமன்ற வழக்குகள்
- பெண்பிள்ளை பெற்றோர் பிரச்சனைகள் • திருமண யோகம்
- குழந்தைப்பாக்கியம் • கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு நாவூறு • ஒன்று கூடுதல்
- சர்ப்ப தோஷம் • கர்ப்ப தோஷம் • கஸ்ட நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்

WORLD FAMOUS INDIAN ASTROLOGER
I CAN HANDLE ANY KIND OF PROBLEMS

We do all kinds of Pujas

- Education & Work
- Business Problems
- Marriage Problems
- Love Problems
- Children Mistakes
- Health
- Money Problems
- Enemy Problems
- Evil Affection
- Sexual Problems
- Horoscope
- Face Reading
- Palm Reading
- Family Matters
- Husband & Wife Reationship
- Court Problems
- Law Problems
- etc..

OPEN 7 DAYS A WEEK / 647-554-5699
416-906-5959

ஒரு முறை விஜயம் செய்யுங்கள் உண்மை புரியும்

5215 Finch Ave. East, Unit #258,
Upstairs, Scarborough ON M1S 0C2
GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)

# ஒற்றைத் தலைவலி இனிமேல் இல்லை

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்**




C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm

## No More Migraine

உடலையும், உள்ளத்தையும் உருக்குலைக்கும் ஒற்றைத்தலைவலி (Migraine) என்னும் உவாதை நவீன வாழ்க்கை முறை காரணமாக வயது வேறுபாடின்றி பலருக்கும் தற்போது அதிகரித்து வருகிறது. சிறு வயதினருக்கும், நடுத்தரவயது ஆண், பெண் அனைவருக்கும் பரவலாக ஒற்றைத் தலைவலி வருவதை காணலாம்.

தலையில் ஒரு பக்கமாக ஏற்படும் இந்த வலி ஒரு சிலருக்கு ஒரு நாளோ, இரண்டு நாட்களோ தொடர்ந்து இருக்கும். மேலும் கழுத்து, தோள் பகுதியில் ஊசியால் குத்துவது போன்ற உணர்வு ஏற்படல், உடல் சமநிலை இழத்தல், பேச்சில் தடுமாற்றம், கண் உறுத்தல், மணம் நுகர முடியாமை போன்றவை இந்த நோய்க்கான அறிகுறி யாகும்.

பொதுவாக சித்த மருத்துவத்தில் ஒற்றைத் தலைவலிக்கான, காரணங்களையும், அதற்கான சிகிச்சைமுறைகளையும் கண்டறியப்பட்டுள்ளன. மனஅழுத்தம், தூக்கம் கெடுதல், குடலில் வாயு அதிகரித்தல், குடல் எரிச்சல், குடலை இயக்கும் அபாணவாயு சீற்றமடைந்து குடல்நீரை தலைக்குத் தள்ளும் போது ஒற்றைத்தலைவலி வருவதுண்டு. அத்துடன் தலையில் காயங்கள் ஏற்படும் போது உருவாகும் நீரானது சூலை நீராகமாறி விஷத்தன்மையடைந்து ஒற்றைத் தலைவலியை உருவாக்கலாம். மேலும் பல்வேறு காரணங்களால் இரத்தம் சூடேறும் போது பித்தத்தின் செயல்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு அது தலையை நோக்கி மேலேழும்பும்போது இந்த மைக்கிறேன் உருவாகிறது.

இதன்போது, கண் எரிச்சல், தலைச்சுற்றுதல், வாந்தி, மயக்கம், அதிக வியர்வை என்பன ஏற்படுகிறது.

இவ்வாறு தலையில் தங்கி பல்வேறு உபாதைகளை ஏற்படுத்தும் பித்தநீரானது அவர்களது சுவாசத்தைப் பொறுத்து ஏதாவது ஒரு பக்கத்தில் தீராத வலியை ஏற்படுத்துகிறது. இதனையே ஒற்றைத்தலைவலி அல் லது ஒரு பக்க தலைவலி என்கிறோம். சுவாசத்தை ஒழுங்காக வைத்திருப்பவர்களுக்கு பித்தத்தின் சீற்றத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இயல்பாக இருக்கும். சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இயல்பாக இருக்கும். சுவாசத்தின் ஒழுங்கு தலைக்கு வரும் இரத்த ஓட்டத்தை சீராக்கிவிடுகிறது. இரத்த ஓட்டம் சீராகும்போது பித்தத்தின் இயக்கமும் சீராக இருக்கும். இத்தகைய தலைவலிக்கு (Migraine) வெறும் வலி நிவாரணி மாத்திரைகளை அவ்வப்போது போட்டு வலியைக் கட்டுப்படுத்திக்கொண்டு அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. அது பின்பு பக்க விளைவினை ஏற்படுத்தும். அத்துடன் தூங்கும் நேரங்களில் ஒழுங்கின்மையும் இந்த ஒற்றைத்தலைவலிக்கு ஒரு காரணமாக அமையலாம். மைகிறேன் பாதிப்புள்ளவர்கள் இரவு வேலைகளைத் தவிர்க்க வேண்டும். இரவு வேலை காரணமாக தூக்கம் கெடும்போது இரத்தம் சூடாகி பித்தம் தலையை நோக்கிச் செல்கிறது. எனவே இந்த நோயாளிகளுக்கு முறையான ஓய்வும் நல்ல உறக்கமும் மிகவும் அவசியமாகின்றது.

நேரம்தவறி உண்ணுதல், தூக்கக்குறைவு, அதிக உஷ்ணமுள்ள இடத்தில் வேலை செய்தல், செரியாமை, மலச்சிக்கல், சீரான சுவாசமின்மை போன்றவை ஒற்றைத்தலைவலிக்கு முக்கியகாரணங்கள் ஆகும். அது மட்டுமன்றி மன அழுத்தம், ஓயாத உழைப்பு, கோபமான மனநிலை, நீண்டநேரம் பட்



டினி இருத்தல் (உதாரணமாக உபவாசம்), பித்தத்தை அதிகரிக்கச் செய்யும் கிழங்கு வகைகள், மாப்பண்டங்களை அடிக்கடி உண்ணுதல் போன்ற காரணங்களாலும் இத்தகைய தலைவலி வருவதுடன் வேறு மூட்டு வலிகளையும் ஏற்படுத்தும்.

### ஒற்றைத்தலைவலி (Migraine) குணமாக

இதனைக் குணப்படுத்த சித்த ஆயுள்வேத முறைகளில் பல வழிவகைகள் உண்டு. ஆனால் இது பித்தத்தின் தீவிரத்தன்மை காரணமாக வரும்நோயாக இருப்பதால் வர்மப்பரிகார முறையில் சிகிச்சை பெறுவதே சிறந்தது. சில குறிப்பிட்ட மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட குடிநீர் வகைகள் சூரணங்கள் என்பனவற்றை அருந்துவதாலும், தலைப்பகுதி மற்றும் கழுத்துப்பகுதி வர்மப்புள்ளிகளை (Pressure point) கைகளினால் ஒரு குறிப்பிட்ட விசையில் அழுத்தி அதனை சரிவர இயங்கச் செய்வ தாலும் இதனை முற்றிலும் குணப்படுத்த முடியும்.

### யோகா முறையில்

யோகாசனப் பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு எந்தவிதமான தலைவலிகளும் வருவதென்பதே மிக அரிது. அவற்றுள் சர்வாங்காசனம், சிரசாசனம், ஹலாசனம், தனூராசனம், பஸ்ஸிமொத்தாசனம் போன்றவை பித்தத்தின் அளவை சமப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. மலச்சிக்கலை நீக்கி அபாண வாயுவை உடலிருந்து வெளியேற்றும். இதனால் பித்தத்தின் தீவிரத்தன்மை சிரசிற்கு செல்லாது தடுக்கப்படுகிறது.

### கபாலபாதி - மூச்சுப்பயிற்சி



கபாலபாதி மூச்சுப்பயிற்சி என்பது பிராணயாமப் பயிற்சிகளில் மிகவும் சக்திவாய்ந்த தொன்றாகும். இதனை சுவாச உறுப்புகளைச் சுத்தம் செய்யும் ஒரு மூச்சுப்பயிற்சி யாகப் பார்க்கின்றனர்.

இத்தகைய பயிற்சியை ஒரு யோகாசன நிபுணருடன் கேட்டுத் தெரிந்து கொண்டு முறைப்படி பயிற்சி செய்வதுதான் சிறந்தது. இருதய நோய் உள்ளவர்கள் இதனைச் செய்யக் கூடாது. மூச்சுக்காற்றினை வேகமாக உள்ளி ழுத்து பின்அதனை விரைவாக உதறுவது தான் செயல்பாடு. இதனை தினமும் குறிப்பிட்ட நேரம் வெறும் வயிற்றில் சிறிதளவு நீர் அருந்தியபின் செய்துவரவேண்டும். தலைப் பகுதியிலிருந்து அழுக்குகள் வெளியேற்றப்படுகிறது. போதிய பிராணவாயு தலைப் பகுதிக்குச் செல்வதால் அங்கு சுத்த இரத்தம் வந்தடைகிறது.

பித்தமானது கட்டுக்குள் இருக்க உதவுகிறது. இதனால் ஒரு சில நாட்களிலே ஒற்றைத் தலைவலியானது குறைந்து செல்வதைக் காணலாம்.

இதைவிடுத்து அதி சக்திவாய்ந்த மாத்திரைகளை உபயோகித்து கடுமையான பக்கவிளைவுகளுக்கு ஆளாகவேண்டாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.






## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



### 3. பிளாங் யுகம். (தொடர்ச்சி)

எங்களது பேரண்டத்தின் பரிணாம வளர்ச்சியிப் பாதையில் பேரண்டம் காலத்திற்குக் காலம் குறிப்பிட்டுக் கூறக் கூடியதான மாற்றங்களை அதன் இயல்பில் ஏற்பட்ட மாற்ற ங்களினால் அடைந்து கொண்டு வந்தது. ஒரு குறிப்பிட்ட மாற்றத்திற்கான காலப்பகு தியை யுகம் எனக் குறிப்பிடுகிறார்கள். அதன்படி, பேரண்டத்தின் முதல் நிலையிற் கான கால இடைவெளியாகப் பிளாங் காலம் இருக்க, அதனைப் பிளாங் யுகம் என அழைக்கிறார்கள்.

யுகம் என்ற பதம் நாங்கள் அறிந்த ஒன்றுதான். பொதுவாக, யுகம் என்பதை நீண்டதோர் காலப்பகுதியாகக் கருதுவதுண்டு. இந்து சமயத்தவரின் கருத்துப்படி, யுகம் என்பது சராசரியாக 420,000 வருடங்களைக் கொண்டது எனலாம். இப்போது கலியுகம் நடக்கின்றது. கலியுகம் ஆரம்பமாகி, 5000 வருடங்களுக்கு மேலாகிவிட்டது எனக் கணக்குக் காட்டுகிறார்கள். அது முடிவடைவதற்கு இன்னமும் நீண்ட காலம் உள்ளது. அப்படியிருக்க, வெறும் பத்தின் மறை 43ம் அடுக்கு செக்கனே கொண்ட, சிறிய காலப்பகுதியை யுகமெனக் கூறுவது எங்களுக்குச் சிக்கலாக இருக்கலாம். ஆனால் இச்சிறிய காலப்பகுதி என்பது ஒப்பீட்டளவில் நாங்கள் குறிப்பிடும் யுகத்தினையும் விடப் பெரியதாக இருக்கக் கூடிய விஞ்ஞானக் கணித ஒப்பீட்டுமுறை ஒன்றும் உள்ளது.

1905இல் அயன்ஸ்ரைன் சிறப்புச் சார்புக் கொள்கையின் வாயிலாகக் கொடுத்த நேரக் குறுக்கம் என்பதை ஞாபகத்திற்குக் கொண்டு வாருங்கள். தெளிவொன்று பிறக்கும். இந்த நேரக் குறுக்கம் பற்றிய கதை ஒன்றும் கூறுவார்கள். ஒருதடவை அயன்ஸ்ரைனிடம் நேரக் குறுக்கம் பற்றி எளிமையாக விளக்குமாறு வினவப்பட்டதாம். ஒருகணம் சிந்தித்தவர், கொடுத்த விளக்கம் நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியதாக இருந்தது. "அழகான இளம் பெண்ணுடன் பூஞ்சோலையில் அருகருகே இருந்து பாருங்கள், நேரம் போவதே தெரியாது. மூன்று மணித்தியாலங்கள் கூட, மூன்று வினாடியிலும் குறைவாகக் கழிவது போலத் தெரியும். இதனை ஒத்ததுதான் நேரக் குறுக்கமும்" என்றாராம். இதுபோன்ற விளக்கமே பிளாங் யுகமும் கொண்டிருக் கின்றது.

நேரம் என்பது தனித்துவமானது அல்ல என்பது எங்களுக்குத் தெரியும். சார்புக் கொள்கையின் வழியில், பெரும் திணிவுகளின் அருகில் நேரம் மெதுவாக நகரும். எடுத்துக் காட்டாகப், புவியின் மேற்பரப்பில் நேரம் நகருவதை விடக் கதிரவனின் அருகில் மெதுவாகவே நகரும். இதை எப்படி விளங்கிக் கொள்ளலாம் என்றால், புடவியின் மேற்பரப்பில் இருக்கும் எங்களுக்கு ஒரு மணித்தியால நிகழ்வு ஒன்று கதிரவனின் அருகில் ஒருமணித்தியாலத்தையும் விடக் குறைவான ஒன்றாக (ஒரு பேச்சுக்கு 56 நிமிடங்கள்) இருக்கும். கதிரவனையும் விடப் பாரமான பொருட்களின்அருகே அது இன்னமும் குறைவாக, (20 நிமிடமென) இருக்கும். இப்படித் திணிவு (பாரம்) அதிகரிக்க அதிகரிக்க, அப்பொருளின் அருகில் நேரம் மெதுவாக ஓடும். மிகவும் பாரமான பொருட்களான கருந்துளைகளின் மேற்பரப்புகளின் அருகில் நேரம் நகராது கிட்டத்தட்ட நின்றே விடும்.



உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான வி‘யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


இப்படியாக நேரம் கழிவது அது இருக்கிற இடத்திலும் தங்கியுள்ளது. ஆரம்பப் புடவி மிகவும் சிறியது. புடவியின் முழுத்திணிவும் அச்சிறியதினுள் முடங்கியிருப்பதால், அதன் திணிவு மிக மிகப் பெரியதாக இருக்கும். அதனால், அங்கு நேரம் கழிவது மிகவும் மெதுவாக இருக்கும். எனவே, ஆரம்பப் புடவியின் திணிவு கருத்திற் கொள்ளப்பட, பத்தின் மறை 43ம் அடுக்கு செக்கன் நேரம் என்பது, இன்று புவியின் அருகில் பார்க்கும் அல்லது கதிரவனின் அருகிற் பார்க்கும் 420,000 வருடங்களின் கணக்கிலும் அதிகமானதாக இருக்கும். எனவே பிளாங் யுகத்தினை மிகவும் சிறிய காலம் என்று கருதி ஒதுக்கிவிட முடியாது. பிளாங் யுகத்தில் பிரபஞ்சத்தினுள் என்ன நடந்தது என்பது பற்றித் தெரியாத போதிலும், சில விடயங்களை 'இப்படியிருக்கலாம்' என்பது போலச் சில விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். மிகச் சுவாரசியமாக இருக்கும் அவ் விடயங்களையும் இப்போதே பார்த்து விடுவோம். எங்களது பேரண்டத்துள் உள்ளவை எல்லாவற்றையும் இயற்கை தன்னுடைய 4 விசைகளினால் இப்போது ஆண்டு கொண்டு இருக்கின்றது. அவை ஈர்ப்பு விசை, வலிந்தவிசை, மெலிந்தவிசை, மின்காந்த விசை ஆகிய நாலு இயற்கை விசைகளும் ஆகும். பிளாங் யுகத்தில் பேரண்டத்துள் இந்த நாலு விசைகளும் தனித்தனியாக இல்லை. பிரபஞ்சம் அப்போது கொண்டிருந்த பெரும் வெப்பம், அந்த நாலு விசைகளையும் ஒன்றாக்கி தனிஒரு விசையாகக் கட்டிப் போட்டு விட்டது. அதாவது பிரபஞ்சத்தின் பிளாங் யுகத்தில் இந்த நாலு விசைகளும் ஒன்றிணைந்து ஒருவிசையாக இருந்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். இந்தத் தனிவிசையினை மேம்பட்டவிசை (Unified Force) என்கிறார்கள். இந்த மேம்பட்ட விசை என்ற கருதுகோளை, பிரபஞ்சத்தின் பரிணாம மாற்றங்களின் ஆரம்ப ஊற்றாக இருக்கின்றது. பிளாங் யுகத்தின் பின்னராகப், புடவியின் விரிவுடன் அதன் வெப்பநிலை குறைந்து கொண்டு வருகையில், நாலு இயற்கை விசைகளும் தகுந்த வெப்பநிலைகளில் தனித்தனியாகப் பிரிந்து தத்தமது வேலைகளைச் செய்ய ஆரம்பித்து, இனம் காட்டிக் கொண்டனவாம். அதன் அடிப்படையிலேயே மேம்பட்ட விசை என்ற கருத்து உண்டானது.

மர்மமான ஒன்றாகப் பிளாங் யுகம் இருக்க, என்ன மாதிரியெல்லாம் அதனை இந்த விஞ்ஞானிகள் துப்புத் துலக்குகின்றார்கள் பாருங்கள். இந்த மேம்பட்டவிசையினால் புடவி ஒருவித சமச்சீர்த்தன்மையில் இருந்திருக்கின்றது. அச்சமச்சீர்த் தன்மையை, அப்போது புடவி கொண்டிருந்த வெப்பநிலை பேணிக் கொண்டு இருந்தது. ஆனால், தனது வெப்பநிலையைப் பிரபஞ்சத்தால் பேண முடியவில்லை. காலத்துடன் பேரண்டம் விரிந்து கொண்டே வந்தால், விரிவுடன் வெப்பநிலையும் வேறு வழியின்றிக் குறைந்து கொண்டே வந்தது. விரிவுடன் வெப்பநிலை குறைந்து கொண்டு வருகையில் சமச்சீர்த் தன்மையில் சிதறல்கள் ஏற்பட்டுப் புடவி வெவ்வேறு வகையான சமச்சீர்த்தன்மைகளைக் கொள்ள வேண்டி வந்தது. காலத்திற்குக் காலமான இச்சமச்சீர்த் தன்மைகளின் உடைவுகளே பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தை ஆக்கின. ஆக, இங்கு கூறப்படுகின்ற சமச்சீர்த் தன்மை என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது என்பது வெளிப்படையாகிறது. சமச்சீர்த்தன்மை என்பது இயற்பியலில், அதுவும் ஆரம்பப் பேரண்டத்தில் முக்கியமான கணிதக் காட்டாகும். இந்தச் சமச்சீர் பற்றியும் சிறிது தெரிந்து கொள்வோம்.

### சமச்சீர்த் தன்மை

கண்ணாடியில் தோன்றுகின்ற விம்பத்தைக் கண்டிருப்பீர்கள். இதனைக் கண்ணாடிச் சமச்சீர் என்கிறார்கள். கண்ணாடியின் விம்பமும், பொருளும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கும். இடம் வலம் மட்டும் மாறுபட்டுக் காணப்படும். இன்னொரு சமச்சீரினைப் பார்ப்போம். ஒரு வட்டத்தினை வரையுங்கள். அதன் ஒரு விட்டத்தினை (மையப் புள்ளியாகச் சென்று வட்டத்தின் வளைந்த கோடுகளைத் தொடுகின்ற நேர் கோடு) வரையுங்கள். இப்பொழுது வட்டத்தின் இரண்டு துண்டுகளும், அதன் விட்டம் தொடர்பாக ஒரே மாதிரியாக இருக்கும். விட்டத்தினை எப்படி வரைந்தாலும் வட்டத்தின் இந்த இயல்பு மாறாது. ஆதலினால், வட்டம் அதன் விட்டம் குறித்துச் சமச்சீரானது என்கிறார்கள். இப்படியாக, ஒரு தொகுதியினை ஒரு மாற்றத்தினால் அல்லது மாற்றத்தின் பின்னர் எந்த நிலையில் இருந்து பார்த்தாலும் அதில் மாற்றமில்லை என்றால், அத்தொகுதியை அந்த மாற்றம் குறித்துச் சமச்சீரானது என்கிறார்கள் கணித விற்பன்னர்கள். வெற்றிடத்தில் ஒளியின் வேகம் என்பதும் ஒரு சமச்சீர்த் தன்மையதுதான். வெற்றிடத்தில் எத்திசையில் சென்றாலும், எந்த ஒரு பொருள் அதன் வேகத்தினை நோக்கினாலும் அதில் மாற்றமில்லை.

செக்கனுக் 3 இலட்சம் கிலோமீற்றர்கள் என்பது மாறாது. எனவே ஒளியின் வேகமானது சமச்சீரானது எனக் கொள்ளலாம். நான் கூறியது சமச்சீர் பற்றிய மிக எளிதான விளக்க எடுத்துக்காட்டு. ஏராளமான சமச்சீர்த் தன்மைகள் உண்டு. சமச்சீர் என்பது கணிதவியலில் ஒரு சிறப்பான பகுதியாக இருக்கின்றது. எங்களைப் பொறுத்த வரையில் இந்த விளக்கம் போதுமானது. இதிலிருந்து மீதியை அடுத்த தடவையிற் தொடருவோம்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.

Contact: 647 340 9490/ 416 732 2228



# வாழ்க்கையில் வெற்றி

- ஞானா உருத்திரன் -

வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி என்பதே இன்றைய வாழ்க்கையின் பிரதான கேள்வியாகும். முதலில் எமக்கு எப்படிப் பட்ட வெற்றி வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். எமக்கு எது தேவை? நாம் என்னவாக இருக்க அல்லது ஆக விரும்புகிறோம் என்பதை நாமே முடிவு செய்ய வேண்டும். மக்களில் பலருக்கு வாழ்க்கையில் எந்த நோக்கமோ, குறிக்கோளோ இல்லாமலிருப்பதை நாம் பார்க்கின்றோம். அதனால் அவர்களுடைய அந்த வாழும் காலம் அவர்களுக்கு மகிழ்ச்சியானதாக இருப்பதில்லை. அவர்கள் எதையும் அடைவதில்லை.

முதலில் நாம் எமக்கென்றொரு இலக்கை அல்லது குறிக்கோளை உருவாக்கிக் கொள்ளவேண்டும். விதி வழியேதான் வாழ்க்கையும் செல்லும் என்பதை பலர் நம்பிக் கொண்டுதானிருக்கின்றார்கள். ஆனால் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வை அவனது விருப்பம் போல மாற்றிக்கொள்ளலாம்.

நீங்கள் கவனித்திருக்கலாம் தனது திறமைகளை நம்பும், எதிர்காலத்தைபற்றிய சிறந்த எதிர்பார்ப்புகளை வைத்திருக்கும் மனிதர்களின் வாழ்க்கை வெற்றிகரமாக இருப்பதை. இது எவ்வாறு சாத்தியமாகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம். நாம் முதலில் எமது விருப்பத்தை அல்லது இலக்கை முழுமையாக எழுதுதல், இதில் ஒரு முறை இருக்கின்றது அது அகக்காட்சிப் பலகை (vision board) என்பது. அது எமது விருப்பங்களின் தொகுப்பைப் படங்களாகச் சேகரித்து ஒரு கடதாசி அட்டையில் (Bristol board/ Card board) அவற்றை ஒட்ட வேண்டும்.




அப்படி படங்கள் ஒட்டப்பட்ட அந்த அட்டையை எமது கண்ணில் அடிக்கடி படக் கூடிய ஓர் இடத்தில் வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் எமது மூளை அனைத்தையும் படங்களாகவே பதிவு செய்து ஆழ்மனதிற்கு அனுப்பும். அந்தப்படங்களை நாம் மீண்டும், மீண்டும் பார்க்க வேண்டும். இதை ஒரு மகிழ்ச்சியான விளையாட்டாகச் செய்யலாம். அந்த அட்டையைப் பார்க்கும் போது அவற்றைப்பற்றி ஒரு நம்பிக்கையான சாதகமான அல்லது நேர்மறையான எண்ணங்களை உருவாக்க வேண்டும். நீ தனிமையில் இருக்கும்போது எதை எண்ணுகிறாயோ அதையே வாழ்க்கையிலும் ஈர்ப்பாய் என்கிறார் விவேகானந்தர். ஆதலால் எமது எண்ணங்களை நேர்மறையானதாக வைத்திருக்க வேண்டும். அகக்காட்சிப் பலகையைப்போலவே நாம் உறுதி மொழிகளை எழுதுவது இன்னொரு முறையாகும். இந்த உறுதிமொழிகள் (affirmation) நேர்மறையானதாக இருக்கவேண்டும். உதாரணமாக நான் தன்னம்பிக்கை உள்ளவன் அல்லது உள்ளவள் என்ற நம்பிக்கையை நீங்கள் கொண்டிருப்பீர்களானால் அந்த உறுதி மொழி உங்கள் ஆழ்மனதில் பதியப்பட்டு அகத்தூண்டுதல் மூலம் உண்மையிலேயே உங்களை தன்னம்பிக்கை உள்ள நபராக மாற்றும். அதாவது தன்னம்பிக்கையை இழந்த ஒருவர் கூட இந்த உறுதிமொழிகளை சொல்லும்போது அவை ஆழ்மனதில் பதியப்பட்டு அவரைத் தன்னம்பிக்கை உள்ளவராக மாற்றிவிடும். உறுதிமொழிகள் மந்திரம் போன்று செயற்படுபவை. உதாரணமாக நீங்கள் ஒரு வேலைக்கான நேர்காணலுக்கு அல்லது அது போன்ற ஒரு விடயத்திற்கு செல்லும்போது உங்களிடம் தன்னம்பிக்கை இல்லையெனில் அந்தக் குணாதிசயம் எதிரில் இருப்பவரால் சரியாக உணரப்படும். ஆனாலும் நீங்கள் நேர்மறை உறுதி மொழிகளின் மூலம் தன்னம்பிக்கை அடைய முடியும். அப்படி அடையும் உங்களை நேர்முகம் செய்யும் அதிகாரிகள் நீங்கள் தன்னம்பிக்கையுள்ளவர் என உணர்ந்து கொள்வர். அதனால் நீங்கள் தகுதியானவராகக் கருதப் படமுடியும்.

ஞானா உருத்திரன். மருத்துவ துறையில் கல்வி கற்று உயிரியல் மருத்துவ (Bio Medicine) துறையில் முது நிலை பட்டப் படிப்பை முடித்து இருக்கிறார். Healing மற்றும் energy work போன்றவற்றை முழுமையாகப் படித்து இத்துறைகளில் மக்களுக்காக சேவை செய்து வருகிறார். தகவல்களை இணையத் தளத்தில் காணலாம்.

http://gnanauruthiren.com/tamil/

எதைப்பற்றியும் நாம் நம்பும் எமது நம்பிக்கைகள் எம் வாழ்வை பிரதிபலிக்கின்றன. நாம் பலமானவர் அல்லது பலவீனமானவர் என்பவை அப்படியே ஆகின்றன. அதனால் எமது நம்பிக்கைகளை நல்லனவாக நேர்மறையானதாக நாம் வைத்திருக்க வேண்டும். எமது நம்பிக்கைகளை நமக்கேற்ப உருவாக்குவதற்கு இந்த உறுதிமொழிகள் உதவுகின்றன. நாம் இந்த உறுதிமொழிகளை உருவாக்கும்போது எமக்கு எது வேண்டுமோ அதைபற்றி நேர்மறையாக இந்த விடயம் வேண்டும் எனப் பொருள்

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)



# “இலங்கை...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

அதுமாத்திரமன்றி யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் நூலகத்தில் இருந்த பெறுமதிவாய்ந்த தமிழ் நூல்களும் எரித்து நாசமாக்கப்பட்டதை அறிந்து மனம் வருந்தினேன். அந்நூலகத்துக்கு அதிகளவு நூல்களை அனுப்பி வைக்கவும், அங்குள்ளோரின் கல்வி வசதிக்கு உதவவும் நான் எண்ணி உள்ளேன்.

யுத்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட இடங்களை அபிவிருத்தி செய்வது அத்தியாவசியமாகும். வட பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு மீண்டும் தமிழ் மக்களின் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும். அபிவிருத்தி செய்வதற்கு நாங்களும் உதவி செய்வோம். கனடாவில் வாழும் தமிழ் மக்கள் மாத்திரமன்றி ஏனைய மக்களும் உதவி செய்யத் தயாராக உள்ளனர்” என்றார். ஹரி ஆனந்தசங்கரி எம்.பி., லோகன் கணபதி, நீதன் சான் ஆகியோருட்பட மற்றும் பலரும் அங்கு உரையாற்றினார்கள்.



# நாமும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

$917,000 ஆகக் காணப்படுகின்றது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 33% அதிகரிப்பு. ஆனாலும், இதனை சுற்றியுள்ள நகரங்களான ஹமில்டன் (Hamilton), வோட்டர்லூ (Waterloo), Barrie, Peterborough, இலண்டன், வன்கூவர் போன்ற பகுதிகளிலும் விலை 20% அதிகரித்துள்ளது. இந்தப் பகுதிகளின் விலை இவ்வாறு அதிகரிப்பு முன்பு ஒருபோதும் இருந்ததில்லை. கடந்த வருடத்தில் தனி வீடுகளின் விலை மட்டும் அதிகரிக்கவில்லை. அடுக்குமாடி மனைகளின் விலையிலும் இவ் அதிகரிப்பைக் காணலாம். ஒன்றிற்கு மேற்பட்ட பல வாங்குனர்கள் ஒரே மனைக்குப் போட்டி போடுகின்றார்கள். (Multiple Offer) இதனால் சாதாரண மக்களால், இந்தச் சுமையை தாங்க முடியாமல் போகின்றது.

மத்தியவங்கி ஆளுனர் திரு. ஸ்ரீபன் போலஸ் உம் ரொறொன்ரோ விலை அதிகரிப்புப்பற்றி கரிசனை தெரிவித்துள்ளார். வீட்டு விலை ஏறும். இதனால் உழைக்கலாம் (Speculation) என வாங்குபவர்களே அதிகம் காணப்படுகின்றார்கள் என்ற நிலைமை இருப்பதாகவே தோன்றுகின்றது. இதனால், இன்று, வன்கூவரை விட ரொறன்ரோவின் நிலைமையே மோசமாகக் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனால் கனடாவைப் பொறுத்தவரை இரண்டுவித பொருளாதாரமாக நிகழ்கின்றது. ரொறன்ரோ, வன்கூவர் ஒன்றாகவும் மற்றைய நகரங்கள் மற்றொன்றாகவும். இதனால் நாடளாவிய பொருளாதாரக் கொள்கைகள், உதாரணமாக வட்டிவீத அதிகரிப்பு பொதுவான பாதிப்பை ஏற்படுத்தலாம். ஏற்கனவே அதிக கடனைக் கொண்டுள்ள ரொறன்ரோ மக்களின் மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிக்கலாம். இதனால் மாதாந்த கொடுப்பனவில் இறுக்கம் ஏற்படலாம். ஏற்கனவே வருமானத்திற்கு கடன் என்ற விகிதம் 1.67 ஆகக் காணப்படுகின்றது. இதுவே அதிகம். இறுக்கமான நிலைமைகள் ரொறன்ரோ சமநிலையை மாற்றலாம். 15%மான ஒன்ராரியோ மக்கள் ஆதனத்துடன் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். உதாரணமாக ஆதனம் விற்றல், வங்கிகள் பராமரிப்பு, கட்டுதல், நிதி பெறுதல், அடமானக் கடன் காப்புறுதி எனப் பல. இதனால் பொருளாதாரப் பாதிப்பு ஏற்படலாம்.

பலரின் தொழிலில் பாதிப்பை ஏற்படுத்தலாம். தொழில் இல்லாமல் இருப்பவர்களினால் எண்ணிக்கை அதிகரிக்கலாம். அடமானக்கடன், வாகனக்கடன், Line of Credit, கிறடிட் காட் கடன் என யாவற்றின் கொடுப்பனவிலும் தாக்கம் ஏற்படுத்தலாம்.

1989களின் ஆரம்பத்திலும் 1988இன் இறுதியிலும் வருடத்திற்கு 20% அதிகரிப்பு ஏற்பட்டது. இதனால் பணவீக்கம் ஏற்பட்டது. இதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர, மத்தியவங்கி வட்டிவீதத்தை அதிகரித்தது.

ஆதனவியாபாரம் கீழ்நோக்கிச் சென்றது. ஏறக்குறைய 30% இறக்கத்தை 7 வருடத்தில் அடைந்தது. 1998 இலிருந்து மெல்லமெல்ல விலை அதிகரிக்கத் தொடங்கியது. அதன் தொடர்ச்சி இன்றும் தொடருகின்றது. மேலும் இதேமாதிரியான இன்னொரு நிலைமையை இன்றைய கனேடியப் பொருளாதாரம் தாங்காது. இந்நிலைமையை மூன்று அரசுகளும் விரும்பாது. அதற்கேற்ப முடிவுகளை எடுக்க வேண்டிய நிலையிலுள்ளன. எடுக்கப்படும் முடிவுகள் ரொறொன்ரோவையும் அதனைச் சுற்றிய பகுதிகளின் ஆதன வியாபாரத்தை கட்டுப்படுத்துவதாகவே இருக்கலாம்.

வெகுவிரைவில் இதற்கு ஒன்ராறியோ மாகாண முதல்வர் தகுந்த கடிவாளத்தை கையில் எடுத்துள்ளார் என்பதனை அண்மைய அவரின் பேச்சுக்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறான இறுக்கத்தை புதிய வரவு செலவுத்திட்டம் கொண்டுவருகின்றது என்பதனை இந்த மாத முடிவுக்குள் தெரியவரும்.

# கொதிக்கும்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிரடியாக மூடப்பட்டது. ஆனால், அவ்வாறு மூடப்பட்ட கடைகளை சாலையிலிருந்து 500 மீட்டருக்கு அப்பால் உள்ள குடியிருப்பு பகுதிகளில் திறக்க அரசு முயற்சித்து வருகிறது. இப்படி குடியிருப்பு பகுதிகளிலும் கிராமங்களிலும் திறக்க முயற்சிக்கப்படும் அரசு மதுபானக் கடைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழகம் முழுவதும் அந்தந்தப் பகுதி மக்கள் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். அரசு மதுபானக் கடைகள் மூடப்படுவதால் அரசுக்கு ஏற்படும் வருமான இழப்பு ஒரு பக்கம் இருக்க, ஆட்சியைப் பின்னிருந்து இயக்கும் சசிகலா (மிடாஸ் மதுபான ஆலை) குடும்பத்தினருக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் வரும் வருமானம் பாதிக்கப்படும் என்பதால், காவல்துறையை முடக்கிவிட்டு, அரசு மதுபானக் கடைகளுக்கு எதிரான போராட்டங்களை அடக்கப் பார்க்கிறது மாநில அரசு. இதனால் இன்னும் போராட்டம் வீரிய மாகத்தான் ஆகிக் கொண்டிருக்கிறது.

## காலி குடங்கள் போராட்டம்

கடும் வறட்சி காரணமாக தமிழகம் முழுவதும் எல்லா பகுதிகளில் உள்ள நீர்நிலைகளும் வறண்டுவிட்டது. இதனால், நிலத்தடி நீர்மட்டம் சரிந்து போர்வெல்களில் தண்ணீர் வராமல் காற்று வாங்குகிறது. கடும் வெப்பம் காரணமாக ஆறுகள் வறண்டதால் அங்கிருந்து செயல்படுத்தப்படும் கூட்டுக் குடிநீர் திட்டங்களும் செயலிழந்து வருகின்றன. இதனால் கிராம, நகரம், மாநகரம் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லா இடங்களிலும் குடி தண்ணீர் பிரச்சினை தாண்டவம் ஆடுகிறது. தண்ணீர் கிடைக்காத மக்கள் காலிகுடங்களுடன் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அங்கு, இங்கு என இல்லாமல் தமிழகம் முழுவதுமே இதுபோன்ற போராட்டங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.



## மாணவர்கள் எழுச்சி

டில்லியில் நடக்கும் தமிழக விவசாயிகள் போராட்டம், நெடுவாசல் போராட்டம், தஞ்சை விவசாயிகள் போராட்டம் என பலமுனைகளாக நடக்கும் உழவர்கள் போராட்டத்தை மத்திய, மாநில அரசுகள் கண்டுகொள்ளாதது மட்டுமல்ல, நெடுவாசல் போன்ற இடங்களில் அரசு கொடுத்த உறுதிமொழியையே மீறிய நிலையில் தமிழகம் முழுக்க வகுப்பறைகளைப் புறக்கணித்து போராட்டத்தில் குதித்தார்கள் மாணவர்கள். பலத்த காவல் கண்காணிப்பையும் மீறி சென்னை மெரினா கடற்கரைக்குள் மாணவர்கள் நுழைந்தது உளவுத் துறைக்கே ஆச்சரியம். காவல் துறையின் கடுமையான அடக்குமுறை, மிரட்டல்கள் காரணமாக மாணவர்கள் போராட்டம் தற்போது அடக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எந்த நேரமும் அடக்கப்பட்டிருக்கும் அந்த உணர்வு இன்னொரு ஜல்லிக்கட்டுப் போராட்டமாக வெடிக்கலாம் என்பதே உண்மை. இதனால் தொடர் கண்காணிப்பில் இருக்கிறது காவல் துறை. சென்னை மெரினா கடற்கரையில் காவலர்கள் எப்போதும் நின்று கொண்டே இருக்கிறார்கள். இதுபோல் சென்றவாரம் பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் விவசாயிகளுக்கு ஆதரவாக இளைஞர்கள், மாணவர்கள் போராட்டம் நடத்தப் போவதாக வாட்ஸ்-அப்பில் தகவல் பரவியதையடுத்து, அங்கும் காவலர்கள் குவிக்கப்பட்டனர். மைதானத்திற்குள் செல்ல யாரையும் அனுமதிக்கவில்லை. அன்றிலிருந்து காவலர்கள் தொடர்ந்து அங்கு பாதுகாப்புப் பணியில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

## என்று தணியும் இந்த தாகம்?

தமிழக மக்களிடம் முன்பு இயற்கை வளங்கள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருந்தது. அதனால், பெரியளவில் போராட்டங்கள் இல்லை. ஆனால், இப்போது விழிப்புணர்வுடன் கூடிய இளைஞர்கள் எழுந்து வந்துவிட்டனர். அதுவே போராட்டங்களும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளதற்கு முக்கியக் காரணம். இன்று இந்தியாவிலேயே கூடுதல் நெருக்கடியை சந்திக்கும் மாநிலமாக தமிழகம்தான் உள்ளது. தமிழகத்தில் அதிக அளவில் இயற்கை வளங்கள் உள்ளதால் அதனை போட்டி போட்டுக்கொண்டு சுரண்ட அரசியல்வாதிகள் திட்டமிடுகிறார்கள். இதனை இளைஞர்களும் உணரத் தொடங்கியுள்ளனர். தங்களின் தேவையை உணர்ந்த இளைஞர்கள் இப்போது போராட வந்துள்ளனர்.

இளைஞர்களின் இந்த எழுச்சிக்கு முன்னால் அரசியல் இயக்கங்கள் செய்வ தறியாமல் திகைக்கின்றன. போராட்டங்களுக்குப் பெயர்போன கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்பட அனைத்து அரசியல் கட்சிகளும் தங்கள் கொள்கைகளை புதுப்பித்துக் கொள்ள வேண்டிய நேரம் இது. ஆனால், அதனை அவர்கள் எந்தளவு உணர்ந்திருக்கிறார்கள் என்பது கேள்விக் குறிதான்.

# வடஐரோப்பாவில் தேன்நிலவுக்கு அற்புதமான நகரம் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் - 3



சுந்தரம் இந்திரராஜா

10.இரத்தம் சிந்திய இடத்து இரட்சகருமாகிய தேவாலயம் (Church of the Savior on Spilled Blood)

இரண்டாம் அலெக்சாண்டர் பல சீர்திருத்தங்களை ஆரம்பித்து வைத்தார். 1861 ஆம் ஆண்டு அவர் பண்ணை எஜமானர்களிடம் இருந்து அடிமை தொழிலாளர்களை விடுதலை செய்தார். ரஷ்யாவில் இராணுவ, நீதித்துறை மற்றும் நகர்ப்புற சீர்திருத்தங்களை மேற்கொண்டார். எனினும், அவரது சீர்திருத்தங்களை ஒரு குழு புரட்சியாளர்கள் விரும்பவில்லை. அவரது உயிருக்கு ஆபத்துக்களை எச்சரிக்கையாக செய்து கொண்டே இருந்தார்கள்.



இறுதியாக இரண்டாம் அலெக்சாண்டர் தனது அரச குடும்ப வண்டியில் போய்க் கொண்டிருக்கும் போது ஒரு வெடிகுண்டை வீசி படுகொலை செய்யப்பட்டார். ரஷ்யாவின் பேரரசர் இரண்டாம் சார் அலெக்சாண்டர் (Tsar Alexander II of Russia) மார்ச் 01, 1881ல் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் அவரை ஞாபகப்படுத்தும் முகமாக ரஷ்யாவின் மகனான மூன்றாம் சார் அலெக்சாண்டர் அவர்களால் கட்டுவிக்கப்பட்டது இந்தத் தேவாலயம். இப்போது இரத்தம் சிந்திய இடத்து இரட்சகருமாகிய தேவாலயம் (Church of the Savior on Spilled Blood) என அறியப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வண்ணமயமான, குவிமாடங்கள் மற்றும் பளபளப்பான ஓடுகள் கொண்டு ஒரு ரஷ்ய கலை கலாச்சாரப் பாணியில் கட்டப்பட்டது இந்தத் தேவாலயம். இந்தத் தேவாலயத்திற்குள் நடக்கும் போது ஓர் அருங்காட்சியத்திற்குள் நடப்பது போன்ற உணர்வு ஏற்படும். உள்ளே 7000 சதுர மீட்டர் "ஓவியங்கள்" (mosiac) கலை வேலைப்பாடு நிறைந்த சித்திரங்களையும் அங்கு தீட்டப்பட்டுள்ளன. அனைவரும் பார்த்து ஆர்வத்தோடு ரசிப்போம். தேவாலயம் மிகவும் பழமையானதாகத் தெரிகிறது. ஆனால் உண்மையில் அது 100 ஆண்டுகள் மட்டுமே பழைமையானது.

## 11- வெண்கல குதிரை வீரன் (Bronze Horseman)

முதலில் இந்த 1600 தொன் எடையுடைய பெரிய பிரமாண்டமான சிவப்பு கிரானைட் கற்பாறை (Thunder Stone) 1768ம் ஆண்டில் பின்லாந்து வளைகுடா அருகிலுள்ள லக்ரா (Lakhta) என்ற கிராமத்தில் சதுர்ப்பு நிலத்தை நல்ல நிலமாக மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டபோது கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு ஜெர்மனில் பிறந்த இளவரசியான மகா கதரின் (Catherine the Great) அவர் முன்னைய ரஷ்ய முடியாட்சி மன்னர்கள் வரிசையில் தனது தொடர்பையும் காட்டிக் கொள்ள ஆர்வமாக இருந்தார். ரஷ்ய சிம்மாசனத்தில் புகழ்பெற்ற முன்னோடியான சார் மகா பீட்டர் (Tsar Peter the Great) அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இக்கல்லைக் கொண்டு ஒரு சிலையை வடிக்க உத்தரவு பிறப்பித்தார். சிலை அமையவிருக்கும் செனற் சதுர்க்கம் (Senatskaia Ploschad' Square) சுமார் 10கிமீ தொலைவில் இருந்தது. செனற் சதுர்க்கம் வரை இக்கல்லை அசைத்துக் கொண்டு செல்லப் பலவகையான உத்திகளை பாவித்து முடியாத கட்டத்தில் 2 போர்க் கப்பல்களையும் 400 தொழிலாளர்களையும் ஈடுபடுத்தி செனற் சதுர்க்கம் வரை இக்கல்லைக் கொண்டு சேர்க்க 1 வருடத்திற்கு மேல் பிடித்தது.

கல்லை உயர்த்தும் முயற்சியும் தடைப்பட கல்லின் ஒருபகுதி நிலத்துக்குள்ளும் ஒரு பகுதி வெளியிலும் இருக்கக் கூடியதாக விடப்பட்டு, வெளியில் இருக்கும் பகுதியை மட்டும் செப்பம் செய்து அதன் மேல் ஒரு வெண்கலக் குதிரைச்சவாரிச் சிலை பிரஞ்சு சிற்பி எத்தியான் மாரிஸ் ஃபால்கொனட் (Étienne Maurice Falconet) என்பவரால் உருவாக்கப்பட்டது.

குதிரை வீரனான ஸார் மகா பீட்டரை ஒரு ரோமன் கதாநாயகனாக, ரஷ்யா மாநில மிக முக்கியமான சீர்திருத்தவாதியாக சித்தரித்து நிற்கிறது. சிவப்பு கிரானைட் கற்பாறைத் துண்டு ஒரு குன்றின் வடிவத்தைக் காட்டி நிற்கிறது.



இந்தக் குன்றின் மேலே இருந்து சார் மகா பீட்டர் பெருந்தன்மை யுடன் ரஷ்யாவை முன்னோக்கி நகர்த்துவது போலவும், சார் மகா பீட்டர் (Tsar Peter the Great) முன்னெடுத்த அவரது சீர்திருத்தங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் போது தடையாக நின்ற எதிரிகளை பாம்பு வடிவத்தில் அமைத்து பாம்பை அவரது குதிரை மிதித்து நசித்து முன்னேறுவது போலவும் அச்சிலை அமைந்துள்ளது. சிலையின் உயரம் சுமார் 6 மீட்டர் (20 அடி).

கிரானைட் கற்பாறை குன்றின் உயரம் சுமார் 7 மீட்டர் (25 அடி).மொத்த உயரம் சுமார் 13 மீட்டர் (45 அடி). ஃபால்கொனட் தத்துருவமாக சிலையை வடிக்க 14 ஆண்டுகள் வரை பிடித்தன.

நினைவுச்சின்னம் முதலில் சார் மகா பீட்டர் சிலை என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அதன் தற்போதைய பெயர் வெண்கல குதிரை வீரன் (Bronze Horseman). ரஷ்ய இலக்கியங்களைப் படைத்த மிக முக்கிய மானவரான ரஷ்ய கவிஞர் அலெக்சாண்டர் புஷ்கின் 1824 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் வெள்ள அவலத்தை ஒரு கவிதை வடிவில் 1833ஆம் ஆண்டில் வெளியிட்டியிருந்தார்.

அக்கவிதையில் சொல்லப்பட்ட "வெண்கல குதிரை வீரன்" என்ற பெயரை இச்சிலைக்குக் கொடுத்து கவிஞரையும் பெருமைப்படுத்தியுள்ளனர். அந்தக் கவிதையில் நேவா ஆற்றில் வந்த வெள்ளத்தால் தன் காதலி அடித்துச்செல்லப்பட்டு விட அவ்வாறான ஓரிடத்தில் பீட்டர்ஸ்பர்க் நகரை நிறுவியதற்காக அந்தச் சிலைக்கு முன் நின்று புலம்பியபடி அரசனைச் சபிக்கிறான் அந்தக் காதலன்.

உயிர் பெற்றெழுந்து விட்ட அந்தச்சிலையின் குதிரை வீரன், காதலனைத் துரத்திக் கொண்டு ஓட, இறுதியில் ஆற்றோரமாய் உள்ள பாழடைந்த குடிசைப்பகுதி ஒன்றின் அருகே மிதக்கிறது அந்த அப்பாவியின் உடல். அரசாள்பவர்களுக்கும் சாதாரண குடிமக்களுக்கும் இடையே உள்ள இடை-வெளியை, எப்போதும் நிலவும் சாஸ்வதமான போராட்டத்தைப் பதிவு செய்திருக்கும் இந்தக் கவிதை பீட்டர்ஸ்பர்க் நகரின் அழகு, மேன்மை இவற்றோடு அதன் மறு பக்கத்தையும் கூட மறக்கவிடாமல் நமக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கிறது. இச்சிலை இப்போது செயின்ட் பீட்டர்ஸ்பர்க் (St. Petersburg) இன் முக்கிய சின்னங்களில் ஒன்றாகும்.

நினைவுச்சின்னத்தில் பொறித்துள்ள வாசகம் லத்தீன் மற்றும் ரஷ்யன் மொழிகளில் எழுதப்பட்டிருக்கின்றன. இரண்டாம் உலகப் போரின் 900 நாள் முற்றுகையின் போது நினைவுச் சின்னம் (சிலை) மணல் பைகள் மற்றும் மரங்களால் மூடி பாதுகாக்கப்பட்டது. இன்றுவரை பல விருந்தினரைக் கவர்ந்த வண்ணம் இருக்கிறது.

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# மாதுடன் இணையும் மண வாழ்க்கை மங்கலமானது - மாநிலம் பயன் பெற அது வழி செய்யும்



நா. க. சிவராமலிங்கம்

அருளாளர்கள் ஆண்டவனை அம்மை அப்பன் கண்டு களி கொண்டனர். தலைவன், தலைவியாக கணவன், மனைவியாக வாழும் இல்லற வாழ்க்கை இனியது. இன்பம் பயப்பது, இயல்புடைய மூவர்க்கு நல்ல துணையாவது. மக்கள் தொகை பெருகி வாழ்க்கை தொடர்வதற்கு அதுவகை செய்கின்றது. முறைப்படி இல்வாழ்க்கை வாழ்பவன் தவம் செய்வோரிலும் தலையாயவன் கிரகஸ்த நிலை வாழ்வியலின் சிகரம் எனலாம். எனவே வாழ்க்கைத் துணையுடன் கூடி வாழும் தேட நிலை வேண்டிய பெருஞ் செல்வமாகும். எனவே தான் அறனெனப் பட்ட அக வாழ்வினை அவனி மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். அருளாளர்கள் மாதுடன் கூடிய மணாளன் காட்சி நனி சிறந்தது.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச்
சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னை சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

திருவாசகம் பாடிய மணிவாசகர் தமது சக்தியை விட்டு அகலாத தயாளனாகவே ஆண்டவனை கண்டார். இடப்பாகத்தை இறைவிக்கு ஈந்து அர்த்த நாரீசுவராக விளங்கும் ஆண்டவனை பின்வருமாறு பாடியுள்ளார் சம்பந்தன்.

உண்ணாமுலை உமையாளொடும்
உடனா கிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி
திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழ
அதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா
வண்ணம் அறுமே

மலையான் மகளை பாகமாகக் கொண்டு நல்லறமாகிய இல்லற தர்மத்தைக் காட்டியுள்ளார். இறைவன் என்பதும் சம்பந்தன் வாக்காகும்.

மாதர்பிறைக் கண்ணியானை மலையான்
மகளொடும்பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவா ரவர்
பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயாறடைகின்ற
போது
காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன
கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன
கண்டேன்

சுந்தரர் தமது சுந்தரத் தமிழில் மங்கை நல்லாள் இறைவியை இறைவன் கேட்டதை விநயமுடன் விளம்புயுள்ளார்.



குரும்பை முலை மலர்க்குழலி கொண்ட
தவம் கண்டு
குறிப்பினொடும் சென்று அவள் தன்
குணத்தினை நன்கறிந்து
விரும்பும் வரம் கொடுத்தவளை
வேட்டருளிச் செய்த
விண்ணவர்க்கோன் கண்ணுதலோன்
மேவிய ஊர்வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்
பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்
சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளைக் கண்வளரும்
கழனிக்
கமலங்கள் முகமலரும் கலய நல்லூர்
காணே

நெற்றிக் கண்ணுடைய இறைவன் தனது அருந்துணையாக இறைவியைப் பற்றிக் கொள் தனது பெருங்கருணையால் அடியார் படு துயரெலாம் வற்றிவிடசெய்வான்.

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்
துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவில்
மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி பாடுதுங்காண்
அம்மானாய்

நால்வருக்குப் புறம்பாக மாதுக்கு நாதன் இறைவன் என்பதனை உறுதியாக உரைக்கி ன்றார் திருமூலர்.

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக்கும் நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக்குள் தென்திசைக்கொரு வேந்த
னாம்
கூற்றுதைத் தானையான் கூறுகின்றேனே.

# EDUCATION

## Review Questions17-8

➢ **PHYSICS 11**

A piano note, $A_2$ has to be tuned to its proper frequency 110Hz. If you have a tuning fork whose frequency is 220Hz, how should you do the adjustment?

➢ **PHYSICS 12**

A thin film coated on one side of a glass lens to reduce reflection from lens surface. Determine the minimum thickness of the coating that eliminates the reflection. Assume the index of refraction of the coating material 1.32, and glass 1.5., wavelength of light =550nm, light approximately perpendicular to the lens surface.

➢ **ORGANIC CHEMISTRY 12**

Synthesize the following compounds from 1-propanol.

(i)Propene (ii) Propanal (iii) proponoic acid (iv)2- proponol (v) 2- bromopropane (vi) Propanone

➢ **CALCULUS 12**

Find the limits $\lim_{x\to 0}\dfrac{ax^2+bx+c}{cx^2+bx+a}$ (ii) $\lim_{h\to -4}\left(\dfrac{\frac{1}{4}+\frac{1}{h}}{4+h}\right)$ (iii) $\lim_{x\to 1}\dfrac{x^6-1}{x^{10}-1}$


Answer key
17-8 next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

## Answer Key : 17-6

➢ **CALCULUS & VECTORS 12**

$f_{(x)} = -4x^2 + 12x$

$= -4x(x-3)$, zeroes are 0 & 3




Consider the length of the rectangle 2a
Point X ( (1.5-a), h)

$f_{(1.5-a)} = h = -4(1.5-a)^2 + 12(1.5-a)$

$h = -4a^2 + 9$

$width = 2a$

$Area = (-4a^2+9)2a$

$\frac{d_A}{d_a} = (-24a^2 + 18)$

$-24a^2 + 18 = 0$ ; $-6(4a^2-3) = 0$

By solving a = 0.87 ; 2a = 1.74

By substitution $h = 5.97$

∴ dimensions 1.74 x 5.97

(ii) (a) By observation the planes are not collinear to each other.

(b) If $\vec{n_1} \cdot \vec{n_2} \times \vec{n_3} = 0$ ⇨ co planar

[ 2,3,-4]. [1,-1,3] × [5,-5,15] = ?

[ 2,3,-4]. [1,-1,3] × [5,-5,15] = 0

(c) Check for line of intersection:

This system is inconsistent and not solvable.

✓ **CHEMISTRY 12**

1. (i) $K_b = K_w / K_a = 5.26 \times 10^{-10}$ ($pK_a$=4.72 )

$N_3^- + H_2O \rightarrow HN_3 + OH^-$

| | $N_3^-$ + | $H_2O$ → | $HN_3$ + | $OH^-$ |
|---|---|---|---|---|
| *I* | 0.2 | - | - | - |
| *C* | -x | | +x | +x |
| *E* | (0.2- x) | | x | x |

$K_b = [HN_3][OH^-]/[N_3^-]$ ;
$[OH^-] = 1.03 \times 10^{-5}$ mol/L ;
pOH = 4.98 ; pH = 14-4.98 = 9.02

2). $HC_3H_5O_3 + NaOH \rightarrow NaC_3H_5O_3 + H_2O$
*(0.18- x )* *x* *x* *x*

pH = pKa + log $[NaC_3H_5O_3]$ / $[NaC_3H_5O_3]$

$x$ = 0 .16 mols

➢ **BIOLOGY 11**

Deletion, duplication, inversion and translocation.

Among the 4 types of chromosomal damages, translocation affect more than one chromosome. Translocation occurs when a piece of one chromosome breaks off and is transferred to a new location on another chromosome.

Ajax

CREMATORIUM & VISITATION CENTRE INC.

Crematorium Operated by Park Lawn Corp.

# Now Open in Ajax

## New Crematorium / Visitation Centre




**Serving our Community at:**

384 Finley Avenue Ajax, ON L1S 2E3

Tel: 289-372-3300 / *info@acvc.info*

## பார்வைக்கு வைக்கும் இடமும் தகனம் செய்யும் இடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது

- 500 பேர்வரை அமரக்கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய மண்டபம்.
- ஒரே இடத்தில் குறைந்த செலவுடன் நிறைந்த மன திருப்தியுடன் உங்களது அன்புக்குரியவரின் இறுதிக்கிரிகைகளை உங்களது சமய முறைப்படி நிறைவேற்றலாம்.
- தகனக்கிரிகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் நிறைவேற்றலாம்.
- 250 ற்கு மேற்பட்ட வாகனத்தரிப்பிட வசதி.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.



# Another New Project By TRIDEL BUILT FOR LIFE

AT BLOOR Islington Station ETOBICOKE

Starting From $282,500



Coming Soon!

Completion Early 2021

## FINAL PHASE

A MASTER PLAN COMMUNITY IN ETOBICOKE

*For More Info Please call our Office @ 416-321-6969*

## HomeLife/GTA Realty Inc. Brokerage*

*5215 Finch Ave East. Unit#203 Toronto ON M1C 0C2*

*Welcome our new sales reps. who joined our team in March 2017*

**SATYA SHARMA**
Sales Representative
Cell: 647-885-7415
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Office: 416-321-6969
5215 Finch Ave E. Unit#203
Toronto ON M1S 0C2
*Independently Owned & Operated

**SHANG FLORA**
Sales Representative
Cell: 647-886-9982
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Office: 416-321-6969
5215 Finch Ave E. Unit#203
Toronto ON M1S 0C2
*Independently Owned & Operated

**AGGASH MOHAN**
Sales Representative
Cell: 647-530-5609
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Office: 416-321-6969
5215 Finch Ave E. Unit#203
Toronto ON M1S 0C2
*Independently Owned & Operated

**VASANTA RAVIENDREN**
Sales Representative
Cell 416-716-1540
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Office: 416-321-6969
5215 Finch Ave E. Unit#203
Toronto ON M1S 0C2
*Independently Owned & Operated

**THANUJA THARMALINGAM**
Sales Representative
Cell 416-857-1503
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Office: 416-321-6969
5215 Finch Ave E. Unit#203
Toronto ON M1S 0C2
*Independently Owned & Operated

*Experienced and New Sales reps. are welcome to join our successful , energetic and high standard team.*

*To Join our Successful Team Please Call :*

**416.321.6969**

*Independently Owned & Operated

*FREE Real Estate classes starts every week. Teaching by over 25 years experienced Manager.*


Niru®
Niru 30 Years Of Excellence
Niru
HOT
Jaffna Curry Powder
(Roasted)
POUDRE DE CURRY JAFFNA
(PIQUANT)
நிரு
800 g
JAFFNA
HOT CURRY POWDER
(ROASTED)
POUDRE DE CURRY
(PIQUANT)
800 g
ROASTED
CURRY (CHILLI) POWDER
Rôti Curry (piment) Poudre
நிரு
வறுத்த மிளகாய்த்தூள்
800 g
ROASTED
CURRY (CHILLI) POWDER
Rôti Curry (piment) Poudre
நிரு
வறுத்த மிளகாய்த்தூள்
800 g
கனடிய உணவு கட்டுப்பாட்டு தரத்துடன்
கனடாவில் தயாரித்து பொதி செய்யப்பட்ட
நிரு மிளகாய்த்தூள்
சுவை : தரம் : நறுமணம்



கலோரிகள் இப்போது மெனுக்களில் பிரசுரிக்கப்படுகின்றன.

உணவுத் தெரிவுகள் பற்றி பேசுவது சிறந்த வாய்ப்பாகும். சராசரியாக, வயது மற்றும் உடற்செயல்பாட்டு நிலையின் அடிப்படையில், நாளொன்றுக்கு குழந்தைகளுக்கு 1500 கலோரிகளும், வயதுவந்தோருக்கு 2000 கலோரிகளும் பரிந்துரைக்கப்படுகிறது.

ontario.ca/CaloriesOnMenus

ஒன்டாரியோ அரசால் பணம் செலவழிக்கப்படுகிறது

Ontario


# நோபல் பரிசுபெற்ற மலாலாவிற்கு கனேடியக் குடியுரிமை

பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த மலாலா கடந்த 2012ஆம் ஆண்டு தீவிரவாதிகளால் சுடப்பட்டு உயிர் பிழைத்தவர். பெண் குழந்தைகளின் கல்விக்காக போராடி வரும் மலாலாவிற்கு நோபல் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த 2014ஆம் ஆண்டு மலாலாவிற்கு 'கௌரவ கனேடிய குடியுரிமை' வழங்கப்படும் என அப்போதைய பிரதமரான ஸ்ரீபன் ஹாப்பர் அறிவித்தார். அதே ஆண்டில் ஒக்ரோபர் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தீவிரவாத தாக்குதல் நடைபெற்றதால் இந்நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், கனடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ இந்தக் கௌரவ குடியுரிமையை வழங்கும் நிகழ்ச்சியை 2017 ஏப்பிரல் 12ஆம் திகதி நடைத்தினார். இது குறித்து கனடாவிற்கு வரமுன்னர் மலாலா பேசிய போது, 'அகதிகளுக்கு அடைக்கலம் அளிப்பதில் கனடா முன்னணியில் திகழ்ந்து வருகிறது. இதுபோன்று உதவிக்கரம் நீட்டும் அரசாங்கத்திடமிருந்து கௌரவ குடியுரிமை பெறுவது எனக்கு கிடைத்த மிகச் சிறப்பான வாய்ப்பு' எனக் கூறியுள்ளார்.

வரலாற்று சிறப்பு வாய்ந்த செயல்களுக்காக நெல்சன் மண்டேலா, தலாய் லாமா, Aung San Suu Kyi உள்ளிட்ட 6 வெளிநாட்டுத் தலைவர்களுக்கு கௌரவ கனேடிய குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இஸ்லாமிய தீவிரவாதிகள் முஸ்லீம்கள் அல்ல!

கிடைக்கும் முறைப்பாட்டினை விசாரிப்பதற்கு தங்களுக்கு அதிகாரம் இல்லையேல் ஆரம்பநிலையில் அதனை நிராகரித்துவிடுவார்கள். ஆதாரங்கள் இல்லாத முறைப்பாடாக இருந்தாலும் அது நிராகரிக்கப்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. ஆதாரமிருந்தால் அந்த முறைப்பாட்டினை விசாரித்து பின்வரும் வழிகளில் ஏதாவது ஒரு தீர்வினை அல்லது தண்டனையினை வழங்குவார்கள்.

1. தவறான எண்ணங்களினால் உருவான முறைப்பாடாக இருந்தால், இரு பக்கமும் சுமுகமாகப் பேசித் தீர்த்து வைப்பார்கள்.

2. ஆதன முகவர் ஒருவரின் தொழில்துறை சார்ந்த அறிவியல் ரீதியான வளர்ச்சியின்மையால் உருவான தவறுகள் முறைப்பாடாக இருந்தால் அதற்குரிய வகுப்புகள், பயிற்சிகளுக்குச் செல்லுமாறு முகவரை நிர்ப்பந்திப்பார்கள்.

3. முகவர் செய்த தவறுக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்பி விட்டு அதனை பதிவேடுகளில் வைத்திருப்பார்கள்.

4. சில விடயங்களில் தவறினை திருத்திக் கொள்ளுமாறு உத்தரவிடுவார்கள். உதாரணமாக விளம்பரங்களை மேற்கொள்ளும் போது ஏற்படும் தவறுகளை குறிப்பிடலாம்.

5. ஆதன தொழில் தொடர்பான ஒழுக்க நெறிகளை மீறினால் (Fails to comply with code of ethics in real estate professional) அவர்களின் விசாரணை மன்றத்திற்கு அழைக்கப்பட்டு (Discipline Hearing) $25,000 வரை பண தண்டனை மற்றும் பாதிக்கப்பட்டவருக்குரிய இழப்பீடு செலவுகளை செலுத்துமாறு தீர்ப்பும் வழங்கப் படலாம்.

6. தொழில் ஒழுக்க நெறிகளுக்கு அப்பால் தவறு நடந்திருந்தால் மாகாண நீதிமன்றத்தில் முகவருக்கு எதிராக இதேநிறுவனம் வழக்கும் தொடரலாம். அங்கு குற்றம் நிரூபிக்கப்படும்போது, முகவராக இருந்தால் $50,000 வரை தண்டனை பணமும், கம்பனியாக இருந்தால் $250,000 வரை தண்டனையும், இரு வருடங்கள்வரை சிறை தண்டனையும் வழங்கப்படலாம்.

7. முகவரின் அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்படலாம். அனுமதிப்பத்திரம் அடுத்த முறை புதுப்பிக்கும் போது நிராகரிக்கவும் படலாம்.

# வாழ்க்கையில்.....

17 ஆம் பக்கத்தொடர்ச்சி

படும்படி உருவாக்க வேண்டும். உதாரணமாக எமக்கு செல்வம் வேண்டுமென்றால் "எனக்கு செல்வச் செழிப்பும் அபரிமிதமான வாழ்க்கையும் வேண்டும்" எனக் கேட்கலாம். ஆனால் வறுமையும் பற்றாக் குறையும் வேண்டாம் எனக் கேட்கக் கூடாது. எனக்கு கடன் வேண்டாம் எனக் கூறக்கூடாது. எதிர்மறை சொற்களான இவை அதே சூழ்நிலைகளை உருவாக்கும். ஏனென்றால் முதலில் சொன்னது போலவே மூளை எதையும் படங்களாகவே நினைவில் சேமித்து வைக்கும். கடன் வேண்டாம் என்று கூறினாலும் கடன் என்ற அந்த எதிர்மறை சொல் ஒரு படமாகப் பதிவாகி ஆழ்மனதிற்குக் கொண்டு செல்லப்படும். ஆழ்மனம் அந்தப்படத்திற்கேற்ப புற உலகை உருவாக்கும். பணவசதி, செல்வச்செழிப்பு போன்றவற்றை உறுதிமொழியாகக் கூறும்போது பணம், செல்வம் போன்றவை படங்களாக உருவாகி மனதில் பதிவு செய்யப்படும். அவை புற உலகிலும் நிகழும்.

அதேபோல் அகக்காட்சி (visualization) படைப்பு என்பதும் எமது விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு முக்கியமானதாகும். எமது விருப்பம் அல்லது ஆசை ஏற்கனவே நிகழ்ந்து விட்டது போல மனதில் கற்பனை செய்து பார்ப்பது அகக்காட்சிப் படைப்பு எனப்படும். ஏனென்றால் எமது மூளைக்குள் ஒரு விடயத்தை நாம் புகுத்தினோமென்றால் அதை எப்படி அடைவது என மூளை தேட ஆரம்பித்து விடும். ஒரு குறிப்பிட்ட வகை கார் வாங்க வேண்டும் என நீங்கள் நினைத்தால் வீதியில் செல்லும்போது உங்களால் பல தடவை அந்தக் காரைப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் வரும். பசியோடிருக்கும் போது உணவுப் பொருட்களும், உணவகங்களும் அடிக்கடி கண்ணில் படும். ஏனென்றால் நாம் எதைக் கேட்கின்றோமோ அதைக் கொண்டுவருவதில் நமது மனம் சிறப்பாக வேலை செய்கிறது.

அதனால்தான் நாம் ஒரு விருப்பத்தை அது நிறைவேறியது போல எண்ணும்போது உண்மையில் அதை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் எம்மை தேடிவரும். பிரபஞ்சத்தில் நேரம் என்பதே இல்லை. நேரம், காலம் அனைத்தும் மனிதனால் அவன் வசதிக்காக உருவாக்கப்பட்டவையே. அதனால் எதிர்கால ஆசையை, இலக்கை மனதில் இப்பொழுதே நிறைவேறியது போல எண்ணுவது சரியானதே. அது பொய்யாக இருந்தாலும் கால, நேர வர்த்தமானங்கள் அற்ற பிரபஞ்சத்தில் அது நிறைவேறுவதற்கான சந்தர்ப்பங்கள் தேடிவரும்.

ஆனாலும் இவற்றை பின்பற்றி செய்யும் பொழுது நாம் அவற்றை மூளையில் ஒரு பழக்கமான செயலாக மாற்ற வேண்டும். நாம் ஒரு பழக்கத்தை உருவாக்கியிருந்தால் அதை மாற்றுவது கடினம். ஒரு புதிய விடயத்தை மூளையில் ஒரு பழக்கமாகப் பதிவு செய்ய வேண்டுமென்றால் இருபத்தொரு நாட்கள் அதை பின்பற்ற வேண்டும் எனக் கூறுகின்றார்கள். நீங்கள் எதிர்மறையான எண்ணங்களை உருவாக்குபவர் என்றால் அது ஒரு பழக்கமாகிவிடும். அதை மாற்ற வேண்டுமென்றால் நாம் நல்ல எண்ணங்களை உருவாக்குவதை ஒரு பழக்கமாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

அகக்காட்சிப்படைப்பு பல விளையாட்டு வீரர்களால் பயன்படுத்தப்படும் ஒன்று. விளையாட்டுப்போட்டிகளுக்கான பயிற்சிகளில் இது கண்டிப்பாக உண்டு. போட்டியில் வெற்றி பெற்றது போன்ற காட்சியை உருவாக்கிப்பார்ப்பது உண்மையில் சிறப்பாக வேலை செய்கின்றது என்பது பல வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களால் கூறப்பட்ட உண்மை. ஆகவே எமது இலக்கை முதலில் எமது மனதில் கற்பனை செய்து பார்க்க வேண்டும். இது மிகச் சிறப்பான ஒன்று. இதை நான் 20:20:20 எனக் கூறுவதுண்டு. அதாவது உங்கள் இலக்கை இருபது நிமிடம் அகக்காட்சியாகப் பார்த்துக் கற்பனை செய்ய வேண்டும். இன்னொரு இருபது நிமிடம் உறுதிமொழிகளாக எழுதி வாசிக்க வேண்டும். அடுத்த இருபது நிமிடம் அகக்காட்சிப்பலகையில் படங்களாக




ஒட்டி வைத்துப் பார்க்க வேண்டும். இப்படி செய்தால் நிச்சயமாக மூன்று வாரங்களில் எமது இலக்கு நிறைவேறுவதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளும் எம்முன் உருவாகும். அத்துடன் எமது சக்திநிலையிலும் முன்னேற்றம் ஏற்படும். இதனைக் காலையில் எழுந்தவுடனும் செய்யலாம். இரவு உறக்கத்திற்கு செல்லுமுன்னும் செய்து பார்க்கலாம். இருபது நிமிடம் செய்வது மிகவும் நல்லது இல்லையெனினும் ஒரு பத்து நிமிடமாவது இவற்றை பயிற்சி செய்ய வேண்டும். இந்தப் பயிற்சி செய்யும் நிமிட நேரங்கள் உங்களுக்காக நீங்கள் எடுத்துக் கொள்ளும் நேரம் ஆகும். இது உங்கள் வாழ்க்கைப்போக்கையே மாற்றிவி டும்.

மேலே சொல்லப்பட்டவை அனைத்தும் எமது மனதை இலக்கு நோக்கி தயார்படுத்தும் செயற்பாடுகளாகும். ஆனால் அடுத்த முக்கியமான விடயம் செயல். நாம் விரும்பும் விடயத்தை நோக்கிக் காலடி எடுத்து வைக்க வேண்டும். அதற்கான செயல்களை செய்ய வேண்டும். நீங்கள் ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்க விரும்புகின்றீர்கள் என்றால் அதற்கான முதல் செயல்திட்டங்கள் பற்றி அறிய வேண்டும். இதற்கு எமது உள்ளுணர்வை நாம் பயன்படுத்தலாம். எமது விருப்பத்தை இதயபூர்வமாக நினைத்து அமைதியான முறையில் அதைப்பற்றி சிந்தித்தால் எமது உள்ளுணர்வு எமக்கு உதவி செய்யும். இந்த உள்ளுணர்வு பலருக்குப் பல நேரங்களில் வழிகாட்டுகின்றது. பலர் இதைப் பல பெயர்களில் கூறுவார்கள். சிலருக்கு உள்ளுணர்வு அதிகமாகவும் சிலருக்குக் குறைவாகவும் இருப்பதுண்டு. அதிக அளவில் உள்ளுணர்வில் இயங்குபவர்கள் இந்தச் சக்தியை வளர்த்துக் கொண்டிருப்பார்கள். இவற்றை வளர்த்துக்கொள்ள பல முறைகள், பயிற்சிகள் என்பன உண்டு.

இதை எமக்குள் சிறப்பாக நாம் உருவாக்கிக் கொண்டோமானால் எந்த செயலிலும் எமக்கு சிறந்த வழிகாட்டல்கள் கிடைக்கும். உள்ளுணர்வை ஒரு வழி காட்டும் குரு என்றே கூறலாம். இது எமது அனைத்து நியாயமான விருப்பங்களையும் நிறைவேற்றும். இந்தக் குரல் எமது மூளையிலிருந்து வருகின்றதா அல்லது இதயத்தைச் சார்ந்ததா எனப் பார்க்க வேண்டும். இதயபூர்வமான உள்ளுணர்வே பின்பற்றப்பட வேண்டும். மூளையிலிருந்து தொடர்சியாக வரும் எண்ணம் உள்ளுண ர்வு ஆகாது. இதயத்திலிருந்து வரும் உணர்வுகள் நேர் மறையானதாவும் அன்பானதாகவும் மட்டுமே இருக்கும். மனதிலிருந்து வருபவை பயம், கவலை போன்ற எதிர்மறையானதாகவும் இருக்கும். இதயம் சார்ந்த உள்ளுணர்வு படிப்படியாக வரும். உள்ளுணர்வை சிலர் உள்குரல் என்றும் இதயத்தின் குரல் என்றும் சொல்வார்கள். உள்ளுணர்வு உங்களுக்குள்ளே இருந்து ஒரு எண்ணமாக வரலாம். அல்லது ஒரு புத்தகத்திலுள்ள வாசகம் மூலம் வரும். யாரோ ஒருவர் அதைக் கூறக்கேட்பீர்கள். இப்படியாகப் பல. உள்ளுணர்வை மிகப் பெரிய விடயங்களிலும் சாதாரண விடயங்களிலும் கூடப் பயன்படுத்தலாம். ஆகவே பழைய எண்ணங்களிலிருந்து விடு பட்டு எண்ணங்களை புதியதாக உருவாக்குவோம். அதன்மூலம் வாழ்க்கையை மாற்றுவோம்.

வருடம் ஒன்றின் ஆரம்பத்தில் உங்கள் நோக்கங்கள், அடைய வேண்டிய இலக்குகளை எழுதி வைத்து விட்டு நான் குறிப்பிட்ட இந்தச்செயல் முறைகளை சரியாகக் கடைப்பிடித்தீர்கள் என்றால் வருட முடிவில் நீங்கள் எழுதி வைத்தவற்றில் பலவற்றை அடைந்திருப்பதை காண முடியும். ஆகவே ஒன்றைச் செய்ய வேண்டுமென்றால் என்னிடம் பணமில்லை, வசதி இல்லை என நினைக்காது நம்மிடமி ருக்கும் அந்த ஆழமான சக்தியின் துணை கொண்டு எதனையும் சாதிக்கமுடியும் என நம்ப வேண்டும். ஒவ்வொருவருக்குள்ளும் இந்த சக்திகள் உண்டு. அதை பயன் படுத்தி மேன்மை பெறுவோம்.

யோகா சோதிடம்
● கிரகப்பொருத்தம் பார்த்தல் ● சுபமுகூர்த்தம் கணித்தல்
● பலன் பார்த்தல் ● சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# மிருகங்கள்...

27 ஆம் பக்கத்தொடர்ச்சி



பெரிய மிருகம். பொதுவாக இவை 6 தொடக்கம் 10 வரை கூட்டமாகத் திரிகின்றன.

**வெள்ளைப்புலி** (White Tiger) - இது Bengal Tiger இனத்தில் ஒரு மிக அரிய சாதி ஆகும். இவை முழுமையாக வெள்ளை யாக இல்லாமல், கறுப்பு வரிகளைக் கொண் டன. பல வெள்ளைப் புலிகளுக்கு கண்ணில் பிரச்சினை உண்டு. மற்ற புலிகளை விட இது பெரியது. இவற்றின் வித்தியாசமான தோற்றத் தால் மனிதர்களால் அதிகம் பிடிக்கப்பட்டன.



**ஒட்டகம்** (Camel) - இவை ஆசியா மற்றும் வடஆபிரிக்காவின் பாலைவனங்க ளில் வசிப்பன. ஒட்டகங்களில் 6 வகை இன ங்கள் உள்ளன. இவை 5 நாட்கள் தண்ணீர் குடிக்காமல் இருக்கக் கூடியன. இவை பாலைவனத்தில் நீண்டநேரம் வெட்கையில் தண்ணீர் இல்லாமல் இருப்பதற்கு பழக்கப் பட்டுள்ளன. இது பொதுவாக ஒரு வளர்ப்பு மிருகம்.

**வோலபி** (Wallaby) - வோலபி கங்காரு இனத்தில் ஒரு சாதி. இவை அவுஸ்திரேலி யாவைச் சேர்ந்தவை. எல்லா வோலபிகளுக்



கும் வயிற்றில் பை உண்டு. இவற்றின் கால் கள் மிகப் பலமானவை. இவை கால்களை வேகமாகத் துள்ளுவதற்கும் எதிரிகளை உதைக்கவும் பாவிக்கின்றன. வோலபி பொதுவாகப் புல்லையும், தாவரங்களையும் உண்ணும்.

**மலை ஆடு** (Mountain Goat) - இது வட அமெரிக்காவின் Rocky மலை தொடர்ச்சி யைச் சேர்ந்தது. இது மிகச் சுலபமாக மலை யில் ஏறும். இவற்றின் மொத்தமான கம்பளி மயிரினால் மலை ஆடுகள் -40 C வரை தாங் கக் கூடியன. மலை ஆடுகள் உயரமாகவும், பெரிதாகவும் வளரும். இவை தங்கள் குட்டி கள் மீது மிகக் கவனமுடையன.



# செஞ்சீனா...

25 ஆம் பக்கத்தொடர்ச்சி

அத்துடன் மொங்கோலியப் படைகளில் தாக் குதலைத் தடுக்கும் நோக்குடன் 25,000 கண் காணிப்புக் கோபுரங்கள் கட்டப்பட்டன. மிங் பரம்பரை பல மஞ்சுபடைகளின் தாக்குதலை முறியடித்து தமது ஆட்சியைத் தக்க வைத் துக் கொள்வதற்கு இவை மிகவும் உதவின. 1644 இல் லீ சீ செங் கலகக்காரர் பெய்ஜிங்



நகரைக் கைப்பற்றிய பின்னர் மஞ்சுக்களை கலகக்காரர்களை விரட்டியடிப்பதற்காக மிங் படைத்தளபதி வூசாங்குயி, ஷாங்காய் வாசற் கதவுகளைத் திறந்து உள்ளே விட்டான். அவர்கள் கலகக்காரரை விரட்டியடித்துடன் எஞ்சியிருந்த மிங் படையையும் தோற்கடித்து குயிங் பரம்பரையின் ஆட்சியை சீனா முழு வதும் ஏற்படுத்தினர். இவர்களின் ஆட்சிக்கா லத்தில் மதிலுக்கு அப்பாலிருந்த மஞ்சூரியா வும் கைப்பற்றப்பட்டது. இதனால் மதில் கட் டும் வேலைகள் நிறுத்தப்பட்டன. ஆனால் மஞ்சூரியாவில் மிங்லியாடொங் மதில் என்ற ழைக்கப்படும் மதில் கட்டப்பட்டது. இது பாதுகாப்பதற்காக மட்டுமன்றி குடிவரவைத் தடுப்பதற்காகவும் எனக் கூறப்படுகிறது.

பெய்ஜிங் மாநகரசபையைச் சுற்றியுள்ள பெருஞ்சுவரின் பகுதி மிகவும் பிரசித்தமானது. இது அடிக்கடி மீளமைக்கப்படுகிறது. ஏனெ னில் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகிறார்கள். சாங்ஷியாக்கோவுக்கு அண்மையில் உள்ள படாலிங் எனும் பகுதி மிகவும் பிரசித்தமானது. மக்கள் சீனக் குடிய ரவு பதவிக்கு வந்தபோது பொதுமக்கள் பார் வைக்காக இப்பகுதி திறந்து விடப்பட்டது. இதன் தெற்கே ஜயுயொங் பகுதி வாசல் உள்ளது. இங்கு பல காவலர் பெய்ஜிங் நக ரைப் பாதுகாப்பதற்காக நிறுத்தப்பட்டுள்ள னர். இப்பகுதியின் நீளம் 25அடியாகவும் அகலம் 16½ அடியாகவும் உள்ளது.

இம்மதிலானது மலைப்பகுதிகளில் செங்குத் தாகவும் மிகவும் சரிவாகவும், வளைந்தும் செல்கிறது. இதனைக் கட்டுவதில் வேலை யாட்கள் பெருஞ் சிரமப்பட்டனர். ஜின்ஷான் லிங் பகுதியில் இது 7 மைல் நீளமாகவும், 16அடி முதல் 26அடி உயரமாகவும் அடியில் 20அடி அகலமும் மேலே 16அடி அகல மாகவும் உள்ளது. இது கடல் மட்டத்திலிரு ந்து 3220 அடி உயரத்தில் 67 கண்காணிப் புக் கோபுரங்களைக் கொண்டுள்ளது. 2009 இல் புதிய GPS கருவிகள் மூலம் இதுவரை க்கும் அறியப்படாத மலைகளால் மறைந்திரு ந்த 180கி.மீ தூரமுள்ள மதில் கண்டு பிடிக்க ப்பட்டது. 2015 ஏப்ரலில் நிங்சியா பகுதியில், 10கி.மீ மதில் கண்டுபிடிக்கப்பட்டது. தற் போது மதிலின் கிராமப்புறப் பகுதிகள் கவனி ப்பில்லாமல் சிதைந்து போகின்றன. சில கிராமவாசிகள் கற்களை வீடு கட்டுவதற்குப் பயன்படுத்துகிறார்கள். 2012 இல் கலாசார நிலையத்தின் அறிக்கையின்படி 22% மதில் பகுதி மறைந்து விட்டது. இன்னும் 20 ஆண்டு காலத்தில் சில பகுதிகள் மறைந்து விட லாமென எதிர்வு கூறப்படுகிறது. சில பகுதிகளைப் பாதுகாப்பதற்காக சீமெந்துக் கலவை பயன்படுத்தப்படுகிறது.

1987 இல் இப்பெருமதில் யுனெஸ்கோ நிறுவ னத்தால் உலகப் பாரம்பரிய நிலையமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. நாம் பார்க்கச் சென்ற இடம் பெய்ஜிங் நகர வடக்கு எல் லையிலுள்ள பகுதி. இங்குதான் பெரும்பா லான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். இதன் வாசல் புதுப்பிக்கப்பட்டு அருகே சுவர் புதிதாக எழுப்பப்பட்டு யுனெஸ்கோ நிறுவன அறிவித்தல் வாசகமும் பொறிக்கப்பட்ட அறி விப்புக் காணப்படுகிறது. இரு மருங்கிலும் அழகான பூமரங்களும் பெரிய மரங்களும் நாட்டப்பட்டுள்ளன. இப்பகுதியைப் பராமரிப்ப தற்காக நுழைவுக்கட்டணம் அறவிடப்படுகி றது. போசனசாலைகளும், நினைவுப்பொருள் விற்பனை நிலையங்களும் நிறையவே உள் ளன. உல்லாச வண்டிகள், கார்களுக்கான தரிப்பிடங்களும் விசாலமாக அமைக்கப்பட் டுள்ளன. இவ்விடத்திலிருந்து மதிலைச் சென்றடைவதற்கு அரை மைலுக்கு மேல் நடந்தே செல்ல வேண்டும்.

இப்பகுதி ஒரு மலைப்பிரதேசத்திலிருப்பதால் ஏறுவது சுலபமல்ல. படிகள் விசாலமானதாக வும் கற்கள் பதித்தும் சுண்ணாம்பால் கட்டப் பட்டுள்ளன. பெரும்பாலும் கருங்கற்களாயிரு ப்பதால் நல்ல காலணி அணிய வேண்டும். வயோதிபர்களும் கால் வாதமுள்ளவர்களுக் கும் அதிக தூரம் செல்வது கடினமாயிருக் கும். ஆங்காங்கே கண்காணிப்புக் கோபுரங் கள் உள்ளன. இவை உள்ளே படிகளையும் உச்சியில் பல திசைகளிலும் ஜன்னல்களை யும் கொண்டுள்ளன. படிகள் ஒடுக்கமாயிருக் கும் ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே ஏறக் கூடிய இடவசதி உடையவை. இப்பகுதி வளைந்தும் ஏறியும் இறங்கியும் மலை உச் சிக்குச் செல்கிறது. பின் அங்கிருந்து கீழ் நோக்கி இறங்குகின்றது. சில இடங்களில் இளைப்பாறும் இடங்களும் உள்ளன. ஏறும் போது தண்ணீர் போத்தல் எடுத்துச் செல் வது முக்கியம். கால் வலிக்கும். சில இடங்க ளில் தங்கியிருக்கலாம். எம்மோடு வந்தவர்க ளில் சிலர் மலை உச்சிவரைக்கும் ஏறிச் சென்றனர். நாம் சென்ற வேளை பிற்பகலா னதால் வெயில் குறைவாகவும் காற்று இத மாகவும் வீசிக் கொண்டிருந்தது. உண்மை யில் அக்காலத்தில் நவீன இயந்திரங்களோ வசதிகளோ இல்லாதபோது இதைச் சீனமக் கள் கட்டினார்களே என்பது வியப்புக்குரியதே.

எமது அண்டை நாட்டிலும் இவ்வாறான மதில் கட்டமுயற்சிகள் மேற்கொள்ளப்படுகி ன்றன. பொறுத்திருந்து பார்ப்போம்.

EXPERTS
EDUCATIONAL CENTER

வைகாசி 28 ஆம் திகதி கணித மற்றும் ஆங்கிலப் பாடத்தில் தேர்வுகள் இடம்பெறவுள்ளது. இதில் சித்திபெறும் அனைவருக்கும் பதக்கங்களும் சான்றிதழ்களும் மாணவர் மதிப்பளிப்பு விழாவில் வழங்கப்படும். அதுமட்டுமன்றி ஒவ்வொரு தரத்திலும் கணித மற்றும் ஆங்கிலப் பாடத்தில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 5 மாணவர்களுக்குத் தனித்தனியே வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படும். இரண்டு பாடத்திற்கும் சேர்த்து 25 டொலர்கள் அனுமதிக்கட்டணம் அறவிடப்படும்.

**EXPERTS EXAMINATION 2017**

Grades JK to 8: Math & English

Grades 9 to 11: Math only

Registration Fee: $25 for both subjects.

Registration Deadline: April 30, 2017 (subject to change)

Practice exams are available at www.expertsed.com.

Contact Info: 5215 Finch Ave East, Unit 214
Scarborough, ON M1S 0C2 (GTA Square Mall)
T.P: 647-709-1298

# நீரிழிவும் பிரதான கண்நோய்களும்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

'எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்' என்ற முதுமொழிக்கு ஏற்றவாறு, அந்த சிரசிலும் 'கண்' என்பது மிகவும் முக்கியமான உறுப்பாகும். கண்பார்வையற்றவர்களை 'கண்ணில்லாத கபோதி' என்று அழைப்பதனை பார்க்கிறோம். எந்த இலக்கியத்திலும் கண்ணின் அழகு பற்றி எத்தனையோ வர்ணனைகள் வரும். அதிலும் பெண்களின் விழிகளை மான்விழி, வேல்விழி, கயல்விழி, தாமரை விழி, காந்தவிழி என்றெல்லாம் புலவர்கள் வர்ணிப்பது உண்டு. சிலை செய்பவர்கள் கூட கடைசியாகவே கண்ணைத் திறப்பார்கள். அந்த அளவுக்கு பெறுமதிமிக்கது எமது கண். சற்றுநேரம் மின்விளக்குகள் அணைந்து விட்டால் வீடே இரண்டாகிவிடும். தொலைக்காட்சி பார்ப்பவர்கள், வீட்டுவேலை செய்பவர்கள், சமையல் செய்பவர்கள் எல்லோரும் ஒப்பாரி வைக்க தொடங்கி விடுவார்கள். எமது கண் நிரந்தரமாகப் பறிபோய்விட்டால் எங்கும் கும்மிருட்டாகி விடும். சில நிமிடங்கள் மின்விளக்கு அணைந்தால் தடுமாறிப்போகும் எமக்கு நிரந்தரமாக பார்வை போய்விட்டால் எப்படியிருக்கும். பைத்தியமே பிடித்துவிட்டதாக தவிக்கிறோம். இந்த விடயத்தில் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கே விரைவில் இப்பார்வை மங்க சந்தர்ப்பம் உண்டு.

எமது கண்ணுக்கு பல பெயர்கள் உள. விழி, நயனம், நேத்திரம் என்பவையே அவை. இரண்டு கண்களும் ஒன்றிணைந்து செயல்படுவது மிக விசித்திரமானது. படம் பிடிக்கும் கமெரா போன்றது தான் கண்ணும். ஆனால் கமெராவில் ஒரு கணத்தில் ஒரு படத்தை மட்டுமே பிடிக்கலாம். ஆனால் எமது கண்களோ ஒரே தடவையில் எத்தனையோ காட்சிகளை எமக்கு காட்டுகின்றன. 2.5செ.மீற்றர் குறுக்களவு உடைய இரு கண்களும் எத்தனையோ காட்சிகளைப் பார்த்து விடுகின்றன. நிறங்களையெல்லாம் பிரித்தறிகிறது, எல்லா தகவல்களையும் மூளைக்கு அனுப்புகின்றது. மேலும், கீழும் பக்கவாட்டிலும் அசைந்து எல்லாவற்றையும் கிரகிக்கிறது. துக்கத்திலும் மகிழ்ச்சியிலும் கண்ணீரை வரவழைக்கிறது. புதிதாகப் பிறந்த குழந்தைகள் வீரிட்டு அழுவார்கள். ஆனால் கண்ணீர் வராது. உலகில் 39 மில்லியன் மக்கள் பார்வையற்றவர்கள். இதனைப்போல் 6 மடங்கினர் ஏதோ ஒரு கண் பிரச்சினையுள்ளவர்கள். ஒரு நிமிடத்திற்கு 17 தடவை கண் சிமிட்டுகிறோம். நீலம், பச்சை நிறக்கண்களும் இருக்கின்றன. 1 மில்லியன் நரம்பு நார்கள் 9 Fibers) மூளையுடன் தொடர்புபடுகின்றன. கதிராளி (Iris) 256 விதமாக செயல்படுகிறது. நாம் 80வீதமான அறிவை கண்களாலேயே படிக்கிறோம். மூளைக்கு அடுத்ததாக சிக்கலான உறுப்பு கண்களாகும். எமது கண்கள் நாம் பிறக்கும் போது இருந்த அளவுக்கே ஏறக்குறைய இருக்கும். இப்படியெல்லாம் பல புதுமைகள் நிறைந்த கண்களுக்கு நீரிழிவு நோய் மட்டுமே எதிரியாகி விடுகிறது. நீண்டநாட்களாக நீரிழிவு நோயால் அவதிப்படுபவர்களுக்கு கண்களில் ஏற்படும் பாதிப்புகள் பலவாகும்.

கண்ணின் அமைப்பு மிக விசித்திரமானது. அதன் உட்பகுதியை நோக்கும்போது எமது கண்ணுக்குள் நுழையும் ஒளிக்கதிர்கள் முதலில் சந்திக்கும் பகுதி விழிவெண்படலமாகும். இதனை (Cornea) எனலாம். இது அடுத்து சந்திப்பது கண்ணின் மணி (Pupil) ஆகும். இந்த ஒளிக்கதிர்கள் வில்லை (விழி ஆடி) (Lens) பகுதியை அடைகின்றன. இதற்கு பின்பதாக கண்ணாடியுடனீர் (Vitreous Body) உள்ளது. விழிஆடி ஒளிக்கதிர்களை விழித்திரையின் மீது தலைகீழாக



விழச் செய்கிறது. விழித்திரை (Retina) யில் உள்ள திசுக்கள் ஒளிக்கதிர்களை உணர்வுகளாக மாற்றி பார்வை நரம்புகள் (Optic nerves) ஊடாக மூளைக்கு அனுப்புகின்றன. மூளையில் உள்ள 'Visual cortex' பகுதிக்கு இது செல்வதால் காட்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அத்துடன் கண்களில் கண்ணீர்ப்பை, கண்மடல், கண்புருவம், கண்இமை, கதிராளி (Iris) போன்ற பல பகுதிகளும் இணைந்துள்ளன. எப்படி அமைப்புகள் இருந்தாலும் அத்தனை பகுதிகளையும் நீரிழிவு நோய் பாதித்து விடுவதே பரிதாபமான நிலையாகும்.

நீரிழிவால் ஏற்படும் கண்நோய்கள் ஒரு கூட்டுத்தொகையாக வருபவையாகும். இதில் முக்கியமானவை விழித்திரைப் பாதிப்பு (Retinopathy) வயது அதிகரிப்பால் ஏற்படும் மக்கூலா நோய் (Macular Edema), கண்புரை (Cataract), குளுக்கோமா (Glaucoma) என்பனவே பிரதானமானவையாகும். எல்லாவகையான நீரிழிவு நோய்களும் பார்வைக்கு பாதகமானவை, கண்பார்வை இழப்புக்குக் காரணமானவை.

நீரிழிவு விழித்திரைநோய் (Diabetic retinopathy) என்பதே கூடுதலாக ஏற்படுகிறது. விழித்திரையில் உள்ள மிக மென்மையான திசுக்களில் பாதிப்பு ஏற்படுவதால் இது வரலாம். மிக உயர்ந்த இரத்தச்சர்க்கரை என்பது விழித்திரையில் உள்ள மெல்லிய இரத்தக்கலங்களை சேதமுறச் செய்வதால் இப்பிரச்சினை ஏற்படலாம். பொதுவாக விழித்திரை வெளிச்சத்தினை மாற்றியமைக்கும் திறன் கொண்டது. இதுவே பார்வை நரம்புகளுக்கு சமிக்கைகளை அனுப்புகிறது. எனவே இந்த விழித்திரையில் உள்ள இரத்தக்குழாய்கள் சேதமுற்று இரத்தம் வெளிவரும்போது பார்வையை இழக்க வைக்கிறது. மிகக்கூடிய நிலையில் கூடுதலாகக் குழாய்கள் பாதிப்படைந்து விழித்திரையை மூட ஆரம்பிக்கும். இதனால் பெரிய அளவில் சேதமுற்று விழித்திரையின் கலங்கள் அழிவுறும், இதில் 4 நிலைகள் உள்ளன.

முதலாவது விழித்திரை பாதிப்பு சிறிய அளவினது, இதனை Mild 'nonproliferative retinopathy' எனலாம். இதில் விழித்திரையில் சிறிய பலூன் போன்ற வீக்கம் ஏற்படுகிறது. இரண்டாவது நிலையில் விழித்திரையில் நோய் அதிகரிக்கிறது. இந்த வேளையில் சிறு இரத்தக் கால்வாய்கள் இரத்தத்தை அனுப்ப முடியாதிருக்கும். இதனை 'Moderate nonproliferative retinop athy' என்பர். மூன்றாவது நிலையில் பல இரத்தக் குழாய்கள் தடைப்படும். இதனாலும் இரத்தம் செல்ல முடியாது. புதிய புதிய குழாய்கள் தோன்றும். இதனை 'Server nonproliferative retinopathy' என்பர். கடைசியில் உள்ள நாலாவது நிலையில் விழித்திரையில் பெருமளவு இரத்தக்குழாய் கள் ஏற்பட்டு விழித்திரை முழுவதும் பாதிப் புறும். இந்நிலையில் பல களிம்பு படிவங்கள் (Vitreous gel) ஏற்படும். அவை கண்ணுக் குள் பரவும், புதிய இரத்தக்குழாய்கள் உடை யும். இரத்தக் கசிவு ஏற்படும். சிதைவடைந்த திசுக்கள் விழித்திரையை அப்புறப்படுத்தி விடும். சுவரில் ஒட்டிய பேப்பரை கழற்றுவது போலாகி விடும். இதனால் நிரந்தரமான பார்வை இழப்பு ஏற்படும். ஆரம்பத்தில் இதன் தன்மைகளை அறிந்து கொண்டால் மட்டுமே இதனை மாற்ற முடியும். அடிக்கடி கண் பரிசோதனை தேவைப்படலாம். இதற்கு Visual acuity testing, Tonometry pupil dilation, Optical coherence Tomography (OCT) போன்ற பரிசோதனைகள் அவ சியம்.

நீரிழிவு உள்ள வயோதிபர்களுக்கு ஏற்படும் இன்னொரு பிரச்சினை 'Age Related Macular degeneration' என்பதாகும். இதனை சுருக்கமாக AMDஅல்லது ARMD என்பர். விழித்திரையின் மத்திய பகுதியில் வெளிச்சமூட்டும் பகுதியாக உள்ளதே Mac ula என்னும் பகுதியாகும். இது மிகவும் சிறிய பகுதி, இதுவே வாசிக்க, அடையாளம் காண, வாகனம் செலுத்த, தொலைக்காட்சி பார்க்க, கணினியை பார்க்க உதவுவதாகும். எந்த ஒரு பொருளையும் விரிவாகவும் நுணுக்கமாகவும் பார்க்க உதவுவதே இதன் பணியாகும். இந்த 'Macular' பகுதி சேதமுற்றால் பார்வை இழப்பு ஏற்படும். கறுப்புப்புள்ளிகள் கண்ணின் பார்வையில் தெரியும். இன்று உலகெங்கிலும் பாதிப்புற்று இருப்போர்க்கு அதிகமாக Macular பகுதியின் அழிவுறுதலே காரணமாகும். இதிலும் வரட்சியானது, ஈரமானது என 2 பிரிவுகள் உள.

இந்த நோயும் படிப்படியாகவே ஏற்படும். நோவில்லாத பார்வை இழப்பு ஏற்படும். சிலருக்கு திடீரென பார்வை இழப்பு ஏற்படும். மரபியல், வயது அதிகரிப்பு, அதிக வெளிச்சம்படுதல், பிராணவாயு குறைதல் என்பன முக்கிய காரணிகளாகும். 60 வயதில் 1வீதமும், 90 வயதிற்குள் 15வீதமும் இப்பிரச்சினை ஏற்படும். கூடிய எடை, உயர்இரத்த அழுத்தம், புகை பிடித்தல், வெள்ளை நிறத்தோல் உள்ளவர்கள், மருந்துகள் பாவனை என்பவற்றாலும் ஏற்படலாம். உண்மையில் இப்படியான நோய்களைக் காப்பாற்றுவது கடினமாகும். சத்துள்ள உணவுகள், Omega3, வேறுவகை கண்பாதுகாப்பு உயிர்ச்சத்துக்கள் இதற்கு உதவலாம். அடிக்கடி கண்பரிசோதனை செய்ய வேண்டும். காரணம் மக்குலா என்ற மத்திய வெளிச்சமூட்டும் இப்பகுதி ஒரு கணினியை விட வலுவானது. மில்லியன் கணக்கான பொருட்களையும், காட்சிகளையும் பதிவு செய்ய இதுவே உதவுகிறது. இந்த மக்குலா மில்லியன் கணக்கான வெளிச்ச உணர்வுகளை ஏற்படுத்தி மத்திய பார்வையை கூட்டுவதாகும். இது கண்ணின் பின்பக்கத்திலேயே உள்ளது. இதனைப் பாதுகாக்க புகைபிடிக்க கூடாது. ஒழுங்கான உடற்பயிற்சி அவசியம். இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் என்பதனை கவனிக்க வேண்டும்.

மக்குலாவை பரிசோதிக்க பார்வை சோதனை (Visual Acuity Yest), Dilated eye exam, amsler grid, Fluorescein Angiogram, optical coherence tomography சோதனைகள் இடம் பெறுகின்றன. நீரிழிவு காரணமாக ஏற்படும் அடுத்த பிரச்சினை கண்புரை (Cataracts) ஆகும். இது கண்ணில் உள்ள வில்லை (Lens) யில் ஏற்படும் பாதிப்பால் ஏற்படுகிறது. முதியோர்களுக்கு பொதுவான நோய் இதுவாகும். குடும்பவரலாறு, புகைபிடித்தல், ஊதாக் கதிர்கள் கூடுதலாக கண்ணில் ஊடுருவுதல், கூடிய மது எடுத்தல், நீரிழிவு, நீண்டகால மருந்துப் பாவனை என்பவற்றால் ஏற்படலாம்.

கண்புரை ஏற்பட்டால் பார்வை குறையும். வில்லையின் மீது வெண்மை படரும். பார்வை தெளிவற்று புகார் போல தோன்றும். இரவில் கஷ்டப்பட நேரிடும். சிலவேளைகளில் இரட்டை (Double Vision) ஏற்படும். இந்த வேளைகளில் கூடிய வெளிச்சத்தில் தெளிவாக படிக்க வேண்டும். நிலைமை மோசமானால் சத்திரிசிகிச்சையே தேவைப்படும். இந்த வில்லை மாற்றம் செயற்கையானதாக இருக்கும். இது ஒரு சுலமான முறை. சத்திரசிகிச்சை ஒன்றே தீர்வுக்கு வழியாகும்.

கண்வில்லையே எல்லா வெளிச்சங்களையும் விழித்திரையில் விழச் செய்கிறது. இந்த வில்லை கதிராளி (Iris), கண்மணி (Pupil) க்கு பின்னால் உள்ளது. கமெரா லென்ஸ்

தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)

# கனடா தமிழர் வரலாறு - குரு அரவிந்தனின் நூல் வெளியீடு

எழுத்தாளர் குரு அரவிந்தன் எழுதிய 'கனடா தமிழர் வரலாறு' என்ற தொடர் கட்டுரைகளின் தொகுப்பு இகுருவி வருடாந்த விழாவில் நூல் வடிவமாக வெளியிடப்பட்டது.







இந்த இகுருவி விழாவில் இந்தியாவில் இருந்து பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன், இலங்கையில் இருந்து சின்னத்தம்பி குணசீலன் ஆசிரியர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். குரு அரவிந்தனின் 'கனடா தமிழர் வரலாறு' நூல் வெளியிடப்பட்ட போது சிறப்புப் பிரதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி, ரொறன்ரோ நகராட்சி மன்ற உறுப்பினர் நீதன் சண் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். 150 ஆவது பிறந்த தினத்தைக் கனடிய அரசு கொண்டாடும் இந்த வேளையில் தமிழர்களின் புலம் பெயர்ந்த வரலாற்றை, அவர்களின் கடந்த 40 வருடகால பங்களிப்பைப் பற்றிய தகவல்கள் இந்த நூலில் முடிந்த அளவு இடம் பெறற்றிருக்கின்றன.

ஆங்கிலத்திலும், தமிழ் மொழியிலும் வெளிவந்த இந்த நூலில் குரு அரவிந்தனின் 'பிறீடம் இஸ் பிறி இன் கனடா' (Freedon is Free in Canada) என்ற கட்டுரையும் இடம் பெற்றிருந்தது. கனடாவின் 150 வது பிறந்த தினத்தை 2017 இல் கொண்டாடும் கனடிய அரசு பல்கலாச்சார சமூகங்களிடையே இருந்து தெரிவு செய்யப்பட்ட கதைகளில் தமிழ் சமூகத்தைப் பிரதிபலிக்கும் குரு அரவிந்தனின் கதையும் 150 கதைகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப் பட்டிருந்தது.

## துயர் பகிர்வு

## பனையம்மா



**திருமதி. அக்னெஸ் யோசெப்**

(பிறப்பு: 15 யூலை 1928 - இறப்பு: 6 ஏப்ரல் 2017)

சித்திரை மாத நிலவு
ஈரமமற்றுப்போன காற்று
தென்னை வனத்திலே
உன்னை விதைத்தோம்.

நெல்வயல் வரப்பு
நீ உலாவின பரப்பு
திக்கற்று திசை மாறி எம் தவிப்பு

செருப்பறியாய்
கால்களினால்
நட நடவென நடப்பாய்
சிரித்துச் சிரித்து துயரைக் கடந்தாய்.

எட்டு பிள்ளைகள் ஆளாக
தேய்ந்தாய் அம்மா
காலத்தைத் தேய்த்தாய் அம்மா
கணவனை இழ(ள)ந்தாய்
இளவயதில்
கண்ணகியானாய் பின்பு
வறுமையென்னும் பாண்டியனை
உன் உழைப்பால் கொன்று
பிள்ளைகளில் பெருமையுற்றாய்
போர்க் காலம் சூழ்ந்த நீண்ட நெடுயுகத்தில்
வீரர்களின் முகமானாய்
போராளிகளின் தாயானாய்
பனையம்மா பனையம்மா எனப் பெயரெடுத்து
அவர்கள் இதயத்தில் நீயானாய்

யார் மறந்தாலும் நீ வளர்த்த
தென்னை பனை மறவாது
தேங்கு வயல் தூங்காது

உன்சீவியத்தில் நேசித்தோம்
எங்கள் சீவியம் வரை மறவோம்
நித்தியத்தில் இளைப்பாறம்மா

- செல்வம் அருளானந்தம்

மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் சார்பாக

# நீரிழிவும்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

போலவே இதுவும் வேலை செய்யும். புரதச்சத்துக் கூடத் தேவை. வயது போக புரதம் குறைவடைவதால் சிறிய பகுதி பழுதடையும், படிப்படியாக இது கூடிவிடும். இந்தவேளையில் நீரிழிவு, புகைத்தல், மதுசாரம், சூரிய வெளிச்ச தாக்கம் என்பவற்றால் பார்வை மங்கும். நிறங்கள் மங்கும். கார்களின் வெளிச்சம் கூடுதலாகத் தெரியும். வட்ட வெளிச்சத்தை சுற்றியும் வளையம் தெரியும். இந்தநிலையில் Visual Acuity test, Dilated eye exam, Tonometry சோதனைகள் அவசியம். இறுதியில் சுலபமான தொரு சத்திரசிகிச்சை செய்ய நேரும். இரண்டு கண்களிலும் கண்புரை இருந்தால் முதலில் ஒன்றை செய்து பின்பு மற்றயதை செய்யலாம். பின்பு சில மருந்து துளிகளை தொடர்ந்து விட வேண்டும்.

நீரிழிவால் கண்களில் ஏற்படும் முக்கியமான பிரச்சினை கண்அழுத்தம் அல்லது விறைப்பு எனப்படும் குளுக்கோமா (Glaucoma) என்பதாகும். சிலருக்கு முற்றாகப் பார்வையை இழக்கக் கூடிய நிலையும் ஏற்படலாம். கண்பந்தில் (Eyeball) திரவம் நிறைந்து அழுத்தம் ஏற்பட்டால் இந்நோய் வரலாம். இதில் பொதுவாக 2 பிரிவுகள் உள்ளது. திறந்த-கோள குளுக்கோமா, கோளம் - மூடிய குளுக்கோமா என்பனவே அவை. ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமானவை. திறந்த-கோள குளக்கோமா பெரிய அளவில் ஏற்படுகிறது. இதனால் பார்வை மங்கும். மற்றயவை பிரிவில் குறைவாகவே ஏற்படுகிறது. இரண்டும் மீளமுடியாத பார்வை பிரச்சினையை ஏற்படுத்தும். பார்வை நரம்புகளை இறுதியில் பாதிப்படையச் செய்யும்.

இந்த நோயில் மிகக் கடுமையாக கண்ணில் வலி இருக்கும். தலைவலி ஏற்படும். பார்வை நரம்புகளில் வலி ஏற்படும். இப்படி ஏற்பட்டால் உடன்சிகிச்சை அவசியம். அடுத்ததாக கண்பந்து (Eyeball) மாறுபடும். கண் சிவப்பாக மாறும். பெரிய கண்மணிகள் தோன்றும். விழிவெண்படலம், கதிராளி என்பனவற்றிலும் மாறுதல் ஏற்படும். கண்களின் ஒளிவட்டம் பார்வையில் தெரியும். இரவில் வானவில் நிறங்கள் போலத் தெரியும்.

பார்வை சுருங்கும். நடுப்பகுதி மட்டுமே பார்க்க தெரியும். எல்லைப் பகுதிகளை பார்க்க முடியாது. ஆரம்பத்தில் இவைபற்றி பலர் உணர்வதில்லை. அடுத்து மங்கிய பார்வை (Blurred Vision) ஏற்படும். இவ்வாறான நிலை ஏற்பட்டால் கண்பரிசோதனை அவசிய மாகும்.

40 வயது தொடக்கம் ஒவ்வொரு 4 வருடங்களும் இந்நோய்க்கான ஆபத்து நெருங்கும். 65 வயதுக்கு பின்பு ஒவ்வொரு 2 வருடமும் இந்த ஆபத்து ஏற்படலாம். உள்ளே ஏற்படும்




உயர் அழுத்தம், கறுப்பு நிறத்தவர், குடும்ப வரலாறு, நீரிழிவு, இதயநோய், உயர் இரத்த அழுத்தம், கிட்டிய பார்வை, கண்ணில் செய்த சத்திரசிகிச்சை, பாதகமான மருந்துப் பாவனை என்பவற்றால் இப்பிரச்சினை ஏற்படலாம்.

கண்நோய் நிபுணர் பல பரிசோதனைகளை செய்ய நேரிடும். பார்வை நரம்பு சேதம் (Tonometry Testing for optic nerve damage) பற்றி அறிதல், பார்வைப் பகுதி பரிசோதனை (Visual field test), விழிவெண்படல தடிப்பினை அறிதல் (Pachymetry), கண்ணீர்க் குழாய் சோதனை (Gonioscopy) என்பன செய்யப்படும். முதலில் கண்ணுக்கான மருந்துத் துளிகள் (Eye drops) விடப்படும். அத்துடன் வாய்மூலமான மருந்துகள் (Oral meditations) பாவிக்கப்படலாம். இறுதியில் சத்திரசிகிச்சையே உதவும். லேசர் சிகிச்சை (Laser Therapy), Filtering surgery, Drainage tube, Electrocautery போன்ற பல சிகிச்சைகள் உள.

இதற்கான சில தீர்வுகள் உள. ஆரோக்கிய உணவு, உடற்பயிற்சி, கஃபீன் (Caffeine) என்னும் சத்தினை குறைத்தல், அடிக்கடி நல்ல பானங்களை அருந்துதல், தலையை உயர்த்திவைத்துப் படுத்தல், ஒழுங்காக மருந்து எடுத்தல் அவசியம். சிலமாற்று மருந்துகளும் சந்தையில் உள. தாவர மருந்துகள் (Herbal remedies), ஓய்வு எடுத்தல், மருத்துவரீதியான மரியுவானா பாவனை, கண்ணுக்குப் பாதுகாப்பான கண்ணாடி அணிதல் என்பன முக்கியமாகும்.

# 21 கோடி ரூபாய் சம்பளம் பெறும் 94 வயது தர்மபால் குலாத்தி



இந்திய நுகர்பொருள் துறையில் அதிக சம்பளம் வாங்கும் தலைமை செயல் அதிகாரி 94 வயதான தாத்தா தர்மபால் குலாத்தி.

இந்தியாவில் பலருக்கும் இவரைப்பற்றித் தெரியும். தொலைக்காட்சிகளில் எம்டிஎச் (MDH) மசாலா விளம்பரத்தில் தலைப் பாகை கட்டிக்கொண்டு வரும் முதியவர் தான் 94 வயதான தர்மபால் குலாத்தி. இந்திய நுகர்பொருள் துறையில் அதிக சம்பளம் வாங்கும் தலைமை செயல் அதிகாரி. இதுவரை எந்தப் பத்திரிகை அட்டைகளிலும் வராத ஒருவர்.

எம்டிஎச் மசாலா இன் சிஈஓ (CEO) ஆக இருக்கும் இவர் ஐந்தாம் வகுப்பைக்கூட முடிக்காதவர். எம்டிஎச் மசாலா நிறுவனத்தில் இவர் பெறும் சம்பளம் வருடத்திற்கு 21 கோடி ரூபாய் ஆகும். அதி கோத்ரேஜ், விவே கம்பீர், சஞ்சிவ் மேதா, ஐடிவி நிறுவனத்தின் தலைவர் தேவேஷ்வர் ஆகியோர் பெறுவதைவிட அதிக சம்பளத்தைத் தர்மபால் குலாத்தி பெறுகிறார். மஹாஷியான் டி ஹட்டி (MDH) நிறுவனம் தற்போது 15 சதவீத உயர்வைச் சந்தித்து மொத்த வருவாயாக 924 கோடியும், அதனது லாபம் 25 சதவீதம் உயர்ந்து 213 கோடியாகப் பெற்றுள்ளது.

ஊழியர்கள் அனைவராலும் தாதாஜி அல்லது மஹாஷியாஜி என்று அழைக்கப் படும் தர்மபால் குலாத்தியின் தினசரி பணிகள் தினமும் நிறுவனத்தைச் சுற்றி வருவது, சந்தை விற்பனையாளர்கள் மற்றும் டீலர்களை ஞாயிற்றுக்கிழமை என்றும் பார்க்காமல் சந்தித்துப் பேசுவது போன்றவற்றைச் செய்வது. மேலும் நிறுவனத்தின் 80 சதவீத பங்குகள் இவருடைய கட்டுப்பாட்டில் மட்டுமே




உள்ளது. குறைந்த விலையில் நல்ல தரமான பொருட்களை அளிப்பதே எனது நோக்கம் என்றும், என்னுடைய சம்பளத்தில் இருந்து 90 சதவீதம் அறக் கட்டளைக்கு அளிப்பதாகவும் தர்மபால் குலாத்தி கூறுகின்றார். எம்டிஎச் நிறுவனத்திற்குத் டுபாய், லண்டன் ஆகிய இடங்களில் கிளை அலுவலகங்கள் உள்ளன. அதன் பொருட்கள் 100 நாடுகளுக்கும் மேலாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவருடைய மகன் மொத்த செயல்பாடுகளையும் கவனித்துக்கொள்வதாகவும், 6 மகள்களும் விநியோகம் குறித்துக் கவனித்துக்கொள்வதாகவும் கூறுகின்றார். 60-க்கும் மேற்பட்ட தயாரிப்புகள் எம்டிஎச் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வெளிவருகின்றன. அதில் டேகி மிர்சி, சேட் மசாலா மற்றும் சன்னா மசாலா பக்கெற்கள் ஒவ்வொன்றும் மாதத்திற்கும் ஒரு கோடிக்கு மேல் விற்பனையாகி உள்ளன. ஆனால் இன்றுவரை பிற வெளிநாட்டு உணவுகளைத் தயாரித்ததில்லை. இந்திய மசாலா சந்தையில் உள்ள வாடிக்கையாளர்களைச் எம்டிஎச் பிராண்ட் தயாரிப்புகளை வாங்க வைக்கும் முயற்சியைச் செய்து வருவதாக நிறுவனத்தின் துணைத்தலைவர் ராஜேந்தர் குமார் கூறுகின்றார்.



# மணிரத்னம் படத்தில் நடிக்க வேண்டும்!

## நேர்காணல் - நடிகர் ரகுமான்

தமிழ் சினிமாவில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கியுள்ளார் நடிகர் ரகுமான். முப்பதாண்டுகளுக்கும் மேலான சினிமா அனுபவம் உடையவர். வைரம் பாய்ந்த மரமாய் நடிப்பில் பக்குவத்தை காட்டுகிறார். 'துருவங்கள் பதினாறு' படத்தில் காவல்துறை ஆய்வாளர் கதாபாத்திரத்தில் அலட்டிக்கொள்ளாமல் வந்து ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்ற ரகுமான்தான் இன்று தமிழ், தெலுங்கு, மலையாளம் மூன்று மொழிகளிலும் இயக்குநர்களுக்கு விருப்பமான நடிகர். சென்னையில் ரகுமானை சந்தித்தோம்.

உங்கள் நடிப்புக்கு நல்ல பெயர் இருந்தாலும் மிகவும் குறைவாகவே படம் பண்றீங்களே, ஏன்?


என் மனைவிகூட, "மூன்று மாதம் ஆகியாச்சு இன்னும் ஒரு படத்தில்கூட சைன் பண்ணலை" என்று கிண்டலா கேட்டார்கள். நேற்றுக்கூட இரண்டு இயக்குநர்கள் வந்து என்னிடம் கதை சொன்னார்கள். நான்கு மணி நேரம் வீணாகச் சென்றதைத் தவிர கதையில் உருப்படியாக ஒரு வரிகூட இல்லை. கடத்தல், ஒரே இரவில் ஒரே நாளில் துப்பறிவது என்று என்னிடம் கதை சொல்ல வருகிறவர்கள் எல்லோரும் இப்போது 'துருவங்கள் பதினாறு' கதை மாதிரியே யோசித்துக்கொண்டு வருகிறார்கள். அதனால், இதுவரைக்கும் யாரிடமும் ஒப்புக்கொள்ளாமல் இருக்கிறேன்.

பணத்துக்காகவோ, தொடர்ந்து நடித்துக் கொண்டிருக்கிறேன் எனக் காட்டிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவோ என்னால் படம் ஒப்புக்கொள்ள முடியாது. நான் கேட்கிற கதை சிறப்பாக இருக்க வேண்டும். நன்றாகப் பசிக்கிறவன் ஒரே மாதிரியான உணவை சாப்பிட்டால் அலுத்துவிடும். அந்த மனநிலைதான் எனக்கும். ஒரு மாதத்துக்கு முன்னால் வெளியான 'ஒரு முகத்திரை.' அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு அவ்வளவு பேர் தொலைபேசியில் அழைத்துப் பேசினார்கள். "எதார்த்தமா நடிச்சிருக்கீங்க சார் பிரமாதம்" என்று சொல்கிறார்கள். இது தான் நான் எதிர்பார்க்கிற உண்மையான சம்பளம்.

நீங்கள் இப்படி சொல்கிறீர்கள். ஆனால், ரகுமான் அதிக சம்பளம் கேட்டு வரும் வாய்ப்புக்களை நிராகரிக்கிறார் என்றும் ஒரு செய்தி உலாவுகிறதே?

ஒரே மாதிரியான கதையோடு வருகிறவர்களைத் தவிர்ப்பதற்காக நான் அப்படி நடந்துகொள்வது உண்மைதான். எனக்கு அவர்கள் மேல் கோபம். புதிதாக யோசிக்காமல் அரத பழசான கதையோடு, காப்பி அடித்த திரைக்கதையோடு வருபவர்களைத் தவிர்ப்பதற்காகவே பெரிய சம்பளம் கேட்கிறேன். "இவர் கேட்கிற சம்பளத்திற்கு ரஜினியிடமே கால்ஷீட் வாங்கிடலாம்" என்று என் காதுபடவே சொல்லிவிட்டு போவார்கள். "இத இத இதைத்தான் எதிர்பார்த்தேன்" என்று நானும் நினைத்துக்கொள்வேன். எனக்கு பாத்திரம் தான் முதலில், பணம் இரண்டாவதுதான். சரி, அதற்காக எதிர்மறையான பாத்திரம் வந்தால் நடிப்பீர்களா?


என் முதல் படமான 'நிலவே மலரே' தொடங்கி இதுவரைக்கும் 150 படங்களுக்கு மேல் நடித்துவிட்டேன். இந்தமாதிரியான பாத்திரம் தான் பண்ணவேண்டும் என்று எந்த எல்லையும் வைத்துக்கொண்டது இல்லை. கதை நன்றாக இருக்க வேண்டும். நான் நடிக்கும் பாத்திரம் பேசப்பட வேண்டும் என்றுதான் பார்ப்பேன். "துருவங்கள் பதினாறு படத்தில் நிஜமான காவல்துறை ஆய் வாளர் மாதிரியே நடித்திருந்தீர்களே எப்படி?" என்று காவல்துறை உயரதிகாரி ஒருவர் கேட்டார். நான் நடித்த பாத்திரத்துக்கு நேர்மையாக இருந்திருக்கிறேன் என்பதற்கு இது ஒன்றே சாட்சி.



'36 வயதினிலே' படத்தில், சில இடங்களில், ஜோதிகா நடிப்பில் உங்களைவிட நன்றாக நடித்திருக்கிறாரே என்று சிலர் கேட்டார்கள். என் பாத்திரம் மட்டுமின்றி உடன் நடிக்கும் பாத்திரமும் உயிர்ப்பான நடிப்பைக் கொடுத்தால்தான் அந்தக் காட்சி ரசிகர்கள் மனதில் நிற்கும். அந்த வகையில் சக நடிகர்களிடம் ஈகோ இல்லாமல் விட்டுக்கொடுத்து நடிப்பேன். இதுமாதிரி ஒட்டுமொத்த படத்துக்கும் நல்ல பெயர் வாங்கிக்கொடுக்கும் எந்த பாத்திரமாக இருந்தாலும் நடிக்க நான் தயார்.

அப்பாஸ், மாதவன் மாதிரி ஆரம்பத்தில் உங்களுக்கும் சாக்லெட் பாய் என்ற முத்திரை இருந்ததை நினைத்து கவலைப் பட்டிருக்கிறீர்களா?

சாக்லெட் பாய் என்றில்லை ரொமாண்டிக் நாயகன் என்கிற முத்திரை இருந்தது. நிச்சயமாக அதை நினைத்துக் கவலைப்பட்டிருக்கிறேன். நடனமாடுவதும் சண்டை போடுவதும்தான் நாயகன் என்று நினைத்த காலத்தை கடந்துதான் வந்திருக்கிறேன். பாலசந்தரின் 'புதுப்புது அர்த்தங்கள்' படத்தை இப்போதும் பார்க்கிறவர்கள், "சார் என்ன பிரமாதமா நடிச்சிருக்கீங்க" என்று பாராட்டுவார்கள். ஆரம்பத்தில் நான் நடித்த படங்கள் தொடர்ச்சியாக நூறு நாட்கள் ஓடிய படமாக அமைந்திருக்கிறது. ஆனாலும், ரொமாண்டிக் நாயகன் என்பதைத் தாண்டி என்னை யாரும் யோசிக்கவில்லை. அந்த முத்திரையை உடைக்க எனக்கு நிறைய காலமானது. மலையாள சினிமாவில் மிகப் பெரிய அங்கீகாரமாக நினைக்கும் 'டிரண்ட் செட்டர் விருது' எனக்கு கிடை த்திருக்கிறது. ரகுமானால் நடிக்க முடியுமென்று என்னை நம்பிய இயக்குநர்களாலும் தான் அந்தச் சாதனை சாத்தியமாகியிரு க்கிறது.



உங்களின் கனவு கதாபாத்திரம்?

அப்படி லட்சியப் பாத்திரம் எதுவும் இல்லை. ஆனால் நகைச்சுவை பாத்திரம் மற்றும் அதிரடியான ஆள் பாத்திரங்களில் நடிக்கும் ஆசை இருக்கிறது.

இத்தனை வருடங்கள் சினிமா பயணத்தில் நீங்கள் நடிக்கத் தவறியதாக கவலை கொள்ளும் இயக்குநர்?

மணிரத்னம். பாலசந்தர் படத்தில் நடிப்பதற்கு முன்னால் மணிரத்னம் படத்தில் நடிக்க என்னைக் கூப்பிட்டார். அப்போது அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை. கை நழுவிப் போன அந்த வாய்ப்பு கைகூடும் ஒரு நாள் வராதா என்று இப்போதும் நினைப்பதுண்டு.


உங்களுக்குப் பிடித்த ரசிகர், விமர்சகர்?

என்னுடைய குடும்பத்தினர்தான். பெரிய மகளுக்கு 21 வயது ஆகிறது. அவளுடைய பொழுதுபோக்கே சினிமாதான். உலக சினிமா அறிவும் இருக்கிறது. என்னுடைய பாத்திரம், வசன உச்சரிப்பு, நடிப்பு எல்லாவற்றையும் பற்றி நிறைய விமர்ச்சிப்பாள். இன்றைய தலைமுறையின் கருத்து, அவர்களுடைய விருப்பம், ரசனை எல்லாவற்றையும் தெரிந்துகொள்வதற்கான ஒரு வழியாக எனக்கு அவள் இருக்கிறாள். மேலும், அவளுடைய விமர்சனத்தை ஒரு பொக்கிஷமாகவே நினைத்து நான் ஏற்றுக் கொள்வேன்.

உங்கள் குடும்பம்?

மனைவி, இரண்டு மகள்கள். குடும்ப வாழ்க்கை அவ்வளவு மகிழ்ச்சியாக சென்று கொண்டிருக்கிறது.

## கானங்களில் மயங்கும் இதயம்



மீரா - ஜேர்மனி

தளிர்க்கும் அரும்புகள்
குடை விரித்த ஆர்வங்கள்
விழி தந்த நம்பிக்கைகள்
மலர் மனம் பசுஞ்சோலைவனம்

துள்ளித்தாவும் மானாய்
தத்தித் தவிக்கும் ஆசைகள்
கார்முகில் விலகிய களமாய்
கானங்களில் மயங்கும் இதயம்











அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
மருந்தும் விருந்தும் 3 நேரம்.
ஐபொட் அகிலாண்டேஸ்வரி செய்திச் சிதறலுடன் உலகர் வீட்டினுள் நுளைந்தா.. இலங்கையில் மட்டக்களப்பு பகுதியில் முஸ்லிம்களின் முக்கிய தினத்தில் பரிமாறப்பட்ட உணவில் நஞ்சு கலந்திருக்காம். கனபேருக்கு சுகமில்லையாம். 3 பேர் இறந்து போச்சினமாம்.
400 பேருக்குமேலை ஹொஸ்பிற்றலிலையாம் என சொல்லி முடிக்குமுன்... எண்ணைச் செலவொழிய பிள்ளை வளர்த்தியில்லை எண்டு சொன்னது போல என பழமொழியுடன் தொடங்கினா ஆட்டிலறி அன்னம்மா.



ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் அறிவிச்சு றோட்டு முழுக்க ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்.
தேர்தல் திகதியை ஏன் தள்ளிப்போட்டவை எனக் கேட்டா செக்கன்ட்புளோர் செல்லம்மா. மதுக்கடைகளைப் பூட்டுவோம். லஞ்சம் கறுப்புப்பணத்தை ஒழிப்போம் என்ற தேர்தல் பிரசாரத்துடன் மதுப்போத்திலும் லஞ்சப்பணமும் குடுக்கினமாம் கன இடத்திலை வோட் பண்ணச்சொல்லி, பாகுபலி சாறி எல்லாம் குடுக்கினமாம். என நேரடி ஒலிபரப்புப்போல சொல்லிக்கொண்டிருந்தா.



ஆட்டிலறி அன்னம்மா முடிக்கமுதல் ஐபொட் அகிலாண்டேஸ்வரி தொடங்கினா... உலகண்ணை யு..நோ..வட்..... சிலவேளை ரமில் நாடு அரசை கலைக்கப்போயினமாம் எனும்போது ஏற்கெனவே கலைஞ்சுபோய்தானே கிடக்கு என சொல்லிச் சிரிச்சா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

WhatsApp

### வட்ஸ்அப் வரதர்...

கதவு திறக்கும் சத்தம்... அதனையும் விட வேகமாக மூக்கைத்துளைக்கும் சென்ற் வாசனை... எல்லோரும் திரும்பிப்பார்க்க ஹப்பி நியூ இயர் உலகண்ணை என்றபடி தாமோதரம் வர.. எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.



சிங்கப்பூர் சேட் மினுங்கும் கை சங்கிலி....
தாமோதரம் எப்ப வந்தனி? போன் அடிக்காமல் வந்திட்டாய் என்றபடி உலகர் எழுந்து தாமோதரத்திற்குக் கிட்டப்போய் வா..இரு..என்று சொல்லும்போது...பக்கத்தில் நின்றவரை அறிமுகமில்லா விட்டாலும் வாங்கோ இருங்கோ என உலகர் சொல்ல (எதிர்கொண்டழைப்பதும் இன்முகத்துடன் வரவேற்பதும் தமிழன் பண்பு)

ஓ!...வரதண்ணை..வாங்கோ இருங்கோ என்று சொல்லிவிட்டு உலகரின் காதுக்குள் சிங்கப்பூரிலை 6 மாதம் நிக்கேக்கை பழக்கம். வட்ஸ்அப் வரதர் என்றுதான் அவற்ரை ப்றன்ட்ஸ் கூப்பிடுறவை.



எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாலும் தாமோதரமும் உலகரும் கதைப்பதை கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டிருந்த செக்கண்ட்புளோர் செல்லம்மா... என்ன வட்ஸ்அப் வரதரோ... என்று பெலத்து சொல்லும் பொழுதே வரதர் மாறி மாறி படங்கள் எடுத்துக் கொண்டிருந்தார்.



வழக்கமாக சிறை செல்லும் பொழுது சசிகலாவைப்போல் முகத்தை வைத்திருக்கும் ஆட்டிலறி அன்னம்மா தேர்தலுக்கு விண்ணப்பித்த தீபாபோல் சிரித்துக்கொண்டு இருந்தா.

ராசம்மாவும் செக்கண்ட் புளோர் செல்லம்மாவும் ஹேவிளம்பி வருடப்பிறப்புக்கு விசேடமாகச் செய்த அதாவது இனிப்பு உப்பு கெட்ட கொழுப்புகளில்லாத எண்ணையில் செய்த பலகாரங்களை விநியோகிக்கத் தொடங்க செக்கண்ட் புளோர் செல்லம்மாவின் போன் கதறியது.

தாங்யூ..தாங்யூ....சேம் ரு யு.....எப்ப பாத்தநீங்கள் இப்பவோ... ஓ..நான் பச்சை சாறி-யோடை கையிலை றே..வைச்சிருக்கிறனோ?....வேட்டியோடை...ஓ..அது உலகண்ணை..என மெதுவாகச் சொல்லிக்கோண்டு வட்ஸ்அப் வரதரைப் பார்க்க, வரதர் படங்கள் லோட்பண்ணுவதில் பிஸியாக இருக்கிறார். என்ன செல்லம்மாக்கா இப்ப எடுத்த படங்களெல்லாம் இண்டைக்கு வரதண்ணை வட்ஸ்அப்பிலை லோட் பண்ணிப்போடுவார். செக்கண்ட்புளோர் செல்லம்மா சிரித்துக் கொண்டு சொன்னா ஏற்கனவே லோட் பண்ணிப்போட்டார். ஜேர்மனியிலை இருந்து அக்காவின்ரை மகள் அடிச்சவ வட்ஸ் அப்பிலை நான் றேயிலை வைச்சிருந்த வடையெல்லாம் பாத்தவவாம்... தான் பேஸ்புக்கிலை போட்டு 1012 லைக் வந்திருக்காம். ஆர் வரதர் எண்டு பிள்ளை கேட்டது என சொல்லும்போது... வரதர் உலகரை பல கோணத்தில் படம் எடுத்துக்கொண்டிருந்தார்.



சிரியாவுக்கு அமெரிக்கா குண்டு வீசியிருக்கு. றொனால்ட் ட்றம் தன்ரை சினேகித நாடுகளுக்கு அடிச்சு கதைச்சுப்போட்டுத்தான் தாக்கச்சொல்லிருக்கிறார் என்று சொல்ல...வீடு கொழுத்துகின்ற அரசனுக்கு கொள்ளி-கொடுக்கிற மந்திரிகள் என முணுமுணுத்தா ஆட்டிலறி அன்னம்மா....

றொறன்ரோவில் மிதமிஞ்சிய மதுபோதையால் இருவர் உயிரிழந்துள்ளனர்.




இன்று சர்வதேச ரீதியில் நடைபெறும் தீய செயல்கள், வன்முறைகள், கொலைகள், தற்கொலைகளுக்கு மது முக்கிய பங்கு வகிக்கிறது. கனடாவில் கஞ்சாவும் பாவனைக்கு வந்தால் வேதனை அதிகரிக்கும்.


கடந்த வருடம் கனேடிய பூர்வீகக்குடிகள் மத்தியில் ஏற்பட்ட தற்கொலைகளுக்கு மிதமிஞ்சிய போதை வஸ்துக்களே காரணம் என அறிவித்தது குறிப்பிடத்தக்கது.
மீண்டும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவின் ரெலிபோன் கதறியது.

'நான் ரொம்ப பிஸி... பாடல் வானொலியில் ஒலித்துக்கொண்டிருந்தது.




ஞாபகம் இருக்கிறதா.....? ஏப்பிரல் 15...30

16. முதலாவது உலகத்தமிழாராச்சி மாநாடு கோலாலம்பூரில் நடைபெற்றது.



16. உயிர்த்த ஞாயிறு.


17. பெஞ்சமின் பிராங்லின் நினைவு தினம்.



19. சால்ஸ் டாவின் நினைவு தினம்.

19. அன்னை பூபதி நினைவுதினம். (1988) ஈழப்போராட்டத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தவர்.

21. பாவேந்தர் பாரதிதாசன் நினைவு தினம். இயற்பெயர் கனக சுப்பு ரத்தினம் 1891-1964.



23. வில்லியம் சேக்ஸ்பியர் நினைவுதினம்.

26 தந்தை செல்வா எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழரசுக்கட்சித் தலைவர் நினைவு தினம் (1898-1977)

27. ஈழத்து மூதறிஞர் கந்தமுருகேசனார் பிறந்ததினம். (1902-1965)

29. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்ததினம் (1891)


30. அடொல்வ் ஹிட்லர் மறைவு.

---

# தானம் செய்




உயிர் உள்ளவரை தான் உள்
உடல் உறுப்புகள் யாவும்
உனக்கு உதவும்
மனிதனே கேள் உனக்கு
மரணம் சம்பவித்தால் யாவும்
மண்ணுக்கே உதவும்
உலகத்தில் வாழும் பல்லின
ஊனமுற்ற மனிதருக்கு நீ
உதவ முடியுமல்லவா?
மனதார உணர்ந்து எதையாவது
மண்ணோடு போகவிடாது
மனிதனுக்கு உதவ தானம் செய்
வழி உண்டு நீ மரணிப்பதற்கு முன்
வழமாக வாழும் வேளை
விரும்பிய உறுப்பை தானம் செய்
தான தர்மம் செய்ய உனக்கு
தந்த வசதி இல்லாவிடிலும் உறுப்பை
தானம் செய்வது இலகு
விழி கொடுத்து உதவு இல்லை
விதை கொடுத்து உதவு நீ விரும்பும்
மரணித்த போது உனது உறுப்பை
மருத்துவர் வந்து எடுத்து பாதுகாத்து
மாற்று உறுப்பு வேண்டுவோர்க்கு
பொருத்துவார்
மண்ணில் நீ மரணித்தாலும் உன்
உறுப்பு உலகத்தில் எங்காவது
உயிர் பெற்று உலாவும்
தானங்களில் சிறந்ததோர் தானம்
உறுப்பு தானமும் ஒன்றே
எனவே தவறாமல் செய்யுங்கள்
உறுப்புத்தானம்



கவிநாதம் பரந்தாமன்



# ஸ்ரீ பிரகதி சித்தா மூலிகைச் சிகிச்சை நிலையம்

**OVER 10,000 YEARS OLD TRADITIONAL SYSTEM OF TAMIL MEDICINE.**

இது ஒரு பதினெண் சித்தர்களின் பாரம்பரிய அனுபவ சித்த வைத்தியசாலை சித்தர் பெருமக்களின் அதி சூட்சுமமான ஏட்டு சுவடியின் மூலம் பெறப்பட்ட பாரம்பரிய அனுபவம் மிக்க சிறந்த வைத்திய முறையில் தயாரிக்கபபட்ட மருந்துகள். எந்த பக்கவிளைவுகளும் இல்லாதது.

**வர்ம முறையிலும், மருந்தில்லா மருத்துவ முறையிலும் சிகிச்சை அளிக்கப்படும்.**

**சித்தர்களின் பழங்கால முறையில் ரசமணி, ரசலிங்கம் செய்து தரப்படும்.**

தைரொய்ட், சிறு நீரகம், காசநோய், கர்ப்பப்பை நீர்க்கட்டி, குழந்தையின்மை (கர்ப்பம் தரிப்பதற்குரிய தடைகளை நீக்குவது), மாதவிடாய் சம்பந்தமான பிரச்சனைகளுக்கும், ஆண், பெண் மலட்டுத்தன்மையை சரி செய்ய, சிறுநீரகக் கல்லடைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூளைக் கட்டி (Brain Tumour), புற்று நோய், வெண் புள்ளி (Vitiligo) கிட்னி (Kidney) சம்பந்தப் பட்ட அனைத்துத் தீர்வுக்கும்,

மூட்டுவலி, மூட்டுத்தேய்மானம், இடுப்புவலி, நாரிப்பிடிப்பு, நாட்பட்ட முதுகுத்தண்டுவலி, கழுத்து வலி, எலும்புத்தேய்வு, தோல்வியாதி, சொரியாசிஸ் (Psoriasis) முற்றிலும் குணமாக்க, 96 விதமான கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான நிரந்தரமான தீர்வு காண,

காது சம்பந்தப்பட்ட நோய்களுக்கான தீர்வு காண, சக்கரைப் புண், மாறாத படுக்கைப் புண், தீப்புண் குணமாக, ஒற்றைத்தலைவலி, நீரிழிவு, ஆஸ்த்துமா, மூலநோய், மலச் சிக்கல், முடி உதிர்தல், வழுக்கை விழுவதைத்தடுக்க, தூக்கமின்மை, இரத்தமுத்தம், ஆண்மைக்குறைவு, பௌத்திரம், பலவீனமான ஒல்லியான உடம்பை நல்ல ஆரோக்கியமாக ஆக்கிக் கொள்ள, முரசுகரைதல், உடல் எடை குறைத்தல், குடற்புண், நரம்பு வாதம் (varicose vein) அனைத்து நோய்களுக்கும் தீர்வு காண அழையுங்கள்...





**நிவாரணம் பெற அழையுங்கள்**

**PREMI.S.**

பாரம்பரிய சித்த வைத்தியர் (ராஜவைத்தியம்), இரசவாதி

Hereditary Siddha Practitioner (Royal Physician Treatment), Spagyric Alchemist (CAN)
Siddha System of Medicine (IND), DHMS (IND),
Natural Medicine Practitioner© (CAN)

**PHONE: (647) 278 - 3100**

Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

**80 NASHDENE ROAD, # 28B, SCARBOROUGH, ON, M15E4.**

**Proudly Sponsored By:** Yogic Health & Food Bank / www.sivarppanamfoundation.org

# BRAND NEW HOMES FOR SALE

**Peterborough $489,900**



Bedrooms:2 | Washrooms:2

**Beaverton $499,900**



Bedrooms:4 | Washrooms:4

**Wasaga Beach $389,990**



Bedrooms:3 | Washrooms:3

**Lindsay $699,000**



Bedrooms:3 | Washrooms:2

**Georgina $459,900**



Bedrooms:3 | Washrooms:3

**Oshawa $609,990**



Bedrooms:2 | Washrooms:1

**மேலும் Lindsay ல் 8 புதிய வீடுகள் விற்பனைக்கு உண்டு.**

1st ,2nd Mortgages Available up to 1 Million



**A. ANTON JEEVA** FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com | www.newcondoproject.ca/com

RE/MAX Dynasty Realty Inc., Brokerage Independently Owned And Operated
8 Shedlock Street, Markham, ON L3S 3K9
Bus: 905-471-0002 Fax: 905-471-7441

# MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

# JRS AUTO TECH

**OPEN 7 DAYS A WEEK**
9am-11pm

VISA

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS

NEW TIRES FROM
$99
USED TIRES FROM
$49.95

## FREE OIL CHANGE WITH RUST PROOFING

$99 Car
$120 SUV

## BRAKE JOB

STARTING FROM
$199

## WATER PUMP TIMING BELT & LABOR

STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol

REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95

## TRANSMISSION FLUSH

*Starting From…*
*Imports*
*$74.95*
*Radiator Flush*
*$79.95*
*Domestic*
*$149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS

CHECK

LEXUS

FREE DTC Code Run and Inspection

# 2655 Lawrence Ave. East, Unit 5

(Midland & Lawrence, rear of the building)

**CALL SUBAS DIRECT → 416-206-9489**

**Tel: 416-628-4399**

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963


IP
IP GOLDHOUSE LTD.
Design your dreams with us
AKSHAYA TRITIYA
Bring you prosperity and joy
எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
STONE JEWELLERY
$50 Per Gram.
PRE-BOOKING OFFER
நகரின்மத்தியில் தரமுயர்ந்த 22 கரட் தங்கநகைகள்
மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் ஒரே இடம்
எம்மிடம் நகை வாங்குபவர்களுக்கு ஒரு காதணி இலவசம்!
PLATINUM, ROSE GOLD WHITE GOLD
YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
Design by Print Sonic
I.P SILVERHOUSE
I.P GOLDHOUSE
40 New Delhi Drive Unit 56
Markham ON. L3S 0B5
Tel: 905-554-5890
E-mail: ipsilverhouse@hotmail.com

